256

# சக்தி

மாத வெளிய...



சுபானு ஞூ

கார்த்திகை மீ

-/8

**கதைகள்**

ஆவித்த படம்

வேஷதேடிய ரங்கன்

திருடனின் கடிதம்

ஏசு ஜனனம்

★

**வரலாறுகள்**

கர்மவீரன் கரிபால்டி

பாரதி தர்சனம்

★

**கட்டுரைகள்**

பால் பசு

காசி யாத்திரை

கிறிஸ்துவும் - உலகமும்

★

**பாடல்கள்**

பட்டம்

இன்ப உலகம்

2566
16 FEB 1944


உத்தரவாதமுள்ள
நவீன நாகரீக
கைத்தறி
லுங்கி
&
ஷர்டிங்
துணிகளுக்கு
சங்கு மார்க்
TRADE MARK
முகம்மது அபூபக்கர் & கம்பெனி
நூல் & கைநெசவு கைலி வியாபாரிகள்
95 தம்பு செட்டி தெரு
ஜ. டி. மதறாஸ்
கல்கத்தா: 65/11-12, லோயர் சிட்பூர் ரோடு
மதுரை: "சங்கு வஸ்திராலயம்", 84, கீழ வெளி வீதி
Telegrams: "CHANKMARK"



HIS MASTER'S VOICE

ஸ்ரீமதி. எம். எஸ்.

# ஸுப்புலக்ஷ்மியின்

புதிய "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டு

கண்ணெடுத்தாகிலும்
சிம்மேந்திரமத்திமம்—2 பாகங்கள் } N. 18218

H. SAMUEL

நீண்ட காலம் உபயோகிக்கக் கூடிய
"எச். எம். வி." ஹை பிடெலிடி ஊசிகள்.
ஒரு ஊசியினால் பல ரிகார்டுகளைப் பாட வைக்கலாம்.
10 ஊசிகளடங்கிய பாக்கட் 1-க்கு விலை ரூ. 2-4-0.




மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்

S. கண்ணன் & Co.

திருச்சிறுப்பள்ளி

சுபானு
மலர் 9

# சக்தி

கார்த்திகை
இதழ் 3

18 FEB 1944

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே !

## கிறிஸ்துவும் உலகமும்

கிறிஸ்துமஸ் வருகிறது. உலகெங்கும், கிறிஸ்தவர்களின் புனித நாள் அது. எங்கும் கிறிஸ்தவர், மகிழ்ச்சிக் குதூகலங்களில் திளைப்பார்கள். உலகில் தோன்றிய மகா புருஷர்களில் ஏசு கிறிஸ்துவும் ஒருவர். அவருடைய உபதேசங்கள், உத்தம மார்க்கத்தைக் காட்டும் மணி மொழிகளாகும். மனித குலத்தின் ரட்சிப்புக்காக, தம் உயிரையே துறந்த மகா தியாகி அவர். அவர் பிறந்த நாள் கொண்டாட்டம், எங்கெங்கும் நடைபெற வேண்டியது தான். எந்த நோக்கோடு? கிறிஸ்துவின் உபதேசங்கள் எந்த லட்சியத்தைச் சுட்டிக் காட்டினவோ, அவருடைய ஜீவியம் எந்த லட்சியத்துக்காக அர்ப்பணம் செய்யப்பட்டதோ, அந்த லட்சியத்தை ஞாபகப் படுத்திக் கொள்ளும் நோக்கோடுதான். கிறிஸ்துவர் மட்டுமல்ல; மற்ற எந்த மதத்தினராயினும், உலகின் சகல மக்களுமே, கிறிஸ்துவின் வாழ்க்கைத் தத்துவத்தைச் சிந்தித்துப் பார்ப்பது நலமாகும்.

கிறிஸ்து தோன்றி, சற்றுக் குறைய இரண்டாயிரம் வருஷங்களாகி விட்டன. சின்னஞ் சிறு பிரதேச மொன்றில்தான், அவர் உபதேசித்தார். ஆனால், அவரைப் பின்பற்றிய சமயம், இன்று உலகெங்கும் சூழ்ந்து பரவி யிருக்கிறது. கிறிஸ்துவ ராஜ்யங்களே, இன்று 'நாகரிக' முன்னணியில் நிற்கின்றன. தனிப்பட்ட கிறிஸ்துவர்களின் வாழ்வு, குணச் செம்மையும் பண்பாடும் நிறைந்திருக்கலாம்; ஆனால், 'கிறிஸ்துவ' சாம்ராஜ்யங்களுக்கும் கிறிஸ்து தத்துவத்துக்கும், ஏதாவது தொடர் பிருக்கிறதா?

ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகை சமயத்தில், கவிஞர் தாகூர், நியூயார்க் நகரில் இருந்தார். அங்கே நிகழ்ந்த கோலாகலங்களைக் கண்டபோது, அவர் உள்ளம் வறண்டுவிட்டது. தீனபந்து ஆண்ட்ரூஸுக்கு ஒரு கடிதத்தில் அவர் எழுதினார்: "ஹிமாலயப் பொய்கையிலிருந்து வந்த காட்டன்னம் ஒன்று, எல்லையற்ற சஹாராப் பாலைவனத்திலே சிக்கியதைப் போல், நான் தவிக்கிறேன். பாலைவன மணல், பளபளவென்று தான் மின்னுகிறது; நாச மின்னல். ஆனால், ஜீவ

நீரைக் காணோம்; ஆத்மா வாடுகிறது'' என்று மனம் புழுங்கினார் கவியரசர். உலகம் முழுதுமே இன்று, மக்களின் நிலை இப்படித்தானே இருக்கிறது? காரணம் என்ன? தர்ம மார்க்கத்தில், மனிதர்களுக்கு நம்பிக்கை போய்விட்டது; மனிதனை வெறும் பொருளாதாரப் 'பூச்சி' என்று கூடப் பலர் மதிக்கத் தொடங்கி விட்டார்கள். தர்மம் என்பது பைத்தியக்காரத்தனம் என்ற எண்ணமும் நமக்கு உண்டாகியிருக்கிறது.

ஏசு சொன்னார், ''உன்னைப் போலவே உன் அயலானையும் நேசி'' என்று. ''நேசமா! அதெப்படி முடியும்? நான் தூங்கினால், அவன் என்னை விழுங்கி விடுவான். அவன் தூங்கினால், நான் அவனை விழுங்கி விடுவேன். எங்கள் இருவரையும் கொஞ்சம் தூங்க வசதி செய்திருப்பது, ராஜாங்கச் சட்டந்தான்'' என்று நாம் நினைக்கிறோம். சட்டங்களும் தண்டனைப் பயமும் இல்லாவிட்டால், உலகில் அதர்மத்தைத் தவிர வேறு எதுவுமே நடக்காது என்பது நமது மனோபாவம். அவ்வாறானால், முன்னேற்றம், நாகரிகம் என்கிறோமே; அதெல்லாம் சுத்தப் புரளிதானா? 'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்று, பழி வாங்கும் தத்துவத்தைக் கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாடு சொல்லியது. ஏசுவோ, அதை மாற்றி, ''உன் அங்கியை அபகரித்தவனுக்கு உன் அங்கவஸ்திரத்தையும் கொடு'' என்றார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' அல்ல; 'பகைவனுக் கருள்வாய், நன்னெஞ்சே; தத்துவம்.

'தீமையை எதிர்க்காதே' என்று கிறிஸ்து உபதேசித்தார். அண்டங்களை ஆட்டிவைக்கும் தத்துவம் ஆகர்ஷண சக்தி; அதேபோல், மனித குலத்தை நடத்தி வைக்கும் மகா தத்துவம் அஹிம்சா தர்மம் என்று மகாத்மா காந்தி சொல்லுகிறார். நாம் இரண்டையும் நம்பவில்லை. ''தத்துவமெல்லாம் சரிதான். இன்றைய உலகில் இது எங்கேயாவது நடக்குமா?'' என்று சொல்லி விடுகிறோம். விமானத்திலே வந்து குண்டு போடுகிறவனிடம், நமது அஹிம்சா தர்மம் எப்படிப் பலிக்கும் என்கிறோம். இன்றைய நிலையில் எதுதான் பலிக்கும் என்றே தெரியவில்லை. நம் எல்லோருடைய மனோபாவமும் இப்படியிருக்கிற வரையில், ஒன்றுமே பலிக்காது. இன்று உங்கள் கை ஓங்கினால், அடுத்த வீட்டுக்காரனை அமுக்குகிறீர்கள்; நாளைக்கு அவன் கை ஓங்கினால், உங்களை அமுக்குகிறான்—இதுதான் உலகமா? இதுவேதான் வாழ்க்கையா?

''ஓ, சட்டங்களைச் செய்து விடுகிறோம்; தண்டனைகளை விதிக்கிறோம். தானே எல்லாம் ஒழுங்காகி விடுகிறது'' என்று சொல்லலாம். சட்டம் தர்மத்தை ஸ்தாபிதமா செய்கிறது? அதர்மத்தைத்தான் தண்டிக்கிறது. அதர்மம் தோன்றாதபடி செய்வது எது? அது தர்ம மனோபாவம்தான்; கருணை, நியாயம், மானம் முதலிய உணர்ச்சிகள்தான். 'இல்லை, இல்லை; தண்டனைப் பயம்தான்' என்று சொல்வது, மனித குலத்தையே அவதூறு சொல்வதாகும்; அபவாதமுமாகும். வெறும் தண்

தோன்றாமல் தடுக்காது; சட்டத்தை ஏமாற்றும் வழிகளைத் தான் தேட முயலும். ஓர் ஒழுங்கு பாட்டுக்காகச் சட்டங்கள் தேவைதான். ஆனால், அந்தச் சட்டங்களுக்குப் பின் பலம், பொது நல உணர்ச்சி கொண்ட தர்ம மனோபாவந்தான். அந்த மனோபாவத்தை வளர்ப்போர், காந்தி போன்ற உத்தமர்கள்தான்; கிறிஸ்து போன்ற மகான்கள்தான்.

கிறிஸ்து தர்மம் உலகிலே வேரூன்றி யிருக்குமானால், இன்று உலகில் கோர யுத்தம் நடக்குமா? அதுவும், கிறிஸ்துவ நாடுகளுக்குள்ளே? "உலக மக்களுக்கெல்லாம் தந்தை கடவுள் என்கிறார் கிறிஸ்து; கடவுளின் நாமத்தையே மாசுபடுத்துகிறது யுத்தம். மக்களின் ரட்சிப்புக்குப் பாடு பட்டார் [illegible]வைப் போதிப்பது சுவிசேஷம்; யுத்தம் அதை மறுக்கிறது. மனிதனை அமரத்துவம் கொண்டவனாய் மதிக்கிறது சுவிசேஷம்; அசுரத்தன்மைகள் தலை விரித்தாடும் அர்த்தமற்ற உலகிலே, தனித்த, திக்கற்ற, செயலற்ற ஓர் அற்பத் தூசி என்று மனிதனைப் பாவிக்கிறது யுத்தம்" என்று, சிசெஸ்டர் பிஷப் கூறுகிறார். இந்த கோர யுத்தம் எப்போது முடிந்து தொலையும் என உலகெங்குமே எளிய மக்கள் இன்று கண்ணீர் விட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். 'சமாதானம் செய்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆண்டவனின் குழந்தைகள் என அழைக்கப் படுவார்கள்' என்று ஏசு கூறியுள்ளார். அந்த 'ஆண்டவன் குழந்தை'களை என்று காணப்போகிறோம்?

✲

## விஞ்ஞானி வருந்துகிறார்

செடி கொடிகளுக்கும் ஆத்மா உண்டு என்று தம் ஆராய்ச்சித் திறனால், ஸர் ஜகதீச சந்திரபோஸ் என்ற வங்காள விஞ்ஞான நிபுணர் கண்டுபிடித்தார். இந்த ஆராய்ச்சி முடிபுகளைக் கண்டு விரிவான ஒரு கட்டுரை எழுதி, சீமை விஞ்ஞானச் சங்கமான ராயல் சொசைட்டிக்கு, 1901-ஆம் ஆண்டு அவர் அனுப்பினார். அந்தச் சங்கத்தில் இருந்த விஞ்ஞான நிபுணர்கள், இந்தக் கட்டுரை சரியா, தவறா, என்று ஓட்டு மூலம் முடிவு செய்தார்கள். ஒரே ஓர் ஓட்டினால், கட்டுரை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

போஸை 1914-ஆம் ஆண்டு இந்திய சர்க்கார் சீமைக்கு அனுப்பினார். அங்கே தற்காலிகமாக ஒரு சிறு ஆராய்ச்சிக் கூடத்தை, போஸ் அமைத்துக் கொண்டார். பிராணி ஆராய்ச்சி நிபுணர் ஒருவர், அதை வந்து பார்த்தார். பார்த்ததும், அவருக்குப் பிரமிப்புண்டாயிற்று. போஸை நோக்கி, "உங்கள் கட்டுரை, யாருடைய ஓட்டினால், ராயல் சொசைட்டியில் நிராகரிக்கப்பட்டது தெரியுமா? என் ஓட்டினால்தான். நான் தவறு செய்தேன். நீங்கள் எழுதியிருப்பதெல்லாம் சரி என்று இப்போது ஒப்புக்கொள்கிறேன்" என்றார். பாட்ரிக் கெட்டீஸ் என்பவர் இந்தச் சம்பவத்தை எழுதியுள்ளார்.

**பாதிக் கல்யாண சங்கதி:** சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் மூவரும் வெகு சீக்கிரத்தில் சந்திக்கப் போகிறார்களாம். எதற்கு? ஹிட்லர் திடீரென்று ஓடிவந்து சரணாகதி செய்து விட்டால், என்ன செய்வது என்று யோசிப்பதற்காகவாம். அப்படிச் சரணாகதி செய்தால், முன் ஜாக்கிரதையா யிருக்க வேண்டாமா? எப்படி யெல்லாம் சமாதான நிபந்தனைகள் விதிப்பது என்று யோசித்து முடிவு செய்யப் போகிறார்களாம். இப்போதே, ஜெர்மன் நாஜிகள், சமாதானத்துக்கு ஆழம் பார்க்கிறார்களாம். இந்த நாஜிகளின் சமாதான சமிக்ஞைகளையும் அம்மூவரும் ஆலோசிப்பார்களாம். அது திருப்திகரமா யில்லாவிட்டால், தங்கள் சமாதான நிபந்தனைகளை, ஜெர்மன் மகா ஜனங்களுக்கே இவர்கள் அறிக்கை செய்து விடுவார்களாம். எனவே, பாதிச் சமாதானம் முடிந்தாற்போல் தான். ஹிட்லர் வந்து சரணாகதி யடைய வேண்டியதுதான் பாக்கி. உடனே, சமாதானம் பரிபூர்ணமாகி விடும். ஆனால், தான் ராஜாத்தியை மணக்க விரும்பிய உடனே, பாதிக் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது என்றானாமே ஒருவன்; அந்தக் கதையாக மாத்திரம் இது போய்விடக் கூடாது என்பதே நம் கவலை.

* * *

**லெபனான் மர்மம்:** சர்வ தேசச் சங்கத்தின் அதிகாரம் பெற்று, பிரஞ்சுக்காரர் ஆண்டு வருவது லெபனான். போர் மூண்டது. பிரான்சு குலைந்தது. லெபனானுக்குச் சுதந்தரம் அளித்துவிடப் போவதாக, பிரஞ்சுத் தளபதி காட்ரூ வாக்களித்தார். இப்போது லெபனான் தேசிய வாதிகள் தேர்தலில் வென்றார்கள். அவர்களுடைய மந்திரி சபை, ஒரு சுதந்தர அரசியல் சட்டத்தைத் தயாரிக்க முனைந்தது. அதெப்படி முடியும் என்று உறுமினார்கள் பிரஞ்சுக்காரர்கள். லெபனான் குடியரசுத் தலைவரையும் மந்திரிகளையும் சிறைப்படுத்தினார்கள். 'ஆஹா! போச்சே தர்மம்' என்றார்கள் பிரிட்டிஷ்காரர்கள். விடு அவர்களை; சமரசமாய்ப் போ' என்றார்கள். அப்படியே, அவர்களைப் பிரஞ்சுக்காரர்கள் விட்டு விட்டார்கள். எல்லாம் ராஜியாக அமைதி உண்டாகிவிட்டது. விஷயம் முற்றுப் பெற்றதா? லெபனானின் சூத்திரக் கயிறு பிரஞ்சுக்காரர் கையிலே; பிரஞ்சுக்காரரின் சூத்திரக் கயிறு பிரிட்டன் கையிலே. ஆகவே, யுத்தம் முடியும் வரை லெபனானுக்குச் சுதந்தரம் கிடைக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. யுத்தம் முடிந்த பிறகு, பிரான்ஸிடம் லெபனான் இருக்காது. ஆனால், சுதந்தரமா யிருக்குமா? அந்த விஷயம் ஆண்டவனுக்குத் தான் தெரியும்.

* * *

**காந்திக்கு வேவல் கடிதம்:** "என்னைச் சந்திக்க உங்களுக்கு இஷ்டமா?" என்று கேட்டு, காந்திஜிக்கு வைஸிராய் வேவல் ஒரு கடிதம் எழுதி யிருப்பதாக, விஷயமறிந்த, பொறுப்புள்ள யாரோ சொல்வதாக, ஒரு நிருபர் கூறுகிறார். அவர்கள் பொறுப்புள்ளவர்களா யிருக்கலாம்; நிருபரும் பொறுப்புள்ளவரா யிருக்கலாம். சேதி பொறுப்புள்ளதா யிருக்குமா என்பதுதான் சந்தேகம். சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியான வேவல், சிறையில் கிடக்கும் இந்திய ஏழை மக்களின் தலைவனுக்குக் காகிதம் எழுதுவதாவது என்று ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நன்றாய் எழுதலாம். ஆனால், எழுதுவாரா? எழுதும்படியான நிலைமை வந்தால் அல்லவா எழுதுவார். லெபனானும் இந்தியாவும் ஒன்றா? பிரஞ்சுக்காரரை விரட்ட ஒரு பிரிட்டன் இருந்தது போல, பிரிட்டனை விரட்ட ஒரு பெரிய பிரிட்டன் ஏதாவது இருக்கிறதா? அட பைத்தியக்காரா! ஒரு கைதிக்கு ஒரு வைஸிராய் கடிதம் எழுதவாவது? இது எங்காவது நடக்குமா? அதுவும் இந்தக் காலத்தில்!

# சிவாஜி
# தையல் நூல்

✲

இறக்குமதியாகும்
எந்த 'பிராண்'டையும்
போல் உறுதியும் நம்
பிக்கையானதுமாகும்.

✲

இந்தியாவில் தயாரித்தோர்:

**ஆக்மி திரெட் கோ., லிமிடெட்,**
பாங்க் ஆவ் பரோடா பில்டிங்,
அப்பாலோ தெரு, பம்பாய்.








# டோங்ரே
பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்
பற்கள் வளர
உதவி செய்கிறது


## அறிவிப்பு

இலங்கையில் 'சக்தி' (மாத வெளியீடு) விற்பனை செய்வதற்கு நாளிது டிசம்பர் மாதம் முதல் **பூபதி நிலயத்தார்** (BOOPATHI NILAYAM 224, GRANDPASS, P. O. COLOMBO) சோல் ஏஜண்டாக நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

*1-11-43* சென்னை — சக்தி காரியாலயம்

# புதிய புத்தகங்கள்

அல்லயன்ஸ் :

சரத் சந்திரர் கதைகள் : ரூ. 1 8 0 சந்திரநாத் : சரத் சந்திரர் ரூ. 2 4 0 வஸந்தன் : எஸ். வி. வி. ரூ. 2 0 0 திரு. வி. க. சரித்திரம் : தை. ஆ. கனகசபாபதி. ரூ. 2 0 0

கல்கி :

பார்த்திபன் கனவு : ரூ. 5 8 0.

கலைமகள் :

பச்சைக்கிளி : கி. சந்திரசேகரன் ரூ. 2 0 0 காளியின் கண்கள் : து. ரா. ரூ. 2 0 0 சுயம்வரம் : ரூ. 2 8 0

சக்தி :

ருஷ்யக் கதைகள் : சபரிராஜன் மொழிபெயர்ப்பு ரூ. 4 0 0 காந்தியும், விவேகானந்தரும் : வெ. சாமிநாத சர்மா ரூ. 1 8 0 காந்தியும், ஜவஹரும் ; வெ. சாமிநாத சர்மா 0 8 0 சத்திய வேட்கை : ஆலிவஷ்ரீனர் ரூ. 0 8 0 நிழல்கள் : (நாடகம்) அ. சீனிவாசராகவன் ரூ. 1 8 0 புறநானூறும் தமிழரும் (சொற்பொழிவு) ரூ. 1 8 0

தமிழ்ப் பண்ணை :

அச்சமில்லை : ராஜாஜி ரூ. 0 8 0 அமெரிக்காவைப் பார் : ரஹிம் ரூ. 0 8 0 நாடகமே உலகம் : 'நாடோடி' ரூ. 1 12 0

நவயுகம் :

காதலர் உள்ளம் : (நாவல்) ரூ. 1 12 0 எதிர்கால உலகம் : கு. ப. ரா. ரூ. 1 12 0.

புதுமைப் பதிப்பகம் :

தமிழிசைப் பாட்டுகள் : ரூ. 4 8 0 மாணவருக்கு : காந்தியடிகள் ரூ. 7 8 0

ஜோதி நிலயம் :

பசி : க. நா. சுப்ரமண்யம் ரூ. 1 12 0 அயர்லாந்து : மாரிசாமி ரூ. 1 8 0

அண்ணாமலை பல்கலைக் கழகம் :

தமிழிசைப் பாடல்கள் : 1, 3, 4, 7 தொகுதிகள் ஒவ்வொன்றும் ரூ. 2 0 0

( தபாற் செலவு தனி )

சக்தி காரியாலயம்

261, சைனபசார் சென்னை :: வடக்கு வெளி வீதி மதுரை



# பால் பசு

மு. அருணாசலம்

நாகரிகம் என்பது நகரத்தை யொட்டிய பழக்க வழக்கம். நகரத்தை யொட்டி வளர்ந்து வருகிற நாகரிகப் பழக்க வழக்கங்களின் விளைவாக, காப்பிக் குடியும் தேயிலைக் குடியும் இன்று மிக்க சாதாரண மாகி விட்டது. இதன் பயனாக, பாலுக்குச் சொல்ல முடியாத கிராக்கி. இதை நாம் தினமும் உணர்ந்து வருகிறோம்.

காப்பி முதலான குடிகள் காரணமாக, நகர மக்கள், ஆடவரும் பெண்டிரும் உடல் வலி குன்றி விடுகிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் உடல் திண்மை இல்லாமலிருக்கின்றன. போதாக் குறைக்கு, 'நாகரிக' வாழ்க்கையுடைய தாயினிடத்திலே, தன் குழந்தைக்கு வேண்டிய பால் கிடைப்பது அருமைதான். இதற்காக, தாய்ப் பால் தவிர வேறு பாலையும் தேட வேண்டியிருக்கிறது.

குழந்தைகளுக்குப் பசும் பால் புகட்டுவது பழைய வழக்கம்.

நாகரிகம் முற்ற முற்ற, புட்டிப் பால்களும், புதிய வியாதிகளும் நம் குழந்தைகளைப் பீடிக்கத் தொடங்கி யிருக்கின்றன. தாய்ப்பாலுக்குச் சற்றேறக்குறைய இணையானதென்று நவீன டாக்டர்களே பசும்பாலைப் போற்றுகிறார்கள். அப்படி யிருந்தும், புட்டிப் பால் மோகம் நமக்கு வந்திருக்கிறது. இந்நிலையில் காமதேனு என்று நம் நாட்டில் நெடுங்காலமாய்ப் போற்றி வரப்படும், பால் பசுவைப் பற்றிய ஓர் அருமையான தாலாட்டுப் பாட்டை இங்கே நமக்கு ஞாபகமூட்டி அனுபவிக்கச் செய்கிறார் கட்டுரையாளர்.

ஆனால், எப்படியோ, நகரத்துக் குழந்தைகளுக்கு இந்தப் பசும் பாலைக்கூடச் சீரணிக்கும் சக்தி இருப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். சீரணமாகாத பால் இளங் குழந்தையின் வயிற்றிலேயே தங்கி, வயிற்றில் ஒருவிதக் கட்டியை உண்டாக்கி விடுகிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக் கட்டி குலைக் கட்டி என்றும் ஆபத்தானதென்றும் கருதுகிறார்கள். குலைக் கட்டி நிபுணர் என்று சொல்லிக் கொள்ளும் வைத்தியர் சிலருக்கு இன்று நல்ல பிழைப்பும், இதன் மூலம் ஏராளமான வருவாயும் கிடைத்து வருகின்றன. இதுவுமல்லாமல், பசும் பாலுக்குப் பதிலாகப் புட்டிப் பால் செய்து தகரத்திலும் கண்ணாடியிலும் அடைத்து அனுப்பும் மேல்நாட்டு வியாபாரிகளுக்கு இன்று பெருத்த கொண்டாட்டந் தான்.

இந்த நாகரிக நிலை ஒரு புறமிருக்கட்டும். நாட்டுப் புற வாழ்க்கையிலே பார்த்தால், பசும் பாலைக் கண்டு குழந்தைகளோ, குழந்தைகளைப் பெற்ற தாய்மாரோ அஞ்சுவதாகத் தெரியவில்லை. நாட்டுப் புறத்தாருக்கு, ஏழை உழவனாயினும் சரி, பணக்காரனாயினும் சரி, பசுவே எல்லாவற்றையும் தர வல்ல காமதேனு. ஓர் ஏர் உழவு மாடு இல்லாத உழவனுக்கு, பயிர்த் தொழிலேது; நாட்டுப் புற வாழ்க்கைதான் ஏது? பசு மாடு இருந்ததானால், அது ஈனும் காளைக் கன்றுகள்

பசும் பால், தயிர் மோர் என்றெல்லாம் உணவுக்கும் ஊதியத்துக்கும் ஏற்ற பொருள்கள் கிடைக்கின்றன. பசுவும் கன்றுகளும் காளைகளும் இருந்துவிட்டால், நிலத்துக்கு வேண்டிய சாண எரு, தாராளமாய்க் கிடைத்து விடுகிறது. எனவே, உழவனுக்கு வேண்டியது, நிலத்துக்கு அடுத்தபடி, பசு மாடுதான்.

இவை நிற்க, குழந்தைக்குப் பசும் பால் புகட்ட வேண்டும், பசு வேண்டும் என்பதுதான் இப்போது கவனிக்க வேண்டிய பொருள். ஒரு தாயின் உள்ளம் இப் பொருளை விரித்துச் சுவைபட எப்படி எப்படிச் சொல்லி மகிழ்கிறது என்பதை, இங்கே சிறிது பார்க்கலாம். பார்க்க நமக்குக் கிடைத்துள்ளது ஒரு தாலாட்டுப் பாடல்.

குழந்தை அழுகிறது. அதைத் தொட்டிலிற் கிடத்தி, உறங்க வைப்பதற்காகத் தாய் அருகிலே நின்று கொண்டு மெல்லப் பாடுகிறாள். பாடும்போது, குழந்தை பால் உண்ண வேண்டுமென்று அழுகிறது என்பதாக அவள் மனத்துள் ஒரு கற்பனை எழுகிறது. அந்தக் கற்பனையிலே பாட்டுப் பிறக்கிறது:

பாலா லுடையவனும்
  பசித்தழுதான் நித்திரையில்
பாலா லுடையான்
  பசித்தழுதான் என்று சொல்லிப்
பாற் பசுவைத் தேடிப்
  புறப் பட்டார் உங்களப்பா.

பாற் பசுவைத் தேடிக் கொண்டுவரப் போயிருக்கிறாராம், குழந்தையின் தந்தை. எப்படிப்பட்ட பசுவைத் தேடிச் சென்றார்?

காரம் பசுத் தேடிப்
புல்லேறி மேய்ந்து வரும்
  பெரிய பசுத் தான் தேடிப்
பேருலகு சுற்றி வரப்
  புறப்பட்டார் உங்களப்பா.

பசுவைத் தேடிச் சென்ற தந்தை எவ்வளவோ பணங் கொண்டு சென்றார். குழந்தையின் அம்மான்மாரும் வேண்டிய பணம் தந்தார்கள். ஊரெல்லாம் சுற்றி அவர் என்ன பசுவைக் கொண்டு வந்தார்?

பாற் பசு வாங்கி வரப்
  பணங் கொடுத்தார் அம்மான்மார்
ஊரெல்லாஞ் சுற்றி
  ஒரு பசுவுங் கிட்டாமல்
நாடெல்லாஞ் சுற்றி
  நல்ல பசுக் கிட்டாமல்
காடெல்லாஞ் சுற்றிக்
  காராம் பசுக் கொண்டு வந்தார்.

கொண்டு வந்த பாற்பசு இயல்பாகவே எவ்வளவோ அழகுடையதாய்த் தான் இருக்கிறது. ஆனால், இங்கே, மேலும் அதற்குப் பல அலங்காரங்கள் செய்தாகின்றன. கொம்புக்குக் கொப்பி, கழுத்திலே மணிகள், மணிக் கயிறு, காலுக்குத் தண்டை என்று எத்தனையோ அணி வகைகள் பூட்டுகிறார்கள்.

கொண்டு வந்த பாற் பசுக்குக்
  கொம் பெல்லாந் தங்க நிறம்,
கொம்புக்குக் கொப்பியிட்டுக்
  கோல் விழிக்கு மையெழுதி
விசுகிற கர்துக்கு
  வெண்சா மரையெழுதிச்
சுற்றுகிற வாலுக்குச்
  சுடர்மணிகள் ஏறவிட்டு
முன்கால் இரண்டுக்கும்
  முதலியார் தண்டை யிட்டுப்
பின்கால் இரண்டுக்கும்
  பிள்ளைமார் தண்டையிட்டுப்,
முதுகுக் கழகாக
  முத்துக் கயிறணிந்து
வயிற்றுக் கழகாக
  வயிரங்கள் பொன்னிழைத்து,—

குமா? கொப்பி யிட்ட கொம்பை அசைக்கிறது; தன்னுடைய கோல விழியால் கூர்ந்து பார்க்கிறது;

> கொம்பால் அசைத்திடுமாம்
> கோல்விழியால் பார்த்திடுமாம்,

புதிதாக வந்த பசு சில நாட்களில் நன்ருகப் பழகி விட்டது. ஆற்றங் கரையிலும் சுற்றியுள்ள தோப்புக்களிலும் போய் மேய்ந்து விட்டு வருகிறது. (எல்லாம் தாயின் கற்பனையில்தான்.) 'பாலானுடையான்' பசித் தழுதான் என்று மேலே நாம் கண்டோ மல்லவா? அதற்காக, விரைவிலே அவன் பால் குடிக்க வேண்டுமென்று, தாய் பசுவை அழைக்கிருள்:

> காலமே வா பசுவே—என்
> கண்ணு மகன் பால்குடிக்க;
> பொழுதிருக்க வா பசுவே—என்
> பொன்னு மகன் பால்குடிக்க;
> மலேமேலே மேய்ந்துவிட்டு
> மகுடமணி ஓசையிட்டு
> நேரமிருக்க வா பசுவே—என்
> செல்ல மகன் பால் குடிக்க.

பசுவும் மேய்ந்து விட்டு நேரத்தோடு வந்து விட்டது. இனிக் கறக்க வேண்டியதுதான் பாக்கி.

(நாட்டுப் புறங்களிலே பெரும்பாலும் அந்தந்த வீட்டுக்குரிய பெண்களே பசுவைக் கறந்து கொள்வார்கள். ஆடவர் வயற் புறங்களில் வேறு வேலையில் ஈடுபட்டிருப்பார்களாதலால், அவர்கள் வேலை முடிந்து வந்து மாடு கறப்ப தென்பது அபூர்வம்.)

தாய் பால் கறக்கப் போகிருள். பசுவை அணைந்து கறப்பது வழக்கமல்லவா? கையிலே அணை கயிறும், உட்காருவதற்கான முக்காலியும், பாற் சொம்பும் கொண்டு போகிருள். இவற்றைப்பற்றி யெல்லாம் உல்லாசமாக எண்ணிக் கற்பனையாகச் சொல்லும் போது, இவை எப்படித் தோற்றுகின்றன?

> அணைந்துபால் கறப்பதற்கு
> அணைகயிறும் பொன்னுலே
> உட்கார்ந்து பால்கறக்க
> முக்காலி பொன்னுலே
> சாய்ந்திருந்து பால்கறக்கச்
> சார்மணையும் பொன்னுலே
> பால்கறந்து கொண்டுவைக்கப்
> பாற்பானை பொன்னுலே
> உடன்கறந்த பாலைவைக்க
> உறிகயிறு பொன்னுலே—

பொன்னேடு அவள் இவ்வளவு தூரம் உறவாடிய பின், தன்னுடைய கையும் விரலுமே பொன்னிறமாகத் தோற்றுவதில் வியப்பில்லை:

---

அமெரிக்க ஜனதிபதி கூலிட்ஜ் அவர்களின் மாளிகையில், ஒரு சமயம் ஒருவர் விருந்துண்ண வந்தார்.

குளிர்ந்த பானத்தை, ஒரு கோப்பையிலிருந்து ஒரு தட்டில், ஜனதிபதி ஊற்றுவதை, விருந்தாளி கண்டார். அவருக்கு ஆச்சர்யமா யிருந்தது. இருந்தாலும், மரியாதைக்காக, அவரைப்போலவே தாமும், குளிர்ந்த பானத்தை, கோப்பையிலிருந்து தட்டில் ஊற்றினர்.

பானத்திலே ஜனதிபதி கொஞ்சம் 'ஐஸ்கிரீ'மும் சர்க்கரையும் போட்டார். விருந்தாளியும் அவ்விதமே செய்தார்.

ஜனதிபதி அந்த பானத்தில் ஒரு 'ஸ்பூன்' எடுத்து ருசி பார்த்தார். விருந்தாளியும் அதே மாதிரி செய்ய முயலுகையில், தட்டை ஜனதிபதி தம் நாய்க்குட்டியின் முன் வைத்து விட்டார்! ஜனதிபதி செய்த தெல்லாம் நாய்க்குட்டிக்காக. விருந்தாளியோ!

---

உருவிப்பால் கறப்பதற்கு
ஒருவிரலுந் தங்கநிறம்.

பால் கறந்தாகிறது. இனிப் பாலைக் காய்ச்ச வேண்டியது தான்.

பால்காய்ச்சும் சட்டி
பச்சைநிற மாயிருக்கும்.

ஏன்? பசும் பொன் ஆனமையினலே.

பொன்னின் குழலெடுத்துப்
பொற் கொடியாள் தீமூட்டி,
தங்கக் குழலெடுத்து—உன்
தாயாரும் தீமூட்டி—

(பொற் கொடியாள் என்பது தன்னையே தான். பொன்னைத் திருப்பித் திருப்பிச் சொன்ன தனல் பிறந்த சுகம், தன்னையே பொற் கொடி என்று சொல்லிக் கொள்ளவும் செய்கிறது.)

அடுப்பிலே எப்படி நெருப்பு மூட்டியாகிறது?

வடகடலின் நற்பவழம்
வாரி உமியணைத்து
தென்கடலின் நற்பவழம்
திரட்டி உமியணைத்து
நடுக்கடலின் நற்பவழம்
நடுவே தனல் பரப்பி—

கும் நெருப்பின் ஒளியைப் பார்க்கும் போது, சிவந்த பவழத்தின் நினைவு வராமலிருக்க முடியுமா?)

பரப்பிய தணலிலே, பாற் பானையை வைத்து அதிற் பாலைக் காய்ச்சி யாகிறது; காய்ச்சிய பின் அதை ஆற்றியும் ஆகிறது.

காய்ச்சுப்பால் காய்ச்சிப்-பொன்னின்
பட்டடையில் ஆற்றிவைத்தேன்,

ஆற்றி வைத்த பாலைக் குடிக்கும் படி குழந்தையை வேண்டுகிருள்:

இங்கிகுடி பாக்கியமே
எங்கள் குலம் ஈடேற;
பாலுகுடி பாக்கியமே—உங்கள்
பாட்டனுர் பேர் விளங்க.

('இங்கி' என்பது செல்லமாகப் பாலைக் குறிப்பிட்டுக் கூறுகின்ற சொல்.) இவ்வாருக, உறங்க வைக்க வேண்டிக் குழந்தையிருக்கும் தொட்டிலைத் தாலாட்ட வந்த தாய், தன் கற்பனைத் தாலாட்டுப் பாடலிலே, பசு வொன்றைச் சிருஷ்டித்து அதைக் கறந்து, பாலைக் காய்ச்சிக் குழந்தைக்குப் புகட்டி முடிக்கிருள்.

✲

## புத்தகப் படிப்பு

புத்தகங்களைப் படிப்பதனுல், தெய்வ பக்தி உண்டாகுமா? நாட்டில் இன்னின்ன தேதிகளில் இவ்விவ்வளவு மழை பெய்யுமென்று, வருஷவாரி முன்னறிவிப்பு, இந்துக்களின் பஞ்சாங்கங்களில் குறித்திருக்கிறது. மழையைப் பற்றி இவ்விதம் தெரிவிக்கும் அந்தப் பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால், ஒரு துளி ஜலங்கூட வராது. அதே போல, அநேக நல்ல விஷயங்கள், புத்தகங்களில் இருக்கின்றன. ஆனல், அவைகளைப் படித்தால் மட்டும், ஒருவன் தர்மவான் ஆகிவிடமாட்டான். ஈசுவரனுடைய பிரேமையைப் பெறவேண்டுமானல், அந்தப் புத்தகங்களில் காணும் நன்னெறிகளின்படி நடக்க வேண்டும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

சக்தியின் நிறைவே தெய்வம

ஜன சக்தியை எழுப்பும் புரட்சி சக்திவாய்ந்ததும், நவாப் T. S. ராஜமாணிக்கத்தின் புதிய சக்தியில் உருவானதுமே இந்நவீன நாடகம்.

ஆலப்புழை பகவதி விலாஸ் தியேட்டரில்

**7—12—43** முதல் தினசரி நடைபெறும்

# * ஸ்ரீ ஐயப்பன் *

உரிமை பெற்றது

சபரிமலை ஐயப்பனின் பிரபாவத்தை — கண்கண்ட சக்தியை நேரில் கண்டவர்கள் கேரள மக்கள்.

கேட்டவர்கள் தமிழர்கள்.

எல்லோருக்கும் இன்பமளிக்க, பெரும் முயற்சியால் இப்பொழுது நாடக ரூபகமாக வெளிவந்து விட்டது.



**"காணவிடில், குற்றம் எம்முடையதன்று."**

# சக்தி மலர்

—மாதம் ஒரு புத்தகம்

- அரசியல், பொருளாதாரம், சயன்ஸ், கதை கட்டுரை, கவிதை, இலக்கியம், சரித்திரம், வேதாந்தம், அயல்நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில்—இவைகள் தனித்தனியே ஒவ்வொரு தமிழ் மாத முதல் வாரத்திலும் வெளிவரும், [ஆங்கிலத்தில் வெளியாகும் 'பெங்குவின்', 'பெலிகன்' மாதிரி இருக்கும்.]

  [இதுவரை சக்தி மலரில் 27 புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. விலைப்பட்டி தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பிக்கப் பெறும்.]

- காற்றிலே மிதந்த கவிதை சக்தி மலரில் 28-வது புத்தகம். நாட்டுப் பாடல்கள் பற்றிய கட்டுரைகள். படித்தனுபவிக்கத் தெவிட்டாதது.

  எழுதியவர்: **மு. அருணசலம், எம்.எ.**

- மார்கழி முதல் வாரத்திலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சக்தி மலரும் விலை ஒரு ரூபாய் தபால் செலவு மூன்றணா. பத்து மலர்களுக்குச் சேர்த்து ஒரே தடவையில் ரூபாய் பத்து அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்.

- **தமிழறிந்தவர்கள் இருக்கும் ஊர்களெல்லாவற்றிற்கும் டெபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.**

**சக்தி காரியாலயம்**

**261, சைனபஜார், சென்னை**

# பாரதீ  தர்சனம்

வெ. சாமிநாத சர்மா

சுங்கு விட்ட தலைப்பாகை; அதன் கீழ் அகன்ற நெற்றி; அதில் சிவந்த குங்குமப் பொட்டு. குழி விழுந்த இரண்டு கண்கள்; அவற்றிலிருந்து கூர்மையான பார்வை. ஒட்டிய தாடைகள். நறுக்கு மீசை. உரத்த சிரிப்பு; ஆனால், அந்தச் சிரிப்பிலே ஆழ்ந்த கருத்து. ஒடுங்கிய மார்பு. வளைந்த முதுகு. அகன்று அகன்று கால்களை எடுத்து வைக்கும் நடை. காலில் கிறுக்குச் சடாய். இந்தக் கோலத்துடன் தான், முதன் முதலில் பாரதியாரை நான் பார்த்தேன். அது 1918-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசியிலேயோ அல்லது 1919-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதலிலேயோ, எப்போது என்று எனக்கு இப்போது சரியாக ஞாபகம் இல்லை. நான் அப்பொழுது 'தேச பக்தன்' பத்திரிகையில் ஓர் உதவி ஆசிரியனா யிருந்தேன்.

ஒரு நாள் காலை சுமார் பத்தரை அல்லது பதினோரு மணி யிருக்கும். மேற்கண்ட கோலத்துடன் பாரதியார், எங்கள் காரியாலயத்துக்கு வந்தார். 'தேச பக்தன்' காரியாலயத்தில் உதவி ஆசிரியர்கள் இருந்த இடம், கட்டிடத்தின் பின்பக்கம். காரியாலயத்தின் நுழை வாயிலிலிருந்து, உதவி ஆசிரியர்கள் இருந்த இடத்துக்கு வரவேண்டுமானால், இரண்டு தாழ்வாரங்களையும் மூன்று முற்றங்களையும் கடக்க வேண்டும். சுமார் நூற்றைம்பது கஜ தூரமாவது இருக்கும். எனவே, பாரதியாரை, காரியாலயத்தில் நுழையும் போதிருந்து எங்கள் அருகாமையில் வருகிற வரையில், நாங்கள் கூர்ந்து கவனிக்க முடிந்தது. அப்பொழுதுதான், மேலே சொன்ன திருவுருவத்தை என் மனத்திரையில் வரைந்து கொண்டேன்.

'என் பாட்டுத் திறத்தாலே, இவ்வையம் பாலித்திட வேண்டும்' என்று கோஷித்தவர் பாரதியார். ஆம்; இன்று அவருடைய கவிதை, தமிழ் நாட்டிலே பேரரசு புரிகிறது. உத்தமக் கவிஞரெல்லாம், மகான்களே யாவர். அவர்களுடைய உள்ளத்திலே பிறந்த ஜோதி, நம்மை அறியாமலே, நம் மன இருளை அகற்றுகிறது. அப்படிப்பட்ட ஒரு மகான் பாரதி. அவரை நேரிலே கண்ட ஒவ்வொருவரது வர்ணனையும், நமக்கு இன்பமே தருகிறது. இதோ ஒன்று.

பாரதியார் 'ஷர்ட்' இல்லாமல் கறுப்பு 'ஒப்பன் கோட்' மட்டும் அணிந்திருந்தார். அது கசங்கியும், ஒரு மாதிரி சாம்பல் பூத்தும் இருந்தது. 'ஷர்ட்' இல்லாத குறையை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டுத் தமது கழுத்தின் மீது கைக்குட்டையைச் சுற்றி வைத்திருந்தார். அவருடைய 'போட்

மாதர், அவர் அப்பொழுது கையில் தடி யொன்றும் வைத்திருக்கவில்லை. வாயில் நீண்டதொரு சுருட்டுப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்த காரமான புகை, உதவி ஆசிரியர்களாகிய எங்களில் பலருக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

'தேச பக்தன்' காரியாலயத்தில் உதவி ஆசிரியர்கள் அமர்ந்திருந்த இடம் ஒரு கூடம். அதில் ஒவ்வோர் உதவி ஆசிரியருக்கும் ஒவ்வொரு சிறு மேஜை போடப் பட்டிருக்கும். மேஜையும் நாற்காலியும் நிரம்பப் பழைய காலத்து மோஸ்தர். எங்களுக்குக் கிடைத்த ஊதியம் எவ்வளவு சுருக்கமா யிருந்ததோ, அதைப் போலவே, எங்களுக்கு அளிக்கப்பட்ட மேஜை நாற்காலி வகையராக்களும், மற்ற 'ஸ்டேஷனரி' சாமான்களும் மிகவும் சுருக்கமாகவே இருந்தன. எழுதுகிற பேனா நன்றா யிருந்தால், மசிக் கூட்டில் நிறைய இங்கி யிராது; மசிக் கூட்டில் நிறைய இங்கி யிருந்தால், உடைந்த பேனாக் கட்டை, அல்லது நிப்பு இல்லாத பேனா, எங்களுடைய மேஜையின் மீது சாவதானமாக அமர்ந்து காலையில் எங்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். ஆனால், இவை யெல்லாம் அப்பொழுது எங்களுக்கு ஒரு சங்கடமாகத் தோன்றவில்லை. ஏனென்றால், எங்கள் இதயத்திலே உற்சாகம் என்பது ஊற்றெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுது அன்னி பெசண்டம்மையாரின் 'ஹோம் ரூல்' கிளர்ச்சிக் காலம். சொற்போரும் எழுத்துப்போரும் வெகு மும்முரமாக நடை பெற்றன. விழுந்து கொண்டிருப்பதாக எங்களுக்கு எண்ணம்! புதுவையில் அஞ்ஞாதவாசம் செய்துகொண்டிருந்த பாரதியார் கூட வெளியே வந்து விட்டாரென்று சொன்னால், கேட்பானேன்? சுயராஜ்யம் வெகு தூரத்திலில்லை யல்லவா?

இந்த மாதிரியான மனக் கோட்டைகள் கட்டிக்கொண்டு நாங்கள் வாழ்ந்து வந்த காலத்தில்தான், பாரதியார் எங்களுக்குத் தரிசனம் கொடுத்தார். உதவி ஆசிரியர்களாக அப்பொழுது நாங்கள் ஏழு பேர் இருந்ததாக எனக்கு ஞாபகம். எங்கள் மத்தியில் வந்து நின்ற பாரதியார், ஒரு சிம்மம் பார்ப்பது போல் எங்களைப் பார்த்து விட்டு, ஆசிரியரின் அறைக்குள் சென்றார். அப்பொழுது ஆசிரிய பீடத்தில் அமர்ந் திருந்தவர் ஸ்ரீ. திரு. வி. கலியாண சுந்தர முதலியார். இருவரும் சிறிது நேரம் அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, ஸ்ரீ முதலியார், பாரதியாரைக் கூடத்துக்கு அழைத்து வந்து, உதவி ஆசிரியர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிமுகப் படுத்துகிற சடங்கு நடை பெறுகிற போது, பாரதியாரின் வாயில் சுருட்டு எரிந்து கொண்டிருந்தது. என்னிடம் பாரதியாரை அழைத்துக் கொண்டு வந்து "இவர்தான் சாமிநாத சர்மா" என்றார் ஸ்ரீ முதலியார். உடனே பாரதியார், வாயிலிருந்த சுருட்டை எடுத்து விட்டுப் புகையை என் முகத்தின் மீது ஊதினாற் போல் பறக்க விட்டு விட்டு, "இவர் தான் போர்வீரரோ" என்று சொல்லி, உரக்கச் சிரித்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒன்

சிரிப்பிலே பரிகாசம் இருப்பதாக மட்டும், நான் உணர்ந்தேன். பாரதியார் எல்லோருடனும் சிறிது நேரம் அளவளாவி விட்டுச் சென்றுவிட்டார். பிறகு, என் சக உதவி ஆசிரியராயிருந்த ஸ்ரீ பரலி சு. நெல்லையப்ப பிள்ளை, பாரதியாரின் சிரிப்புக்கு அர்த்தம் இன்னதென்று எனக்கு விளக்கிக் கூறினார்.

அப்பொழுது, 'தேசபக்தன்' பத்திரிகையின் முதற் பக்கமானது, 'ஹோம்ரூல்' பிரசாரத்துக் கென்றே தனியாக ஒதுக்கி விடப்பட் டிருந்தது. அதில், ஆங்காங்கு நடைபெறுகிற கூட்டங்களின் விவரங்கள், சுயராஜ்யம் சம்பந்தமாகத் தலைவர்கள் கூறும் அரிய கருத்துக்கள் முதலியன வெளிவரும். இவை தவிர, என்னுடைய கட்டுரையொன்றும் ஏறக் குறையத் தினந்தோறும் இந்தப் பக்கத்தில் வெளியாக வேண்டு மென்று, ஸ்ரீ முதலியார் உத்திரவு போட்டிருந்தார். வாசகர்களுக்கு உற்சாக மூட்டுகிற வகையில், நகைச் சுவையோடு, போர்க் களத்திலிருந்து ஒரு யுத்த நிருபர் எழுதுகிற தோரணையில், இந்தக் கட்டுரைகளை, நான் எழுதி வந்தேன். இந்தக் கட்டுரைகளின் அடிப்படையான நோக்கம், சுயராஜ்யப் பிரசாரத்தைத் தவிர, வேறொன்று மில்லை.

'சுயராஜ்யப் போர் முனையிலிருந்து—ஒரு போர் வீரன் எழுதுவது' என்ற தலைப்புக் கொடுத்து, நான் இந்தக் கட்டுரைகளை எழுதி வந்தேன். இந்த மாதிரி எழுதுவது யார் என்று, பாரதியார் ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளை மூலமாக விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தார். பாரதியார், என்னை எந்த விதமாக உருவகப் படுத்தி வைத்திருந்தாரோ, எனக்குத் தெரியாது. முரட்டுத் தனமாக எழுதுகிறவன் 'முண்டாசு கட்டி' வீரனாக இருப்பான் என்று கருதினார் போலும்! அவர் நினைத்திருந்ததற்கு நேர்மாறாக, என் ஒல்லியான வடிவம் காணப்பட்டதும், அவர், "போர் வீரனுடைய லட்சணம் கொஞ்சங் கூட இல்லாத இவன் 'போர் வீரன்' என்று புனை பெயரிட்டுக் கொண்டு எழுதுகிறானே; என்ன துணிச்சல்!" என்று கருதியே அப்படி உரக்கச் சிரித்தார். அதாவது "அட, சோப்பளாங்கி! உன் பவிஷுக்குப் போர் வீரன் என்ற பெயர் வைத்துக் கொள்ளலாமா?" என்று அந்தச் சிரிப்பு என்னைக் கேட்டது போலிருந்தது. இந்த மாதிரி விஸ்தரித்துச் சொல்லி, என் மனதைச் சாந்தப் படுத்தினார், என் நண்பர் ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளை. ஸ்ரீ பிள்ளை, பாரதியாருடன் புதுவையில் சிறிது காலம் வசித்தவர். பாரதியாருக்கும் அவருக்கும் கடிதப் போக்குவரத்து நடை பெறும். இந்தக் கடிதங்களொன்றில் என்னைப் பற்றிப் பாரதியாருக்கு எழுதியிருந்த தாகவும், அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான், என்னைப் பார்த்ததும், "இவர் தான் போர் வீரரோ" என்று அவர் கேட்டதாகவும், ஸ்ரீ நெல்லையப்பர் கூறினார். பிறகுதான், எனக்கு ஒரு சிறிதளவு மனச் சாந்தி ஏற்பட்டது. "பாரதியார் என் உருவத்தைப் பற்றி எந்த விதமாக வேண்டுமானாலும் பரிகாசம் செய்யட்டும். என் எழுத்துக்களைப் படிக்கிறாரே; அவர் படிப்பதற்குத் தகுதியுடையனவா யிருக்கின்றனவே"

மனச் சாந்திக்குக் காரணமா யிருந்தது.

பாரதியார், வெட்டொன்று, துண்டிரண்டாகத்தான் பேசுவார். அந்தஸ்து விசேஷத்துக்கு அவர் மதிப்பே கொடுப்பதில்லை. மற்றும், சில சமயங்களில் அவர் இரண்டு அர்த்தங் கொடுக்குமாறு பேசுவார். ஒரு சமயம், சென்னைக் கடற் கரையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிலாபத் கிளர்ச்சியின் மும்முரமான காலம் அது. பாரதியார் அப்பொழுது 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் ஓர் உதவி ஆசிரியரா யிருந்தார். காரியாலய வேலையை முடித்துக் கொண்டு, 'மரீனா ரோட்' வழியாகக் கூட்டத்துக்கு வந்தார். அப்பொழுது கூட்டம் தொடங்கப்பட்டு யாரோ பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். சாதாரணமாகக் கூட்டத்துக்குச் சிறிது நேரங் கழித்து வரும் தலைவர்கள், பின்புறமாகச் சுற்றி வந்து மேடையின் மீதோ அல்லது மேடைக்குப் பக்கத்திலோ உட்காருவார்கள். ஆனால், பாரதியார் அப்படிச் செய்யாமல் கூட்டத்தின் நடுவே, கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு, மேடைக் கருகாமையில் வந்தார். அப்படி அவர் கூட்டத்தின் குறுக்கே வந்த காட்சி இப்பொழுதும் என் முன் வந்து தோன்றுகிறது.

காரியாலயத்திலிருந்து வருகிற வழியில், பாரதியார் பூக்கடைக்குச் சென்று மல்லிகைச் செண்டொன்றை வாங்கி, அதனைச் சரம் சரமாகத் துண்டு பண்ணினார். இரண்டு துண்டுகளை இரண்டு காதுகளிலும் சொருகிக் கொண்டார். மற்றொன்றைக் கொண்டார். வாயில் தாம்பூலச் சிவப்பு. மற்றப்படி முதலில் சொன்ன சுங்கு விட்ட தலைப் பாகை வகையராக்கள். இந்தக் கோலத்துடன், கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு மேடைக் கருகாமையில் வந்தார் பாரதியார். நான் மேடையை மேஜையாக வைத்துக் கொண்டு, பத்திரிகை நிருபன் என்ற ஹோதாவில் நோட்-புக்கும் பென்சிலுமாக உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். பாரதியாரைப் பார்த்ததும், "வாருங்கள், நமஸ்காரம்" என்றேன். அவர் "என்ன ரிப்போர்ட்டர் வேலையா?" என்று சொல்லிக் கொண்டே, என் பக்கத்தில் நெருக்கி உட்கார்ந்தார். அருகாமையில் மற்றொரு பத்திரிகை நிருபரும் இருந்தார். நான் சும்மா இருக்கக் கூடாதா? பாரதியாருடன் ஏதோ சாமர்த்தியமாகப் பேசுகிறவன் மாதிரி பாவனை செய்து கொண்டு, அவரைப் பார்த்து, "பின் புறமாகச் சுற்றிக் கொண்டு வரக்கூடாதா? ஏன் இப்படிக் கூட்டத்துக்குக் குறுக்கே வரவேண்டும்?" என்றேன். நான் சொன்ன தென்னவோ சாந்தமான தொனியில் தான். ஆனாலும், பாரதியாருக்குக் கோபம் வந்து விட்டது. "நாம் சுற்றி வளைத்துச் செல்வது வழக்கமில்லை. எப்பொழுதும் நேரடியாகத் தான் செல்வோம், ஐயா" என்றார். இது எவ்வளவு அர்த்த புஷ்டியுடைய வாக்கியம் என்பதைப் பின்னாடி தான் நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

பாரதியார், தாம் இயற்றிய பாடல்களை மெய்மறந்து பாடுவதை, நான் கேட்டிருக்கிறேன். சாரீரம் கட்டையென்று தான்

பாவம் நிறைந்திருக்கும். ஒரு சம யம் சென்னை ராயப்பேட்டை மௌபரீஸ் ரோட்டிலுள்ள 'குகானந்த நிலையம்' என்ற ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபை மண்டபத்தில், மாலை வேளை யில் பாரதியாரும் சில நண்பர் களுமாகப் பேசிக் கொண்டிருந் தோம். மண்டபத்துக்குள்ளே பால ஷண்முகனின் திருவுருவப் படமொன்று இருந்தது. மிகப் பெரிய படம். இதைப் பார்த் தால், குமரக் கடவுளை நேரில் காண்பது போலவே இருக்கும். மாலை நேர மல்லவா? மஞ்சள் வெயில், படத்தின் மீது விழுந்து கொண்டிருந்தது. சிறந்த ஷண் முகப் பிரியரான பாரதியாரின் வருகையை முன்னிட்டோ என் னவோ, அன்று அந்தப் படம், என்றுமில்லாத ஒரு சோபை யுடன் பிரகாசித்தது.

முருகக் கடவுள் மீது ஏதே னும் ஒரு பாடல் பாடுமாறு, பாரதியாரை அங்குள்ள நண் பர்கள் கேட்டுக் கொண்டார் கள். அவர் அப்பொழுது 'முருகா, முருகா' என்ற பாடலை மனமுருகிப் பாடினர். குமரக் கடவுள், மெல்ல நடந்து வரு வது போலவே இருந்தது. எங் களை யறியாமலே எங்கள் கண் களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தோம். சுமார் இருபது வருஷங்களுக்குப் பிறகு, இப் பொழுது இதைப்பற்றி எழுது கிற போதுகூட, எனக்கு மயிர்க் கூச்செறிகிறது.

எத்தனையோ எழுத்தாளர்களைப் போல், எதுகை மோனை வைத் துப் பாடும் எத்தனையோ புல வர்களைப் போல், பாரதியாரும் ஒருவர் என்றுதான் அந்தக் காலத்தில் என் போன்ற இளை தார்கள். என்னைப் பொறுத்த மட்டில், அவருடைய பெருமை, அவருடைய ஜீவிய காலத்திலே எனக்குத் தெரியவில்லை யென் பதை நான் இப்பொழுது பகி ரங்கமாக ஒப்புக்கொண்டு விடு கிறேன். இந்த அபசாரத்துக் குப் பிராயச்சித்தம் செய்து கொள்வது போல, அவருடைய பிற்காலத்தில் அவருடைய காவிய ரஸனையிலே, நான் அதிக மாக ஈடுபட்டு விட்டேன். அவ ருடைய பாடல்களில் எதை, யார், எப்படிச் சொன்னாலும், அதில் ஓர் இன்பம் இருப்பதாக, நான் உணர்கிறேன்.

பிரதி வருஷமும் செப்டம் பர் மாதம் பதினோராம் தேதி, பாரதியாரின் திருநாள் தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பட்டு வருகிறது. அப்பொழுது பிரசங்கம் செய்கிறவர்கள், பாரதியார் உயிரோடு வாழ்ந்த போது அவரைத் தமிழர்கள் புறக்கணித்து விட்டார்கள் என் றும், அவர் தரித்திரத்திலே உழன்று இறந்து போகும்படி செய்துவிட்டார்கள் என்றும், சம்பிரதாயமான ஓர் அழுகை அழுவார்கள். இந்தப் புலம்பல் கூட்டத்திலே, நான் ஒருவனாக இருக்க விரும்பவில்லை. ஒரு மகானாகிய கவிக்கு என்ன லட்ச ணங்கள் உண்டோ அந்த லட் சணங்களோடுதான் அவருடைய முப்பத்தொன்பது வருஷ வாழ்க்கை இருந்தது என்பது என்னுடைய அபிப்பிராயம். "எவனுடைய இதயத்தில் உண் மையானது பிரகாசிக்கிறதோ அவன்தான் மகான்" என் கிறான் கார்லைல் என்ற பிரெஞ்சு அறிஞன். "ஆபத்திலே வாழக் கூடிய மனோ உறுதி எவனிடத் தில் இருக்கிறதோ, அவனே

என்ற ஜெயமானிய அறிஞன். இந்த இரண்டு லட்சணங்களை யும், பாரதியாருடைய வாழ்க் கையில் பொருத்தி வைத்துப் பாருங்கள். அவர் ஒரு மகான் என்ற முடிவுக்கு, நீங்கள் கட் டாயம் வருவீர்கள்.

பாரதியார் ஒரு கவி. இந்தக் கவி என்ற வார்த்தையோடு நான் வேறெந்த அடைமொழி யையும் சேர்க்க விரும்பவில்லை. ஏனென்றால், புற உதவிகள் எதனையும் நாடாமல், எதுகை, மோனை முதலிய எவ்வித பந்தங் களுக்கும் உட்படாமல், காட் டிலே திரியும் காளைபோல் சுதந் திரமாகச் சஞ்சரிக்கிறவன் எவனோ அவன்தான் கவி. அவன் இயற்கையின் பிரதிநிதி. அழகை நாடி அவன் செல்வ தில்லை. ஏனென்றால், அவனே அழகு மயமாய் விளங்குகிறான். அழகுக்கு அழகு செய்வோர் யாரேனு முண்டோ? அதைப் போல், கவி என்ற உயர் மொழிக்கு, அடைமொழி தேவையோ?

"எண்ணங்களைத் தூண்டிவிடு கிறவன் கவியே தவிர, எண் ணங்களைப் பின் துரத்திக் கொண்டு செல்கிறவன் கவி யல்ல" என்கிறான் ஓர் ஆங் கிலக் கவிஞன். பாரதியார், தம் எளிய, இனிய பாக்களின் மூலம், நம் எண் ணங்களைத் தூண்டி விடுகிறார். ஏனென்றால், அவர் எண்ணத் தின் ஊற்று. விளக்கைக் கொண்டுதான் விளக்கை ஏற்ற முடியும் என்பதுபோல், எண்ண ஊற்றுப் பெருக்கெடுத்தோடும் இதயமுடைய கவிகள் தான், மற்றவர்களுடைய இதயத்தின் எண்ண ஊற்றைத் தோண்ட முடியும். இதனால்தான், பாரதி யாரின் பாடல்களை நாம் படிக் கிறபோது, நம் உள்ளத்திலே புதியபுதிய உணர்ச்சிகள் உண்டா கின்றன. "கண்ணினாலே பார்க் கப்படுவது தான் கவி" என்று கவிதையின் லட்சணத்தை வரை யறுத்துக் கூறுகிறான் ஒரு மேனாட்டுக் கவிஞன்.

இயற்கை அன்னையின் மடி மீது தலைவணங்கிப் படுத்து, அவ ளிடத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்ட வொர்ட்ஸ் வொர்த் என்ற ஆங்கிலக் கவிஞன், "அறிவின் உயிர் எதுவோ, அறிவின் அழகு எதுவோ, அதுதான் கவிதை" என்கிறான். அன்பர்களே! இந் தக் கண்கொண்டு பாரதியாரின் பாடல்களைப் படியுங்கள். அவ ருடைய பெருமை உங்களுக்கு நன்றாக விளங்கும்.

✲

## உபாத்தியாயரின் அறியாமை

**உபாத்தியாயர்** :—"அடே பையா! நான் உன் தகப்பனுருக்கு 100-ரூபாய் வட்டியில்லாமல் கடன் கொடுக்கிறேன். அவர் மாதா மாதம் இருபது ரூபாய் விகிதம் கொடுத்து, கடனைத் தீர்ப்பதாக வாக்களிக்கிறார். மூன்று மாதத்துக்குப் பின், அவர் எனக்கு எவ்வளவு பணம் தரவேண்டி யிருக்கும்?"

**சிறுவன்** :—"நூறு ரூபாய்."

**உபாத்தியாயர்**:—"முட்டாள்! உனக்குக் கணக்குத் தெரியவில்லை."

**சிறுவன்** :—"ஸார்! உங்களுக்கு என் அப்பாவைத் தெரியவில்லை."



# ஏசு ஜனனம்

பி. கோதண்டராமன்

## காட்சி 1.

பெத்லஹேம் நகரில்
ஒரு குடியானவனின் வீடு.

**குடியானவன் :** (தனியாகத் தன் வீட்டின் தெருத் திண்ணையின் மீது உட்கார்ந்து தனக்குள்) ஒரு வாரமாக ஊரில் பல புதிய பேர் வழிகள் வந்த வண்ணமாக இருக்கிறார்கள். இவ்வூரில் யூதருக்கு மன்னன் ஒருவன் அவதரிக்கப் போகிறானாம். அம்மாதிரி ஏற்கனவே தீர்க்க தரிசனங்கள் உண்டு. மன்னனாவது மண்ணாங் கட்டியாவது! எல்லாம் ஏமாற்று வித்தை! எத்தனையோ பித்தலாட்டங்களில் இதுவுமொன்று.

[வீட்டு வாயிலுக்கு எதிரே ஆண் ஒருவனும் பெண் ஒருத்தியும் தளர்ச்சிக் குறிகள் புலப்பட வந்து நிற்கிறார்கள்.]

**சூசை :** (குடியானவனைப் பார்த்து) ஐயா! நானும் என் மனைவியும் வெகு தூரம் வழி நடந்து மிகவும் களைப்படைந்திருக்கிறோம். அன்றியும், அவள் பூரண கர்ப்பிணி. தயைசெய்து தங்கள் வீட்டில் சிறிது இடமளிக்க வேண்டும்.

திக்கற்ற அனாதைகளை ரட்சிக்க அவதரிக்கும் மகான்கள் அனைவருமே இப்படித்தான். எளிமை சூழ்ந்த இட்த்திலே பிறப்பார்கள். ஏசு ஒரு மாட்டுத் தொழுவத்திலே ஜனிக்கிறார். ஏழை எளிய மக்களுக்கே முதலில் தர்சனம். மன்னாதி மன்னரெல்லாம் பின்னாலேதான் வருகிறார்கள்,

**குடியானவன் :** இடம் வேண்டுமாம், இடம்! இது என்ன சத்திரமா, சாவடியா? போம், ஐயா ; போம்.

**சூசை :** ஐயனே, அப்படிச் சொல்லாதீர்கள். கருணை காட்டுங்கள்.

**கன்னித் தாயார் :** ஆ! வேதனை பொறுக்க முடியவில்லையே! நிற்கவும் முடியவில்லையே, நாதா!

**சூசை :** மரி, சற்றே பொறுத்துக்கொள். இவர் ஆண்டவன் அருளால் மனமிரங்குவது திண்ணம்.

**குடியானவன் :** (தனக்குள்) என்ன விநோதம்! ஈரமில்லாத என் நெஞ்சிலும் அன்பு சுரக்கிறதே! என் இறுகிய இதயமும் மலர்கிறதே! யாவும் அவன் திருவுள்ளம் போலும்! (சூசையைப் பார்த்து, உரக்க) சரி, உள்ளே வாருங்கள். மாட்டுக் கொட்டிலில் சிறிது இடமளிக்கிறேன்.

[அவன் உள்ளே நுழைய, அவர்களும் பின் தொடர்ந்து செல்கிறார்கள்.]

## காட்சி 2.

வயற்புறம்.

**மார்ஜோலின் :** மிர்திலி! குயிலின் கானத்தைக் கேட்டாயா?

**மிர்திலி :** ஆகா, கேட்டேன். என்ன இனிய கானம்!

பொருள் எனக்குத் தெரியும்.

**மிர்திலி :** என்ன தெரியும்? என்னவோ அளக்கிறாய்!

**பரிகுலன் :** அளப்பு இல்லை; உண்மையையே கூறுகிறேன், கேள்: 'உலகில் சாத்தான் ஆட்சி புரிகிறான். ஆதலால்தான், மக்கள் பாவப் படுகுழியில் விழுந்து துயருறுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு விமோசனம் நெருங்கி விட்டது. அவர்களைக் கைதூக்கிவிட, தேவகுமாரன் இம்மண்ணுலகில் பிறக்கப்போகிறான்' என்று குயில் கூறிற்று.

**மார்ஜோலின் :** உண்மையாய் இவ்விதமாகவா சொல்லிற்று?

**பரிகுலன் :** உண்மையாய் இவ்விதமாகத்தான் சொல்லிற்று.

**மிர்திலி :** இதெல்லாம் உன் மதி மயக்கம்.

[குயில் மீண்டும் பாடுகிறது. எல்லோரும் செவிசாய்த்துக் கேட்கிறார்கள்.]

**மார்ஜோலின் :** குயில் இப்போது என்ன கூறுகிறது?

**பரிகுலன் :** 'நீங்கள் அனைவரும் அந்தப் பெருமானிடம் சென்று, அவனைத் துதிசெய்து வணங்க வேண்டும். அவன் ஆயர்பாடிக்கு அருகாமையில் ஒரு குடியானவன் வீட்டு மாட்டுக் கொட்டிலில் பிறக்கப் போகிறான்' என்று கூறுகிறது. (குயில் விர்ரென்று பறந்து போகிறது.) அது தன் செய்தியை நமக்குத் தெரிவித்து விட்டுப் போய்விட்டது. நாமும் வீடு செல்வோம்.

[அனைவரும் செல்கிறார்கள்.]

ஆயர்பாடி.

**மிர்திலி :** ஆகா! இளந் தென்றல் எவ்வளவு சுகமாக வீசுகிறது!

**மார்ஜோலின் :** வானில் உலவும் வெண்மதியைப் பார்த்தாயா? அவன் நம்மைக் கண்டு நகைக்கிறான் போலும்!

**மிர்திலி :** தோட்டத்து மரங்கள் ஏதேதோ தம்முட் பேசுவது போல, லேசாகச் சலசலக்கின்றன; கேளுங்கள்.

**மார்ஜோலின் :** பூஞ் செடிகள் ஏதுமில்லாத இந்தத் தோட்டத்தில், மலரின் நறுமணம் கம்மென்று வீசுகிறதே, என்ன விந்தை!

**மிர்திலி :** ஆம். இவை யாவும் இன்று நடைபெற விருக்கும் விசேஷ நிகழ்ச்சி யொன்றின் அறிகுறி போலும்! என் உள்ளம் இளகுகிறது. என்னையும் அறியாமல், கண்ணீர் வந்து விடும் போலிருக்கிறது.

**மார்ஜோலின் :** மிர்திலி! அதோ பார்! வானத்தில் வானவர் இருவர் பறந்து செல்கிறார்கள்.

**மிர்திலி :** இப்போதுதான் பரிகுலன் சொன்னது நினைவுக்கு வருகிறது.

[திடுமென்று பேரொளி யொன்று இறங்குகிறது. காபிரியேல் தோன்றுகிறான்.]

**மிர்திலி :** ஆ! என்ன இது!

**காபிரியேல் :** ஆயர் திலகமே, அஞ்சவேண்டாம். நான் வானவன். உங்களுக்கும் உங்கள் இனத்தவருக்கும் நற்செய்தி கொண்டு வந்திருக்

னுலகில் மானிடர் படும் துய ரங் கண்டு விண்ணுலகோராகிய நாங்கள் பெரிதும் இரங்கு கிறோம். அவர்களைக் கை தூக்கி விட விரும்புகிறோம். தேவகுமா ரன் உங்கள் யாவரையும் பாவங் களினின்று ரட்சித்துக் கரை யேற்ற, இந்தப் பூவுலகுக்கே வந் துள்ளான். உங்கள் பாவங் கள் அனைத்தையும், அவன் தன் மீதே ஏற்றிக் கொள்வான். மென்மேலும் இழிநிலை யடையும் மானிடரைக் காப்பாற்ற, தன் உயிரையும் நல்குவான். அவன் உங்களுக்கு நித்தியவாழ்வு அளிப் பான். அவன் இப்போது குடி யானவன் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருக்கிறான்.

**மார்ஜோலின் :** என்ன! தேவ குமாரன் பிறந்து விட்டானா? குயில் சொன்னது சரிதான்.

**மிர்திலி :** தேவகுமாரன், தொழுவத்தில் பிறப்பானேன்?

**காபிரியேல் :** தானும் உங்க ளுடைய துயரத்தில் பங்கெடுத் துக் கொள்ளத்தான்.

**மிர்திலி :** ஆகா! அவனது பேரன்புதான் என்ன!

**காபிரியேல் :** ஆயர்களே! பர மன் மகனுக்கு உங்கள் வணக் கத்தைச் செலுத்தச் செல்லுங் கள். மூவேந்தரும் சிறிது நேரத் துக்குள் அங்கே வந்து சேரு வர்.

**மிர்திலி :** நல்ல ஆடைகள் தரித்துக் கொண்டு, இதோ புறப் படுகிறோம்.

**காபிரியேல் :** நண்பர்களே! விரைந்து செல்லுங்கள். ஆடை முதலிய அட்டகாசங்கள் இப் போது வேண்டாம். உள்ளத் தில் அன்பு நிறைந்தால் போதும். சளிக்க வேண்டாமா?

**காபிரியேல் :** உங்களிடம் எளி தில் என்ன கிடைக்குமோ அதை எடுத்துச் செல்லுங்கள். பரிசு பெரிதல்ல; உள்ளத் தூய் மையே முக்கியம். நான் போய் வருகிறேன்.

[மறைகிறான்]

## காட்சி 4.

[பாரசீக மன்னன், பாரத நாட்டு மன்னன், நீகிரோ மன்னன் ஆகிய மூவரும் பாலை வனத்தில் ஓரிடத்தில் சந்திக் கிறார்கள்.]

**பாரசீக மன்னன் :** பாரத நாட்டு மன்னரே! தேவகுமா ரனைத் தரிசிக்கத் தானே செல்லு கிறீர்?

**பாரத நாட்டு மன்னன் :** ஆம்; அதற்காகவே செல்லுகிறேன்.

**பாரசீக :** இந்த அற்புதத்தைக் கேட்டீர்களா? ஏசுநாதன் பிறந்தான் என்று கேள்விப் பட்டதுமே, என் மனத் துய ரங்கள் யாவும் பறந்தோடி விட் டன.

**பாரத :** எனக்கும் அதே அனு பவந்தான் ஏற்பட்டது.

**பாரசீக :** என் உள்ளம் இளகி யது. அருள் சுரந்தது. புத் துயிர் பெற்றேன்.

**பாரத :** அதிருக்கட்டும். நான் புறப்பட்ட போது, விண்ணில் ஒரு நட்சத்திரம் தோன்றி, எனக்கு வழிகாட்டிக் கொண்டே வந்தது. இரவும் பகலுமாக வானில் சுடர்விட் டெரிந்தது. திடுமென்று சற்று முன், அது ஏனோ மறைந்து விட் டதே!

எனக்கும் வழிகாட்டி வந்தது. அது திடுமென்று மறைந்த தேனோ, எனக்கும் விளங்க வில்லை.

**பாரத:** உள்ளத்தில் நம் பிக்கை போதுமான அளவு இல்லாவிட்டால், இவ்விதம் நேர லாம். ஒருகால் நம்மையும் அறி யாமல், நீகிரோ மன்னரே!...... நீர் மட்டும் வாய் திறவாமல் ஒதுங்கி நிற்கிறீரே, அருகே வாரும். நட்சத்திரம் உமக்கும் வழிகாட்டி வந்தது அல்லவா?

[அருகே வருகிறான்.]

**நீகிரோ மன்னன்:** ஆம், இது காறும் அது வழிகாட்டியபடியே நடந்து வந்திருக்கிறேன். என் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். முதலில், நான் உல கத் துன்பங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போது வானத்தில் ஓர் ஒலி கேட்டது. அண்ணாந்து பார்த் தேன். பேசினது ஒரு நட்சத் திரமே. அது சொல்லிற்று: 'உலக ரட்சகன் ஒரு குடி யானவன் வீட்டு மாட் டுத் தொழுவத்தில் அவதரித்துள் ளான். கீழ்த்திசை செல். நான் உனக்கு வழி காட்டுவேன்.' நான் உடனே புறப்பட்டேன். நட்சத்திரம் இது வரையில் வழி காட்டிக் கொண்டே வந்தது. ஆண்டவனிடம் எனக்கு உறுதி யான நம்பிக்கையும் அன்பும் உண்டு. ஆயினும், நான் என் னையு மறியாமல், என்ன குற்றஞ் செய்தேனோ, தெரியவில்லை. என் குற்றத்தின் காரணமாகவே, நட் சத்திரம் மறைந்து விட்டது.

**பாரசீக:** ஆம். என் உள்ளத் தில் ஏதோ ஐயம் ஏற்பட்டது. உடனே நட்சத்திரம் மறைந்த தைக் கண்டேன்.

வோம். இறைவனின் இச்சைக் குப் பணிவோம். மீண்டும் நட்சத் திரம் தோன்றி வழி காட்டும். நாம் ஒவ்வொருவரும் தனியாக அவனை நம் உள்ளத்தில் துதித்துப் பிரார்த்தனை செய்வோம்.

**பாரத:** ஆம், நீர் சொல்வது சரி; அப்படியே செய்வோம்.

[அவர்கள் தனித் தனியாக அமர்ந்து பிரார்த்தனை செய்கிறார் கள். மீண்டும் நட்சத்திரம் தோன்றுகிறது. ஒரு குரல் கேட் கிறது.]

**நட்சத்திரம்:** மன்னர்களே! ஆண்டவன் உங்கள் விண்ணப் பங்களை ஏற்றுக் கொண்டு விட் டான். புறப்படுங்கள். நான் மீண்டும் வழி காட்டுவேன்.

[அனைவரும் குதூகலமாகப் புறப் படுகின்றார்கள்.]

## காட்சி 5.

[தொழுவத்தில் கன்னித் தாய், தெய்வக் குழந்தையைத் தன் மடி மேல் வைத்திருக்கிறாள். குழந்தை தூங்குகிறான். அவன் தலையைச் சுற்றிலும் ஒரே ஒளி வட்டம். குழந்தையைப் பார்த்த வண்ண மாகப் பக்கத்தில் சூசை நிற் கிறார். ஆயர்கள் கும்பல் கும்ப லாக வருகிறார்கள்.]

**மார்ஜோலின்:** (குழந்தையை அணுகி) எங்கள் தேவ குமாரா, வருக! எங்கள் குலக் கொழுந்தே, வருக! மக்கட் குலத்தின் இடர் தீர்ப்போனே, வருக! யூதர் கோனே, வருக! வருக! (பின்பு தரையில் முடிசாய்த்து வணங்கு கிறான். எழுந்து கன்னித்தாயைப் பார்த்து) அன்னையே! பாலும், தேனும், வெண்ணெயும் என் அற்பக் காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்று அருள்புரி. (அவைகளை அன்னை

யால் அங்கீகரிக்கிருள். இறுதியில் மார்ஜோலின் ஒதுங்கி ஒரு பக்கமாக நிற்கிருன்).

**மிர்திலி:** (குழந்தையை அணுகி) பரமன் மகனே, வருக! கொட்டிலில் வளரும் கோமகனே, வருக! அமரர் குல ஏறே, வருக! மன்னர் மன்ன, வருக! எங்கள் கலி தீர்ப்போனே, வருக! (தரையில் முடி சாய்த்து வணங்கி எழுந்து கன்னித் தாயைப் பார்த்து) அன்னையே! இதோ உள்ள பத்து வெள்ளாடுகளை, என் சிறு காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக் கொள். (அன்னை புன்னகையால் அங்கீகரிக்கிருள். மிர்திலி ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிருள்).

**சூசை:** அன்பர்களே! உங்கள் அன்பு மொழிகளையும் காணிக்கைகளையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுகிருேம். குழந்தை எழுந்தவுடன், புன்னகையால் தன் நன்றியைத் தெரிவிப்பது திண்ணம்.

[ஆயர்கள் ஒவ்வொருவராகக் குழந்தை முன் மண்டியிட்டு வணங்குகிருர்கள். சிறிது நேரத்துக்குள் மூவேந்தரும் வருகிருர்கள். ஆயர்கள் வழிவிட்டு ஒதுங்கி நிற்கிருர்கள்.]

**பாரசிக மன்னன்:** (குழந்தை எதிரே வந்து நின்று தன் கிரீடத்தை எடுத்து அதன் பாதத்தில் வைத்துப் பின்பு அணிகிருன். உடனே தரையில் விழுந்து வணங்குகிருன். எழுந்து கை கூப்பி) மன்னர் மன்ன, நீடூழி வாழ்க! எங்கள் குலக் கொழுந்தே, வாழ்க! (கன்னித் தாயைப் பார்த்து) அன்னையே! மன்னுதி மன்னருக்கு நான் இரண்டு காணிக்கைகள் கொண்டு வந்துள்ளேன். இந்தப் பெட்டியிலுள்ள சவரன்கள் ராஜ்யத்தை நடத்தவும், வைரப் பிடி போட்ட இந்த வாள் பகைவரை அழிக்கவும் உதவுவன. தயை செய்து ஏற்றுக் கொள்!

[அன்னை புன்னகையுடன் ஏற்க, அவன் ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிருன்.]

**பாரத நாட்டு:** (குழந்தையை அணுகி) தெய்வக் குழந்தாய், வாழ்க! சக்தியின் மைந்தனே, வாழ்க! மக்களுக்கு நித்திய வாழ்வளிப்போனே, வாழ்க! சர்வலோக ரட்சகா, வாழ்க! அநாதிமுத்தா, வாழ்க! (தன் கிரீடத்தை எடுத்துக் குழந்தையின் பாதங்களில் வைத்துத் தரையில் விழுந்து வணங்கி அன்னையைப் பார்த்து) அன்னையே! இதோ, இந்த வாசனைத் திரவியங்களும் ஊதுவர்த்தி, சாம்பிராணி முதலியவையும், பிரம்ம வித்தை அடங்கியுள்ள இந்த நூலும் என் காணிக்கைகள். ஏற்று அருள் புரியவேண்டும். (அன்னையின் முன் சமர்ப்பிக்க, அவள் புன்னகையுடன் ஏற்கிருள். பின்பு ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிருன்.)

### யாருக்கு அச்சம்

சரீரத்தைக் கொலை செய்து, அதன் பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதீர்கள். நீங்கள் இன்னருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்: கொலை செய்த பின்பு, நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள்.

—ஏசு கிறிஸ்து.

சென்று அதன் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றி) என் இறைவா, வாழ்க! என் ஆண்டகையே, வாழ்க! என் வாழ்வே, வாழ்க! (கிரீடத்தை அகற்றித் தரையில் விழுந்து வணங்கி, எழுந்து, கன்னித் தாயைப் பார்த்து) அன்னையே! என் காணிக்கையாக இந்த வெள்ளைப் பாளத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்று அருள் செய். (அதைக் கொடுக்க, அவள் ஏற்றுப் புன்னகை புரிகிறாள். அவன் பின்னே ஒதுங்கி நிற்கிறான்).

**சூசை:** மன்னர்களே! உங்கள் நன் மொழிகளுக்கும், காணிக்கைகளுக்கும் மிக மிக வந்தனம். நீங்கள் இவ்வாறு எங்களைக் கௌரவித்ததற்காக எவ்வளவோ பெருமையடைகிறோம். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவான்.

**காபிரியேல்:** (திடுமெனத் தோன்றி) அன்பர்களே! இப்

அவதரித்துள்ளான். மன்னுயிர்க்கு இதம் செய்யவே விண்ணினின்றும் இம்மண்ணுலகத்துக்கு அவன் வந்துள்ளான். ஏழைகளுடன் நட்புக் கொண்டாடவே, இத் தொழுவத்தில் பிறந்துள்ளான். இனி அவனது கடாட்சத்தால், மக்கள் கால் முடம் நீங்கப் பெறுவர்; குருடர் கண் திறப்பர்; பெருநோயாளர் நோய் தீர்வர். மக்கள் வாழ்க! இறைவன் வாழ்க! ஏசுநாதன் வெல்க!

[வானவர் விண்ணினின்று பூமாரி பொழிகிறார்கள். சகல தெய்வலோக வாத்தியங்களும் முழங்குகின்றன. முனிவர்கள் வாழ்த்துகிறார்கள். ஆயர்கள் அனைவரும் கூடிக் கைக் கோத்துக் கொண்டு வட்டமாக நின்று "எங்கள் கண்ணன் வந்தான்! எங்கள் நாதன் வந்தான்! ஆடுவோமோ, பள்ளுப் பாடுவோமே!" என்று குரவை பாடி ஆடுகிறார்கள்.]

*

## உங்களுக்கேன் கவலை?

என்னத்தை உண்போம் என்று உங்கள் உயிருக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப் படாதீர்கள்.

காகங்களைப் பாருங்கள். அவைகள் விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை. என்றாலும், இறைவன் அவைகளைக் காப்பாற்றுகிறார். பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ உயர்ந்தவர்கள். கவலைப் படுவதனால், உங்களில் எவனாவது தன் உடம்பை ஒரு முழம் நீட்ட முடியுமா? காட்டு மலர்கள் எப்படி வளர்கின்றன, பாருங்கள். அவை உழைப்பதுமில்லை; நூற்பதுமில்லை. என்றாலும், சாலமோன் தொடங்கி யாருமே, அவைபோல் உடுத்ததில்லை. இன்றைக்குக் காட்டிலிருந்து, நாளைக்கு அடுப்புக்குப் போகப்போகிற புல்லுக்கு இறைவன் இவ்விதம் உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

—ஏசு கிறிஸ்து.

# மணி ஓசை

து. ரா.

ரயில் கேட்டுக்கு எதிரில் எங்கள் வீடு. இந்த கேட்டில் ஒரு மணி, ரயில் வரும் போதெல்லாம் கண கண என்று அடித்துக் கொண்டே இருக்கும்.

பத்து வருஷத்துக்கு முன் போட்டார்களா இந்த எலெக்ட்ரிக் ரயில் வண்டிகளை; அப்பொழுது பிடித்து இந்த கேட்டில் உள்ள மணியும் அடித்துக் கொண்டிருக்கிறது. ரயில் வருவதற்கு நான்கு நிமிஷத்துக்கு முன் அடிக்கத் தொடங்கும்; உடனே, கேட்டுக்காரன் கேட்டை மூடுவான். வண்டி போனபின், மணியோசையும் நிற்கும்.

பீச்சிலிருந்து தாம்பரத்துக்கும், தாம்பரத்திலிருந்து பீச்சுக்கும் போகிற வண்டிகளின் எண்ணிக்கைக்கோ குறைவில்லை. ஆகையால், இந்த மணிக்கு ஓய்ச்சல் ஒழிவென்பதே கிடையாது. விடியற்காலம் நாலரை மணிக்கு, முதல் வண்டி போகிறது. இரவு பன்னிரண்டரை மணிக்குக் கடைசி வண்டி. அதற்குமேல், பாதி இரவில், கூட்ஸ் வண்டிகள் வேறு. இப்படி ஐந்து நிமிஷத்துக்கு ஒன்றாக, ஏதாவது ஒரு வண்டியாவது இந்த லயனில் போய்க் கொண்டேயிருக்கும். ஆகையால், மணி அடிக்கும் நேரத்தை விட, மணி அடிக்காத நேரம் ரொம்பக் குறைவுதான்.

அடித்து விட்டுப் போகட்டும். ஆனால், மெதுவாக அடிக்கக் கூடாதா என்றுதான் கேட்கிறேன். மணி அடிக்கத் தொடங்கும் சமயத்தில் தப்பித் தவறி அருகில் நின்றிருந்தோமானால் போதும்; கண கண ஓசை காதைத் துளைத்து விடும். வெண்கலமோ, இரும்போ அல்லது 'அல்லாய்' என்னும் கலப்பு உலோகமோ தெரியவில்லை. அப்படி ஓர் ஓசையை எழுப்புகிறது இந்த மணி!

இந்த மணிக்கும் ஒவ்வொரு சமயம் 'ரிப்பேர்' செய்யும்படி நேரிடுவதுண்டு. அப்பொழுது, தொண்டை கட்டின மாதிரி, 'டர் டர், டர் டர்' என்று கீழ் ஸ்தாயியில் அடிக்கும். அச்சமயம் நான் பிரார்த்திப்பேன், "பகவானே! இதன் தொண்டைக் கட்டு இப்படியே நீடித்து இருக்கக் கூடாதா?" என்று. ஆனால், என் பிரார்த்தனையை யார் கேட்கிறார்கள்? ஒரு மணி நேரத்துக்குள், ரயில்காரர்கள் மணியைப் பரிசோதித்து, சரி பண்ணி விடுவார்கள். மறுபடி, காதைத் துளைக்கும் கணகண சப்தம் தான்.

இதனால் எனக்கென்ன நஷ்டம் என்பீர்கள். வாஸ்தவம். ஆனால், கேட்டுக்கு எதிரில் என் வீடு என்றேனா; பொழுது விடிந்தால்

*மின்சார ரயில்வே ஸ்டேஷனின் மணிதான் அது. ஆனாலும், இவரை அது என்ன பாடு படுத்துகிறது! சில உபத்திரவங்களே இப்படித்தான். உள்ளவரை தொல்லை. இல்லாமல் போகும்போதோ? அப்போதாவது தீர்கிறதா? வேறு தொல்லை. மீண்டும் பழைய தொல்லையை வரவேற்கத் தயாராகிவிடுகிறோம்!*

ராத்திரியிலே கூடத்தான்), இந்த மணி யோசையைக் கேட்டுக் கேட்டு, என் காது புளித்து விட்டது. அமைதியாய் உட்கார்ந்து எதாவது எழுதுவோம் என்று பார்த்தால், இந்த மணி யோசை விடுவதில்லை; கண கண என்று சப்தித்துத் தலை வேதனையை உண்டு பண்ணுகிறது. ஆபீஸ் நாட்களிலாவது பரவாயில்லை என்றால், லீவு நாட்களில், வீட்டில் இருக்கையில், இருபத்தி நாலு மணி நேரமும் காதில் விழுவது இந்த ஓசை தான்.

"நீ எப்படி இதைச் சகித்துக் கொண்டு தினம் வீட்டில் காலம் கழிக்கிறாய்?" என்று என் மனைவியைக் கேட்டேன்.

"ஆமாம். அதை யார் கவனிக்கிறார்கள்?" என்றாள் அவள்.

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

அன்றிரவு நடு நிசியில் என்ன காரணத்தினாலோ, விழித்துக் கொண்டேன். மறுபடி தூக்கம் வரவில்லை. நான் புரண்டு புரண்டு படுத்திருக்கையில், இந்த மணியும் ஓயாமல் அடித்துக் கொண்டே இருந்தது. எரிச்சலாய் வந்தது எனக்கு. அந்த மணியினால்தான் தூக்கமே வரவில்லைபோல் தோன்றியது. எழுந்திருந்து போய், ஒரு பெரிய கல்லாய்த் தூக்கி அதன்மேல் போட்டு, அதன் அலறலை 'நிறுத்தலாமா' என்று ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

மறுநாள் ஆபீசுக்குப் போகையில், அந்த கேட் சாத்துகிறவனைப் பார்த்து, "என் அப்பா! தலைவேதனையாய் இல்லையா இந்த மணி ஓசை உனக்கு? இருபத்து நாலு மணியும் இதன் பக்கத்திலேயே இருக்கிறாயே; இப்படி அலறுகிறதே!" என்று கேட்டேன்.

"என்ன, ஸார், பண்ணுகிறது? வயிற்றுப் பிழைப்பு" என்றான்.

குடை பிடித்துக்கொண்டு எதிரில் வந்த ஒருவர் புன்சிரிப்புச் சிரித்தார். "இந்த மணி இருக்கிறதே; இது ரொம்ப உபயோகம், ஸார்" என்றார்.

"என்ன?" என்றேன்.

"அன்றொரு நாள் இருட்டின பிறகு, கடைத்தெருவுக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்தேன். கேட்டுக்காரன் ஞாபக மறதியாய் கேட்டைச் சாத்த வில்லை போல் இருக்கிறது. என்னவோ நினைவாய் வந்த நான், லயனைத் தாண்டுகிற சமயத்தில், இந்த மணியின் சப்தத்தைக் கேட்டுச் சட்டென்று நின்றேன். அதே வினாடி ரயிலும் வந்து விட்டது. இப்பொழுது தான், ரயிலுக்கு விளக்குகள் கூடக் கிடையாதா? ரயில் வந்ததை, நான் கவனிக்கவே யில்லை. இந்த மணியினால் தான் உயிர் தப்பினேன்."

நான் ஒன்றும் சொல்லவில்லை. 'என்னைப்போல்அவர் வீடும் கேட்டுக்கு அருகில் இருந்தால், அப்பொழுது தெரியும்' என்று மனதில் நினைத்துக் கொண்டேன்.

இன்னொரு தினம் ரயிலுக்குப் போகையில், இந்த மணிக்கு ஒருவன் அலுமினியம் வர்ணம் பூசிக் கொண்டிருந்தான். 'துடைப்பக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சலம் வேறா?' என்று தான், நினைக்கத் தோன்றிற்று. அன்று ரயில் ஏறுவதற்குள், நல்ல மழை பிடித்துக் கொண்டது. கேட்டைத் தாண்டி ரயில்

யாரையாவது அவமானப் படுத்துவது என்றால், அவர்கள் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்துவார்களாமே, அந்த ஞாபகம் வந்தது எனக்கு அந்த மணியைப் பார்த்ததும். பாதி பூசியிருந்த வர்ணம், மழையில் கரைந்து வழியத் தொடங்கியிருந்தது. எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை!

அன்று முழுவதும் மழைதான். அதற்கடுத்த இரண்டு நாட்களும் கூட மழை நிற்கவில்லை.

ஞாயிற்றுக் கிழமை காலை காப்பி சாப்பிட்ட பின், வராந்தாவில் உட்கார்ந்து எழுதத் தொடங்கினேன். அப்பொழுது மழை நின்றிருந்தது. வெயில் காயத் தொடங்கும் சமயம். மழை பெய்து ஓய்ந்த மாதிரி என்பார்களே, அதன் உண்மையை அப்பொழுது கண்டேன். எதிர் வீட்டுக் குட்டிச் சுவரில் நின்று கொண்டு, அப்பொழுது தான் பொழுது விடிந்ததாக நினைத்து, "கொக்கரகோ!" என்று கத்திய கோழியின் குரல் கூட, பயங்கரமான சப்தத்துடன் உலகின் அமைதியைக் குலைப்பது போல் இருந்தது.

எனக்கு வேலை ஓடவில்லை. உலகமே வெறிச் சென்றிருப்பது போல் ஓர் உணர்ச்சி. பழக்கமில்லாத இடம் எங்கேயோ என்னைக் கொண்டுபோய் விட்டுவிட்ட மாதிரி ஓர் அமைதியின்மை.

நண்பர் ஒருவர் வந்தார். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவர் விடைபெற்றுச் செல்லுகையில், "மணி என்ன ஆகிறது? இன்னும் காஞ்சிபுரம் வண்டி கூடப் போகவில்லையே!" என்றேன்.

## ஹிட்லர் கனவு

மாஸ்கோ பத்திரிகைகளில் பின்வரும் விகடத் துணுக்குக் காணப்படுகிறது:

ஹிட்லர் ஒரு நாட் காலை கோயரிங்கைப் பார்த்து, "என் துருப்புகள் ராஸ்டாவ் நகரை மீண்டும் பிடித்து விட்டதாக, நான் கனவு கண்டேன்" என்றார்.

"அப்படியா! அப்படியானால், சீக்கிரம் போய் மறுபடியும் தூங்கி, ஸ்டாலின்கிராட் நகரையும் பிடித்து விடுங்கள்" என்றார் கோயரிங்!

"சரிதான்! தெரியாதா உனக்கு? காலையிலிருந்து ஒரு வண்டியும் ஓட வில்லையே. பட்டணம் எங்கும் ஒரே வெள்ளமாம். ரெயில்வே லயனைக் கூடச் சில இடங்களில் அடித்துக் கொண்டு போய் விட்டதாம்" என்று அவர் சொல்லி விட்டுப் போனார்.

வாயிற்படியில் நின்று ரயில் கேட்டைப் பார்த்தேன். கேட் திறந்து கிடந்தது. மணியும் அடிக்கவில்லை! அன்று காலையிலிருந்து மணியோசை கேட்காத விஷயம் அப்போதுதான் தெரிந்தது. உலகமே வெறிச்சென்றிருப்பது போல் உணர்ச்சி ஏற்பட்டதன் காரணமும் விளங்கிற்று.

"என்ன பார்க்கிறீர்?" என்றார் அடுத்த வீட்டுக்காரர்.

"மணி அடிக்க வில்லையே!"

"வண்டி வந்தால் தானே, மணி அடிக்கும்? இன்னும் நாலு நாளைக்கு ரயில் போகாதாம்."

உள்ளே சென்று உட்கார்ந்தாலும், ஒன்றும் செய்யத்

[illegible] போய், கேட்டுப் பார்க்கும்படி மனம் தூண்டிற்று. தெருவில் போகிறவர்களை எல்லாம் நிறுத்தி, "மணி அடிக்கவில்லை பார்த்தீர்களா? வண்டி போகாதாம்" என்று சொல்லிக் கொண்டு, வீட்டுக்கும் வாயிலுக்குமாய் நான் அலைவதைக் கண்ட என் மனைவி, "சற்றுப் படுத்தாவது தூங்குங்களேன்; பொழுது போகவில்லையாக்கும்" என்றாள்.

உண்மையில் அன்று பொழுதே போகவில்லை. மணி யோசை மறுபடி எப்பொழுது கேட்கும் என்று, மனம் துடித்துக் கொண்டே இருந்தது. தலை வேதனையை உண்டு பண்ணிய சப்தம் நின்றதில், மனம் நிம்மதியாய் இருக்கலாம் அல்லவா? அதுதான் இல்லை.

"வாஸ்தவந்தான்" என்றார் தாம்பலம் வாசியான நண்பர் ஒரு [illegible]. அவர் மேலும் கூறினார்:

"கொசுக் கடி சகிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே, தினம் குறட்டை விட்டுத்தான் தூங்கிக்கொண்டிருந்தோம். 'கொசுவலை வாங்கிக் கட்டிக் கொள்கிறது தானே?' என்று யாரோ சொன்னார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டு ஒன்று வாங்கிக் கட்டினேன். அன்று இரவு தூக்கமே வரவில்லை."

"ஏன்?"

"கொசுக்கடி இல்லாததால்தான்."

நான் அவர் வார்த்தையை நம்புகிறேன். இப்பொழுது முன் போல் மணியோசை மீண்டும் கேட்கிறது; என் பேனாவும் தங்குதடையின்றி ஓடுகிறது.

✲

## கொன்ற உறுப்பு

மெர்லீ ஓபிரான் என்ற பிரபல சினிமா நடிகை, லண்டனில் காயம்பட்ட சோல்ஜர்களைப் போய்ப் பார்த்தாள்.

ஒரு சோல்ஜரை, "நீ ஒரு நாஜியையாவது கொன்றாயா?" என்று கேட்டாள்.

"கொன்றேன்."

"எந்தக் கையால் கொன்றாய்?"

"இந்தக் கையால்" என்று ஒரு கையை நீட்டினான் சோல்ஜர்.

அந்தக் கையைப் பிடித்து முத்தமிட்டு விட்டு, அடுத்தவனிடம் சென்றாள் நடிகை.

"நீ ஒரு நாஜியையாவது கொன்றாயா?" என்று அவனையும் கேட்டாள்.

"கொன்றேன். என் வாயால் கடித்தே அவனைக் கொன்றுவிட்டேன்" என்றான் அந்த சோல்ஜர்!

பிரதர்ஸ் கம்பெனியாரின்
அறிக்கை நெ. 2

# விலையுயர்ந்த ஆடைகளைப்பற்றி கவனமாயிருங்கள்



சில நாட்களுக்கு முன் ஒரு ஜோடி வேஷ்டி விலை 3½ ரூபாயிலிருந்து 12 ரூபாய்க்கு உயர்நதுவிட்டதாகப் பேப்பரில் வாசித்தோம் இந்த விலை சீக்கிரம் குறையுமென்று எதிர்பார்க்கிறோமானாலும் அவசியமான ஆடைகளுக்கு விலை ஏராளமாகத்தானிருககிறது. நல்ல துணிகள் சீக்கிரம் கெடுவதற்கு முக்கியமாகக் கர்னாடக வண்ணானிடம் போடுவதுதான். அவன் துணிகளை முதலில் பாறையில் அடித்து பிரகு திராகவத்துடன் கொதிக்கவைக்கிறான். இந்த பழைய வழக்கத்தை இப்பொழுது விட்டுவிட வேண்டும். நமக்கு சிக்கனமாகவும். துணிகளுக்கு பாதக முண்டாகாதவாறு வெளுக்கவும் வண்ணானை கட்டாயப் படுத்த வேண்டும்.



## கனமான ஆடைகளுக்கு

கனமான ஆடைகளை சுத்தம் செய்ய ஜலமும் ஸன்லைட் சோப்பும்தான் வேண்டியது. ஏனென்றால் ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை அழுக்கை நீக்கி தண்ணீரில் அலசியவுடன் துணிகளை சுத்தமாக்குகிறது. ஆகையால் அழுக்கைப் போக்குவதற்கு முதலில் செய்யவேண்டியது ஆடைகளின் அழுக்கடைந்த பாகங்களில் ஸன்லைட் சோப்பால் நன்றாய்த் தேயுங்கள் — அதிக அழுக்கு இருந்தால் நிறைய சோப் செல்லும் கனமான ஆடைகளை நன்றாயத தண்ணீரில் நனையுங்கள், பிறகு ஸன்லைட் தேயுங்கள். அதிக அழுக்குப் படிந்த இடங்களில் கொஞ்சம் நிறைய தேய்க்கவேண்டியது. நன்றாகக் கசக்கி எல்லா பாகங்களிலும் சோப் படும்படியாகச் செய்து, பிறகு அலசிவிட வேண்டியது. இதுதான் நன்றாய் வெளுக்கும் முறை. அதிக அழுக்குத் துணிகளை வேண்டுமானால் அவைகளில் சோப்பிருக்கும்போதே கொதிக்க வைக்கலாம். அலசும்போது நீலமும் போடலாம். ஆனால் துணிகளை அடிக்க மட்டும் செய்யாதீர்கள். அவைகளை திராகவத்துடன் எரிக்காதீர்கள்.

## நேர்த்தியான ஆடைகள்

விலையுயர்ந்த, நேர்த்தியான ஆடைகளை வெளுக்க இன்னும் மிருதுவான முறையைக் கையாள வேண்டும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதில் ஒரு கைலக்ஸைப் போடுங்கள. அதிக நுரை வரும்படி கையால் கடைந்து பிறகு வெளுக்கவேண்டிய துணிகளை அதில் போட்டு மெதுவாகக் கசக்குங்கள். இந்த மாதிரி கசக்குவதிலேயே அழுக்கு வெளியேறிவிடும். பிறகு நன்றாய் இரண்டு மூன்று தடவை அலசவேண்டியது. (லக்ஸ் பாக்கெட்டின் மேல் அச்சடித்திருக்கும் முறைகளைப் படியுங்கள்).

## கவனமாக சலவை செய்தால் காசு மிச்சம்

இந்த மென்மையான, சரியான சலவை செய்யும் முறையையும், வண்ணான் பாறையில் அடிக்கும் முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதிலிருந்து நல்ல சோப்பை சரியாக உபயோகித்தால் நாளடைவில் பணம் மீதமாகுமென்று தெரிகிறதல்லவா!

**லிவர் பிரதர்ஸ்—நல்ல சோப் உற்பத்தியாளர்கள்**

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ்
லைப்பாய் டாய்லெட் • விம் • மங்கி பிராண்டு

L.COM. 32-50TM

# எக்ஸ்-மா (X-MA)வை

## உபயோகிக்கவும்

### மற்ருெரு சமீபகால நற்சாட்சி பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

தங்கள் அரிய எக்ஸ்-மா ஆயின்ட்மெண்டால் குணமடைந்து, நான் இதை பம்பாயிலுள்ள ஒரு ஸ்திரீக்கு வெகுவாக சிபார்சு செய்கிறேன். பம்பாயில் உங்களுக்கு பிரஞ்சு இருந்தால், அவளுக்கு ஒரு புட்டி கொடுக்கும்படி செய்யவும். இல்லேயேல் உங்களது மதராஸ் ஆபீஸிலிருந்து அவளுக்கு அனுப்பவும்.

உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)..........................................




கரப்பான் சொறி போன்ற சரும வியாதிகளுக்கு தக்க மருந்து ஸ்பென்ஸரின் எக்ஸ்-மாதான். இது கீழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றது. எல்லா நாடுகளிலும் அதை வாங்கியவர்கள் பரம திருப்தி அடைந்துளர். ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்த வண்ண மிருக்கின்றன. அதன் அபார விற்பனேயே அதன் குணத்திற்குச் சான்று. இதற்குமுன் இதை 'ஸ்மித்ஸ்' அன்குவென்டம் டெடர்ஜென்ஸ்' (**Smiths unguentum Detergens**) என்றழைத்தார்கள். சரும வியாதிகளின் நிவாரணியான இதற்கிணே வேறெதுவுமில்லே. 'கரப்பான், வண்ணன்சொறி, எரிதிமாமோன்ற சரும வியாதிகளுக்கு எரிச்சல் கொடாத மருந்து எக்ஸ்-மா ஒன்றுதான்.

### உபயோகிக்கும் விதம்

காலேயிலும் மாலேயிலும் சொறி கண்டவிடத்தில் நன்ருகத் தடவ வேண்டும். சொறிமீது காற்றுப் படாமலிருக்க மெல்லிய துணி போட்டு மூடுவது நலம்.

இந்த மருந்து தயாரிப்பவர்கள்

**ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்**

ஒன்றுதான்

**கைக்கு அடக்கமான புட்டி**

**ரூ. 1-4-0**

வர்த்தக சம்பந்தமான விசாரணேகள் கோரப்படுகின்றன:

## ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்,

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

## SPENCER & CO., LTD., MADRAS.

# கர்ம வீரன் கரிபால்டி



சுவாமி சுத்தானந்த பாரதியார்

மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை; ஒரு வீடு அவ்வீட்டாருக்கே உரியது; ஒரு நாடும் அந்த நாட்டாருக்கே உரியது— இந்த உண்மையை நிலைநாட்ட எழுந்த **கர்மவீரர்** பலர். அவர்களில் சிலர் பேனாவால் உரிமையுணர்வைத் தூண்டினார்கள்; பலர் வாளால் அடிமைத் தளையை வெட்டியெறிந்தார்கள். **கிராம்வெல்** இங்கிலாந்தில் **சுதந்தரப்** போர் புரிந்து குடியரசு நாட்டினான்; அங்கே ஓர் அரசன் சுதந்தரக் காளிக்குப் பலியானான்; பிறகு, பிரான்ஸில் முடியரசு சாய்ந்தது. பதினாலாம் லூயி மன்னன் பலியானான்; குடியரசு தழைத்தது. அதன்பின், அமெரிக்காவில் **ஜார்ஜ் வாஷிங்டன்** குடியரசு நாட்டினான். பிறகு, ஆஸ்திரியாவுக்கு அடிமையாயிருந்த **இத்தாலி,** சுதந்தர முழக்கத்துடன் எழுந்தது. இத்தாலியை நினைக்கும்போது, நம்முன் இரண்டு வீரர் நிற்கிறார்கள். ஒருவன் **மாஜினி;** மற்றவன் **கரிபால்டி.** மாஜினி சிறந்த பேச்சாளன், எழுத்தாளன், சரித்திரப் புலவன், அரசியல் நிபுணன், தியாகவீரன். கரிபால்டி அறிவும், ஆற்றலும், அளவற்ற மனவுறுதியும், தைரியமும், சௌரியமும் நிரம்பிய கர்மவீரன். மாஜினி பேனாவினால் இளம் இத்தாலியைத் தூண்டினான். கரிபால்டி வாளினால் போர் புரிந்து சுதந்தரக் கொடியை நாட்டினான். **மிலானில்,** கரிபால்டி குதிரைமேல் அமர்ந்த சிலை ஒன்றுள்ளது. அதை வணங்காத சுதந்தர வீரர் இல்லை. கரிபால்டிதான், பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த கர்மவீரன்.

**ஜீஸெப்** கரிபால்டி (Giuseppe Garibaldi) நீஸ் (Nice) என்ற ஊரில் 4-7-1807ல் பிறந்தான். கரிபால்டியின் தகப்பனார் வியாபாரக் கப்பல் நடத்தினார்; அவர் நேர்மையும் நாட்டன்பும் கொண்ட உத்தமர்; தாய் கிறிஸ்து பக்தை. கரிபால்டி காலத்துக்குரிய கல்வி கற்றான்— வானநூல், பூமிநூல், கணிதம், வணிகக்கலை, கப்பலோட்டல், போர்க்கலை ஆகியவற்றில் அவன் புலமை பெற்றான். தாயார் சமயக் கல்வி கற்று, மதபோதகனாகும்படி சொல்லி, அவனை வற்புறுத்தினாள். கரிபால்டி மறுத்தான். வீட்டை விட்டு ஓடிச் சில காலம் நாட்டு நிலைமையறிந்து சுற்றி வந்தான். பின்பு, தந்தையுடன் கப்பலோட்டினான். 25-ஆம் வயதில் கரிபால்டி, கப்பல் நடத்துவதிலும் கப்பல் போர் புரிவதிலும் ஒப்பற்ற தலைவனானான். இளமையிலேயே நாட்டன்பு அவனைப் பற்றிக்கொண்

இத்தாலி நாடு, வெறி பிடித்த ஹிட்லரோடு சேர்ந்ததால், இன்று சீரழிந்து கிடக்கிறது. முன்னொரு காலத்திலும் அது அப்படி உருக்குலைந்திருந்தது. அதை அப்போது ஓர் உன்னத தேசபக்தன் ஐக்கியப்படுத்திப் புனர்நிர்மாணம் செய்தான். அந்த தேசபக்தி மிக்க வீரன் கரிபால்டியின் சரித்திரம், தீரச் செயல்கள் நிறைந்ததாகும்.

மிகவும் ஆழ்ந்து கற்றான். சுதேசம் உருக்குலைந்து சின்னாபின்னமாகிக் கொடுங்கோலாட்சிக்குட்பட்டு வருந்தும் கொடுமையை, அவனால் பொறுக்க முடியவில்லை.

இக்காலமே மாஜினி இளம் இத்தாலி (Young Italy) என்ற சங்கமும் இதழும் பிரசுரங்களும் நடத்தி, நாட்டை விடுதலைக்குத் தயாரித்தான். மாஜினியின் வீரப் படையில் கரிபால்டி சேர்ந்தான். அந்நாளில் பீட்மாண்டும் (Piedmond) ஸார்டீனியா (Sardinia)வுமே ஜனங்களிடம் அநுதாபங் கொண்ட அரசுகள். கரிபால்டியை ஸார்டீனியா மன்னன் வரவேற்றான். கரிபால்டி ஸார்டீனியாவின் கப்பல் படையை நடத்தி ஜினோவாவைக் கைப்பற்றிக் குடியரசு நாட்ட, மாஜினியுடன் 1834-ஆம் ௵ மும்முரமாக வேலை செய்தான். மாஜினி தரை வழியே வருவதென்றும் கரிபால்டி துறைவழியே வருவதென்றும் பேச்சு. கண் கொட்டாது விழித்திருந்த ஆஸ்திரிய அரசாங்கம், இந்தச் சூழ்ச்சி பலிக்கவிருந்த சமயத்திலே, இதைக் கண்டுபிடித்துவிட்டது. மாஜினி சிறைப்பட்டான். கரிபால்டிக்கு மரண தண்டனை விதித்தார்கள். ஆனால், **ஆள் எங்கே?**

கப்பல் கூலியாள் போல வேஷம் போட்டுக்கொண்டு, கரிபால்டி தென்னமெரிக்காவுக்கு ஓடித் தப்பினான்.

தென்னமெரிக்காவிலும், கரிபால்டி ஜன சுதந்தரத்துக்காகவே போர் புரிந்தான். கரிபால்டி நேர்மையான கனவான்; உண்மையான வீரன்; ஏழைக்கிரங்கும் வள்ளல்; அடிமைப்பட்ட நாட்டை விடுவிக்கும் தலை கொண்ட சிறு நாடுகளுக்காக வாள் பிடித்துப் பெரிய நாடுகளை எதிர்த்துப் போராடினான். பிரஜீலுடன் போர் புரிந்து சுந்தரக் கொடி நாட்டினான். போர்க் கைதிகளை அவன் மிகவும் அன்புடன் நடத்தினான். பிரஜீலில் அநிடா (Anita) என்ற அழகான பெண்ணரசி அவன்மேல் காதலுற்றாள்; அவளை, கரிபால்டி மணம் புரிந்து மூன்று புதல்வரைப் பெற்றான். சண்டையிலும் சமாதானத்திலும், தன் கணவனுக்குத் தொண்டு செய்து, கற்புள்ள மனைவியாக அனிடா விளங்கினாள்.

கரிபால்டி தென்னாப்பிரிக்காவிலிருந்த இத்தாலியரைப் படைசேர்த்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து, சமயம் பார்த்திருந்தான். தன் தேசம் அடிமையாயிருப்பது, அவனுக்கு ஆறாத் துயராயிருந்தது. 1848-ஆம் ௵ கரிபால்டி தன் படையுடன் கப்பலேறித் தந்திரமாக ஸார்டீனியாவுக்கு வந்தான். ஆனால், அங்கே அரசன் வரவேற்கவில்லை; ஜனங்கள் இரகசியமாக அவனுக்கு உதவினார்கள். இச்சமயம் லம்பார்டியில் விடுதலைப் புரட்சி தோன்றியது. கரிபால்டி அங்கே சென்று, ஆஸ்திரியப் படையுடன் போர் புரிந்தான். அரசாங்கப் படை, தொகையிலும் பலத்திலும் அதிகம். அதோடு பிரெஞ்சுக்காரரும் அரசாங்கத்துக்கு உதவினார்கள். புரட்சிப்படை கடும்போர் புரிந்தும், அரசாங்கத்தை வெல்ல முடியவில்லை; லம்பார்டி மன்னனே ஆஸ்திரியாவுக்கு இணங்கிச் சமாதானம் செய்துகொண்டான். கரிபால்டி, மாஜினியுடன் சேர்ந்து, வீரப்போர் புரிந்தான். எதிரிகளின் கையில் ரோமாபுரி வீழ்ந்தது. அதோ பகைவர்,

கள். ஆளைக் காணோம்! எங்கே?

கரிபால்டி மீண்டும் மாறுவேஷம் போட்டுக் கொண்டான். அனிடா ஆணுடை தரித்தாள். இருவரும் தம் வீரருடன் குதிரை யேறி வெனிஸ் நகரம் சென்றார்கள். அங்கேயும் ஒற்றர்கள் வந்தார்கள். அங்கேயிருந்து, ராவென்னு என்னும் இடத்துப் பைன் மரக் காடுகளில் ஒளிந்து வாழ்ந்தார்கள். ஆ! அங்கே அனிடா இறந்தாள்.

அனிடாவின் உடலைப் புதைத்து, அவளுக்காகக் கண்ணீர் வடித்து, கரிபால்டி ஸ்வித்ஜர்லாந்துக்குச் சென்றான். எப்படியாவது அவனைக் கொல்லவே ஆஸ்திரியர் முயன்றார்கள். அரிய நண்பர் பலர், பகைவரின் துப்பாக்கிக்கு இரையானார்கள். துரோகிகளும் அவனைப் பிடித்துக் கொடுக்க முயன்றார்கள். கரிபால்டி துஸ்கனிக்கு ஓடி, அங்கிருந்து கப்பலேறி மீண்டும் அமெரிக்காவுக்குத் தாவினான்.

நியூயார்க்கில் சிலகாலம் கரிபால்டி வசித்தான். கையில் பணமில்லை; மெழுகுதிரி செய்து விற்று, தானும் பிழைத்துக் கையில் கொஞ்சம் தொகையும் மிகுத்தி வைத்துக் கொண்டான். மேலும் ஒரு வியாபாரக் கப்பல் நடத்தினான்; அதிலும் கொஞ்சம் பணம் சேர்ந்தது. ஒரு தரம் கரிபால்டி இங்கிலாந்துக்குச் சென்றான். அரச விருதுகளுடன் அவ்வீரனை வரவேற்று, ஆங்கிலேயர் உபசரித்தார்கள். நியூகாசில் நகரத் தொழிலாளர், அவனுக்கு ஒரு வீர வாள் பரிசளித்தார்கள். கரிபால்டியின் வீர உறுதியை இங்கிலாந்து வியந்து போற்றியது. "என் தேசம் பிரிவினையால் அடிமைப்படுகிறது; அன்றே விடுதலை உறுதி" என்றான் கரிபால்டி.

கரிபால்டி 1854-ஆம் ஆண்டு ஸார்டீனியாவுக்கு வந்தான். அதன் அருகே **காப்ரெரா (Caprera)** என்றோர் அழகான தீவிருந்தது. அந்தத் தீவை அவன் விலைக்கு வாங்கி, அதில் அழகான மாளிகை எழுப்பிப் பயிர்த் தொழில் செய்து அமைதியாக வாழ்ந்தான். வாளும் துடுப்பும் பிடித்த கை, கலப்பை பிடித்தது. காப்ரெராவில் **'கரிபால்டி வீடு'** இன்னும் இருக்கிறது.

கரிபால்டியின் கைதான் கலப்பை பிடித்தது; மனம் தேச விடுதலைக்காக வாள் பிடிக்கத் துள்ளிக் கொண்டிருந்தது. பிரிவினைகள் ஒழிய வேண்டும்; தம்மவரை, அன்னியருக்குக் காட்டிக் கொடுக்கும் துரோக வஞ்சனை ஒழிய வேண்டும்; இத்தாலியர் ஒன்று சேர்ந்து 'நம் நாடு நமக்கே' என்ற உணர்ச்சி பெற வேண்டும்; யாராவது ஒரு மன்னன் கிளம்ப வேண்டும்—இதற்கே கரிபால்டி காத்திருந்தான். அதற்காக இரகசியமாக வேலையும் செய்தான். அதன் பயனாக, ஸார்டீனியாவின் மந்திரி கவூர் எழுந்தான். தன் அரசனை விக்டர் எமானுவெல் **(Victor Emmanuel)** என்பவனின் உள்ளத்தில் கனலைத் தூண்டினான். பாரிஸ் அரசியல் மகாநாட்டுக்குச் சென்றான். இத்தாலியில் ஆஸ்திரியா செய்யும் கொடுமைகளை அங்கே கூறி வீரிட்டான். அப்போது பிரெஞ்சு மன்னனாக மூன்றாம் **நெப்போலியன்,** ஆட்சி புரிந்தான். அவன் கூட இத்தாலியின் பால் அனுதாபங் காட்டி வாளுதவி புரிந்தான்.

ஆண்டு மூண்டது. ஆஸ்திரியா ஆத்திரத்துடன் எதிர்த்தது. கரிபால்டி போர்முனைக்குத் தாவினான். வெற்றி மேல் வெற்றி கிடைத்தது; எதிரி பதறினான்; லம்பார்டிக்குச் சுதந்தரம் அளித்தான்; அதனோடு எமானுவெல் சமாதானம் செய்து கொண்டான். ஆனால், தான் செய்த உதவிக்காக **ஸாவாய்** மாகாணத்தை, பிரான்ஸ் கைப்பற்றிக் கொண்டது; வெனிஸ் நகரமோ இன்னும் எதிரி கையிலேயே இருந்தது. கரிபால்டிக்கு இந்தச் சமாதானம் பிடிக்கவில்லை. இத்தாலி பூரண சுதந்தரம் பெற, அவன் எடுத்த வாளைக் கீழே வைக்காமல் போராடலானான். நாட்கணக்கில் குதிரை சவாரி செய்து நாடெல்லாம் சுதந்தரக் கனலைத் தூண்டினான். ஜினேவாவில் ஆயிரம் சூரரைக் கூட்டினான்; அவர்களிலே தொழிலாளரும், வணிகரும், வழக்காளரும், சிற்பிகளும், மருத்துவரும் இருந்தார்கள். "தலைவனே! உன்னைப் பின்பற்றுகிறோம்! அதனால் எங்களுக்கு லாபமென்ன?" என்று அவர்கள் ஒருநாள் கேட்டார்கள். "வீரர்களே! என்னைப் பின்பற்றுவது இத்தாலியத் தாயைப் பின்பற்றுவதாகும். அதனால் வரும் லாபம், கேலி, வசவு, பகைவாள், பட்டினி, சிறை, தூக்குமேடை, சாவு, தேசத்துக்காக உயிரைத் தரும் தியாகப் புகழ்—இவையே. சம்மதமா? உயிரை விடத் தேசம் உயர்வு என்று நம்புகிறீர்களா? அப்படியானால், வாருங்கள்; இல்லையானால் வீட்டுக்குச் செல்லுங்கள்!" என்று கர்ஜித்தான் கரிபால்டி. வீரர் 'வருகிறோம்; உயிரைத் தருகிறோம்'' என்று முரசு கொட்டி முன் சென்றார்கள். **'கரிபால்டியின் ஆயிரம் வீரர்'** (Garibaldi's பெற்றார்கள். உள்ளத்தில் நாட்டுணர்வு துடித்தவர், கரிபால்டியை வணக்கத்தோடு பின்பற்றினார்கள். ஆவேசமாகப் படை நடத்திப் போர் புரிந்து, வெற்றி மேல் வெற்றி பெற்றான் வீரன். மூன்று மாதம் போர் புரிந்து **ஸிஸிலியைப்** பிடித்து, கரிபால்டி முன் சென்றான்; நேபிள்ஸைக் கைப்பற்றினான்; ரோம் நகரை வெல்லச் சென்றான்; போப்பாண்டவர் இருக்கும் அந்தப் புனித நகரில் இரத்தம் சிந்த வேண்டாமென்று, விக்டர் எமானுவெல் தடுத்துவிட்டான். எப்படியோ சுதந்தரக்கொடியை நாட்டினான் கரிபால்டி.

அவனுக்குப் பட்டம் பதவி தந்து புகழ்முடி சூட்ட, நாடெல்லாம் உற்சாகமாய் எழுந்தது. "நான் என் கடமையைச் செய்தேன்; அதற்காகப் பட்டம் பதவிகளை வேண்டேன். புகழ்க் கூலிக்கன்று; இத்தாலிக்கே, நான் தொண்டு செய்தேன்" என்று சொல்லிய கரிபால்டி, விக்டர் எமானுவேலைச் சிம்மாசனமேற்றி, தான் அடக்கமாக வீடு திரும்பிப் பயிர்த்தொழிலே புரிந்தான். தலைநகரான ரோமாபுரி, அன்னியர் ஆட்சியிலிருப்பது அவனது மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது. இரண்டு மூன்று தடவை படை நடத்தினான்; ஒரு தடவை ரோமைப் பிடித்து விட்டான்; ஆனால், பிரெஞ்சுப் படை வந்து பறித்துக் கொண்டது. முடிவில் 1870-ஆம் ஆண்டு விக்டர் எமானுவேலே படையெடுத்து ரோமை வென்றான். அன்றுடன் போப்பின் அரசியல் ஆதிக்கம் முடிந்தது. கரிபால்டியை இத்தாலி, வீரத்தெய்வமாகக் கொண்டாடியது. அவன் இத்தாலிய மன்றத்

காலம் இருந்து, ஜனங்களுக்கு அளவற்ற நன்மைகள் செய்தான். ஆயிரம் இடர்களால் வருந்தி நொந்த அவனது உடல் நலிந்தது; தியாகத் தீயில் வாட்டி வாட்டி வருத்தப்பட்ட அது மெலிந்தது.

கரிபால்டி தன் இறுதி நாட்களை, காப்ரெராவிலேயே கழித்தான். வாள் பிடித்த கை, பேனுப் பிடித்தது. கரிபால்டி, தேச முன்னேற்றத்துக்கான கட்டுரைகளைத் தாராளமாக எழுதி வெளியிட்டுப் பொதுநல உணர்வை வளர்த்தான். ரோம் பார்லிமெண்டு அவனுக்கு மாதம் 2000 லீரா (சுமார் 1250 ரூபாய்) சன்மானம் அளித்தது; முதலில் அதை மறுத்தான். ஆனல், நாடே தொகையை வாங்கித் தேச நலத்துக்கே செலவிட்டான் கரிபால்டி. இத்தாலியில் பயிர் வளம் செழிக்க, அவன் பல நீர்ப்பாசனங்கள் ஏற்படுத்தினுன். வியாபாரச் செழிப்புக்காகக் கப்பல்களைக் கட்டினுன். நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கி வறுமையின்றிக் குடிகள் வாழச் செய்தான். மூச்சுள்ள மட்டும், அவன் தேச நலத்துக்கே உழைத்தான். 2–6–1882-ஆம் வ கரிபால்டி தன் வீட்டிலேயே அமைதியாக உயிர் நீத்தான். 'சுதந்தர வீரசிகாமணி; தேசத்துக்கே வாழ்ந்த தியாகச் சிங்கம்' என்று நாடும் உலகும் கரிபால்டியைப் போற்றியது. உலக சரித்திரத்தில் கரிபால்டியின் வீரம் உயர்ந்து விளங்குகிறது.

## தந்திர ஊழியன்

நாடிர் ஷா டில்லிமீது படையெடுத்து, முகலாய சக்கரவர்த்தியான முகம்மது ஷாவை வென்று, 1739-ம் ஆண்டில் டில்லிக்குள் பிரவேசித்தார்.

முகம்மது ஷாவின் ராஜ சபையில், இருவருக்கும் காப்பி வந்து சேர்ந்தது. அதை எடுத்து அவர்களிடம் கொடுக்க வேண்டிய ஊழியன் பாடு தர்ம சங்கடமாயிற்று. யாருக்கு முதலில் கொடுப்பது? தன் எஜமானுக்கு முன்னே கொடுத்தால், நாடிர் ஷா தன் தலையை வாங்கி விடுவார். நாடிர் ஷாவுக்கு முதலில் கொடுத்தால், தன் எஜமானரைத் தானே அவமதிப்பதாகும். ஆகையால், அவன் ஒரு யுக்தி செய்தான். காப்பியை ஒரு தங்கக் கிண்ணத்தில் எடுத்து, தன் மன்னரிடம் சென்று, "உங்கள் விருந்தினராய் வந்திருக்கும் மன்னுதி மன்னருக்குக் காப்பி அளிக்கும் கௌரவத்தை நான் அடையலாகாது. நீங்களே தான் கொடுக்க வேண்டும்" என்று நீட்டினுன்.

ஊழியனின் யுக்தியை வியந்த நாடிர் ஷா, "உங்கள் ஊழியர் அனைவரும் இவனைப் போலவே தம் கடமையை அறிந்து செய்திருப்பார்களானல், என்னையோ என் வீரர்களையோ இங்கே நீங்கள் பார்த்தே யிருக்க மாட்டீர்கள்; நாங்கள் வந்தே யிருக்க முடியாது" என்ருர்.

# வேலை தேடிய ரங்கன்

சியாமளா பாலகிருஷ்ணன்

குண்டு வீச்சுக்குப் பயந்து பட்டணத்தை விட்டோடிய ரங்கன், பொங்கல் பண்டிகையன்று திரும்பி வந்தான். மூன்று வாரங்கள் வேலையில்லாமல் தெருத் தெருவாக அலைந்தும், அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. தன் உறவினர்கள், தன் கிராமத்திலிருந்து வந்திருந்த சிநேகிதர்கள் ஆகிய ஒவ்வொருவர் வீட்டிலும் இரண்டு இரண்டு நாட்கள் தங்கி, ஒரு விதமாய்க் காலட்சேபம் செய்தான். அவ்விதம் வயிற்றுக்குச் சோறு படைத்துக் கொண்ட போதிலும், தனக்கு வேலையில்லாமல் பிறரை அண்டிப் பிழைப்பதை நினைத்து, அவன் மனம் சோர்ந்தான்.

அவன் சிறு வயதிலே பட்டணத்துக்கு வந்தது முதல் இன்று வரை வேலை யில்லாமல் இருந்ததில்லை. முதலில் ஒரு டாக்டரிடம் சிற்றாளாயும், பிறகு ஒரு தனவந்தர் வீட்டில் தோட்டக் காரனாயும் இருந்தான். சென்ற இரண்டு வருஷங்கள் ஓர் எண்ணெய் வியாபாரியிடம் வேலை செய்து வந்தான். இந்தக் குண்டு அபாயம் வந்திருக்காவிட்டால், அவன் அந்த வேலையிலேயே இருந்திருப்பான். கிராமத்தில் இருந்திருந்தாலாவது பயிர்த் தொழில் தெரிந்திருக்கும். ஆனால், சிறு வயதிலிருந்தே அவன் பட்டணவாசியானதால், அவனுக்குக் கிராம வாழ்வில் உற்சாகமே இருக்கமுடியாது என்று தோன்றிற்று. பட்டணத்தில் வேலை கிடைக்காவிட்டால், பிச்சை யாவது எடுத்துப் பிழைக்கலாம் என்று வந்து விட்டான். என்றாலும், வேலை யில்லாமல் தெருக்களில் சோம்பேறியாகச் சுற்றிக் கொண்டிருக்க முடியவில்லை. தனக்குத் தெரிந்தவர்கள் அனைவரையும் வேலைக்காக விசாரித்தான். கடைசியாகத் தெருக்களில் போவோர் வருவோரை யெல்லாம் நிறுத்தி வேலை கேட்க ஆரம்பித்தான். ஒன்றும் பயன் படவில்லை.

உற்றார் உறவினரின் வீடுகளிலே தங்குவதற்கும் ஒரு வரம்பு இல்லையா? நாட்கள் செல்லச் செல்ல, சிலர் அவனைக் கண்டால் முகம் சுருங்கினார்கள்; சிலர் தங்கள் முகங்களைத் தாட்சண்ய மில்லாமல் திருப்பிக் கொண்டார்கள்; சிலருக்கு அவன் வருகையினால் தங்கள் எஜமானர்களிட மிருந்து வசவு கிடைத்தது. ஆகவே, அவன் பல நாட்கள் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது.

## 2

அடையாற்றுப் பாதையிலிருந்த தன் சிநேகிதன் ஒருவனைப் பார்க்க, ஒருநாள் அவன் சென்றான். அந்தச் சிநேகிதன், கோகுல் தாஸ் என்ற வியாபாரியிடம் அநேக வருஷங்களாக மோட்டார் டிரைவராய் அமர்ந்திருந்தான். அவன் மூலம், தான் ஏதா

அவன் வேலை தேடுகிறான். கைக்குக் கிட்டும் சமயத்திலே, என்ன தர்மசங்கடம்! ஓர் ஏழையின் உள்ள உணர்ச்சியைச் சித்தரிக்கும் இந்தக் கதை, **ஸெம்யனுவ்** என்ற ருஷிய ஆசிரியர் எழுதிய கதை ஒன்றைத் தழுவியது. **சியாமளா** நம் நாட்டுச் சுற்றுணர்ச்சியைப் புகுத்தி இதனை எழுதியுள்ளார்.

என்ற ஆசை ரங்கனைத் தூண்டிற்று. அந்த டிரைவர் மீது கோகுல் தாஸுக்கு அதிக நம்பிக்கையும் மதிப்பும் உண்டு என்று ரங்கனுக்குத் தெரியும்.

டிரைவர் தன் நண்பனை அன்புடன் வரவேற்று, சோறும் குழம்பும் வழங்கி, க்ஷேம லாபங்களும் விசாரித்தான்.

"என்னென்னு சொல்றது, மாமா; நான் வேலை யில்லாமே வாரக் கணக்கா அலஞ்சிக்கிட்டு இருக்கேனே" என்று ரங்கன் வருத்தத்தோடு தெரிவித்தான்.

"பழைய எசமாங் கிட்டே போயி, வேலை கேக்கறது தானே?"

"கேட்டேன்."

"வேணுன்னுட்டாங்களா?"

"என் எடத்துக்கு வேறே ஆள் வச்சுட்டாங்களாம்."

"அப்படியா? இந்தக் காலத்துப் பிள்ளேங்களே இந்த மாதிரி தான். நீங்க வேலே செய்யற லட்சணம்! கொஞ்ச நாள் வேலெயெ உட்டுட்டுப் போனு, அவங்க வேணுன்னும், படியா இருக்கு? வேலே செய்யறத்துலே செஞ்சா, நீ எங்கே போய்த் திரும்பி வந்தாலும், பதில் ஆளைத் துரத்திட்டு உன்னைத் தானே வச்சுப்பாங்க?"

"என்ன மாமா, இந்த நாள்ளே அந்த மாதிரி எசமான் ஏது? நாம்பளுந்தான் அப்படி ஒரு தப்புக்கூடச் செய்யாமே இருக்க முடியுமா?

"சும்மாப் பேசி என்னப்பா பிரயோசனம்? இதோ, என்னைப் பாரு. நான் ஏதோ வேலையாக் கொஞ்ச நாள் கிராமத்துக்குப் போயிட்டு வரேன்னு வச்சுக்க. எங்க ஐயா சந்தோஷத்தோடெ என்னே வேலைக்கி வச்சுப்பாரு."

ரங்கன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, உட்கார்ந்திருந்தான். அவனுக்குத் தன் நண்பன் பெருமை அடித்துக் கொள்வதாகத் தோன்றிற்று. ஆயினும், அவனைத் திருப்தி செய்ய எண்ணி, "எனக்குத் தெரியும். ஆனாலும், உன் மாதிரி



வம், மாமா. நீ நல்லா உழைக் காட்டி, எசமான் உன்னெப் பன்னண்டு வருஷமா வச்சிருப்பாரா?'' என்றான்.

ரங்கனின் வார்த்தை, டிரைவரை உச்சி குளிரச் செய்தது.

"ஆமா, நீ என்னுட்டமா ஒழச் சாக்க, இப்படி வேலே இல்லாமே திண்டாடுவாயா?''

"ரங்கன் மௌனம் சாதித்தான், அதற்குள் டிரைவரை அவனுடைய எஜமான் கூப்பிட்டார்.

"கொஞ்சம் இரு; நான் வந்துட்டேன்'' என்று சொல்லிவிட்டு, அவன் சென்றான்.

## 3

சிறிது நேரத்துக்கெல்லாம், டிரைவர் திரும்பி வந்தான். அவனுடைய எஜமான், தாம் அரைமணியில் வெளியே புறப்படப் போவதால், காரைத் துடைத்து வாசலில் கொண்டு வரும்படி உத்தர விட்டிருந்தார். அவன் குடிசையில் நாலு தரம் இங்கும் அங்குமாக நடந்துவிட்டு, கடைசியில் ரங்கனுக்கு எதிரில் வந்து நின்றான்.

"இதோ பாரு, ரங்கா. உனக்கு வேணும்னு ஐயர்கிட்டச் சொல்லி, உன்னெ இங்கே வேலேக்கி எடுத்துக்கச் சொல்லறேன்.''

"அவருக்கு வேலேக்காரன் வேணுமா?''

"இங்கே ஒத்தன் இருக்கான்; அவன் பிரயோசனமில்லே. அவனுக்கு வயசு ஆயிடுத்து. வேலே செய்யறதே சிரமமா இருக்கு. நல்ல வேளையா இந்த எடம் ஊரை விட்டு வெளிலே இருக்கு. இல்லாவிட்டாலும் பாக்கறவா இல்லே.''

"உன்னாலே முடியும்னா எனக்காக இந்த உதவி பண்ணு, மாமா. நான் மனசார உன்னெ எப்பவும் எண்ணுவேன். என்னாலே இன்னமே வேலேயில்லாமே, ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது.''

சரி, நான் சொல்லிப் பாக்கறேன். நாளேக்கி வா. இந்தா, சாப்பாட்டுக்கு இந்த நாலணாவெ வச்சுக்கோ.''

"உன்னெக் கையெடுத்துக் கும்பிடறேன், மாமா. எனக்காகக் கேட்டுப் பாக்கறயா? தயவு செஞ்சு, எனக்கு இந்த உதவி மட்டும் பண்ணு.''

"சரி; நான் கேட்டுப் பாக்கறேன்.''

## 4

கோகுல்தாஸ் பிராட்வேயில் தம் அலுவல்களே முடித்துக் கொண்டு வீடு திரும்பிய பொழுது உற்சாகமாய் இருந்ததைக் கண்ட டிரைவர், "சாமி, உங்களே ஒண்ணு கேக்கணும்'' என்று மெதுவாக ஆரம்பித்தான்.

"என்ன?''

"என் கிராமத்துப் பையன் ஒத்தன் வந்திருக்கான். ரொம்ப நல்லவன். வேலே இல்லாமே திண்டாடிண்டு இருக்கான்.''

"உம்.''

"நீங்க வேலேக்கி வச்சுக்கிறீங்களா?''

"எனக்கு எதுக்கு ஆளு?''

"தோட்டக்காரனய் வச்சுக்கலாமே. அவன் மிச்ச வேலேயும் செய்வான்.''




## சமையல் வேலைகளை சீர்படுத்த வருகிறது




# காமதேனு வனஸ்பதி

உயர்தரமான பொரியல் சாதனம் இதோ வந்துவிட்டது. காமதேனு மணமற்றது. ஆகையால் அதைக்கொண்டு தயாரித்த ஆகாரவகைகள் அவற்றின் இயற்கை மணத்தை இழப்பதில்லை. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ளது. வைடமின்கள் நிறைந்தது. பரிசுத்தமானது. கைபடாமல் தயாரிக்கப்பட்டது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு. நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு

தயாரிப்பவர்கள் :

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.**

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK.I.TM.

# நகை அவசரம்

**லலிதா :** என்னடியம்மா, சுசீலா! அன்றென்ன திடீரனு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டே? எல்லாருமாய், ஸினிமாவுக்குப் போகலாமின்னு, நினைத்து, வண்டி கொண்டுவரச் சொன்னேன். அதற்குள் நீ போய்விட்டயே!

**சுசீலா :** ஒண்ணுமில்லே, அக்கா! என்னவாவது தப்பாய் நினைச்சுக்காதேங்கோ. நகை செய்யும் ஆசாரியாரை, வரச்சொல்லி யிருந்தேன். நினைவு மறதியாய் இங்கே வந்துவிட்டேன். வந்ததும், சட்டென்று நினைவு வந்தது. அந்த அவசரத்தில் உங்களிடம் சொல்லிக் கொள்ளக் கூட ஞாபகமில்லாமல் போய்விட்டேன். வேறொண்ணுமில்லே.

**லலிதா :** நகையா! ஓ! இதோ உன் பெண் சுந்தரியின் முகமே ரொம்பக் களையாயிருக்கே! இந்தத் தோடும் பேஸரியும் பிரமாத டால் அடிக்கிறதே! குழந்தையை ரொம்ப லட்சணமாய்க் காட்டுகிறது இந்த நகை ரெண்டும்.

**சுசீலா :** ஆமாம், அக்கா! இந்த நகைகளைச் செய்யத்தான் ஆசாரியாரை அழைத்திருந்தேன். ஏதோ மூக்கு முழி மூளியில்லாமே, காலா காலத்திலே குழந்தைகளுக்கு இரண்டு நகைகளைப் பண்ணிப் போட்டால்தானே பாந்தமாயிருக்கு?

**லலிதா :** குழந்தைகள் என்ன? பெரியவாளுக்குக் கூட, நகை நட்டுகள் இல்லாத போனு, நன்னுயில்லே—ஆமாம், இதென்ன முந்நூறு நானூறு ரூபா செலவாகியிருக்கும் போலே யிருக்கே இந்த வைரங்கள்? பணம் முடை, பணம் முடையின்னு என் கிட்ட நீ பொய்தானே சொன்னே?

**சுசீலா :** முந்நூறு மில்லே, நானூறு மில்லே, அக்கா. **தோடு சைஸ் 12 அணு, பேஸரி சைஸ் 10 அணு.** இந்த வைரங்களின் விலை இதுதான்.

**லலிதா :** என்னடீ, பரிகாசம் பண்ணறே! இந்த வைரம் என்னமாய் ஜொலிக்கறது! நீ சொல்றதை நான் நம்பவே மாட்டேன்.

**சுசீலா :** இது திருச்சினுப்பள்ளியில் ஒருத்தர் கண்டு பிடித்திருக்கார். இதுக்குப் பேர் '**ஒரிஜனல் டைனமோ கல்ச்சர் வைரம்.**' உயர்ந்த வைரம் மாதிரி ரொம்ப அழகாயிருக்கு; இல்லையா?

**லலிதா :** நிஜம்தானுடீ? அப்படியானல், எனக்குக் கூட, நாலஞ்சு ஜதை வேணும். வரவழைச்சுத் தரயா?

**சுசீலா :** நான் வரவழைச்சுத் தரதென்ன? "**எம். ராமசாமி செட்டி அண் கோ., ஷராப் வியாபாரம், திருச்சினுப்பள்ளி**" இன்னு விலாசம் எழுதி, ஒரு கார்டு எழுதிப் போட்டகள்ன, எத்தனை வைரம் வேணும்னுலும் வி. பி. யில் அனுப்பரு. அசல் கல்ச்சர் வைரங்களை அவாள்தான் வியாபாரம் பண்ணரு.

**லலிதா :** அப்படியா? கொஞ்சம் இரு, அம்மா. கிட்டுவைக் கூப்பிட்டு விலாசம் எழுதிக்கச் சொல்றேன். நாளைக்கே கடிதாசு எழுதிப் போடணும்.

இருக்கானே ?''

"அவன் என்ன பிரயோசனங்க? அவனை இன்னமே வேலையெ விட்டு நிறுத்திப் பிடலாம்.''

"அது சரி இல்லை. அவன் எத்தனை வருஷமா எங்கிட்டே வேலைக்கிருக்கான்!''

"அவன் தோட்டத்தைச் சரியாகவே பாத்துக்கறதில்லே, எசமான். செடியெல்லாம் செத்துப் போறது. வீட்டெச் சரியாக் காவல் காக்கறது மில்லே. நீங்க ஊருலே இல்லாதப்போ குளுர்ரதுன்னு குடிசேலே போய்ப் படுத்துண்டுடறான். இப்போ தெரியாது; எதாவது பெரிசாத் திருட்டுப் போனாத்தான் தெரியும்.''

கோகுல்தாஸ் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "சரி, உன் பையனைக் கூட்டிண்டு வா, பார்க்கலாம்'' என்றார்.

"சாமி, நீங்க அவனை எப்படியாவது வேலைக்கி எடுத்துக்கணும். ரொம்ப நல்ல பையன். பாவம், வேலை இல்லாமெ ரொம்ப நாளாக் கஷ்டப் படறான். உண்மையா உழைப்பான். அவங்கம்மா திடீர்னு செத்துப் போனதுனாலே, அவனுக்கு வேலையை விட்டுட்டுக் கிராமத்துக்குப் போகும்படி யாயிடுத்து. இல்லாட்டாப் பழைய எசமான் அவனை விட்டே இருக்கமாட்டாரு.''

## 5

மறுநாள் சாயங்காலம் ரங்கன் திரும்பி வந்தான். "என்ன, மாமா? எனக்காக எதாவது செய்ய முடிஞ்சுதா?''

இருக்கேன். வா, மொதல்லே இந்தக் கஞ்சியைக் குடிப்போம். அப்புறம் என் எசமானரைப் பார்க்கப் போவோம்.''

பசியாய் இருந்துங்கூட, ரங்கனுக்கு அந்தக் கஞ்சி ருசிக்கவில்லை. அவன் மனம் இதன் முடிவை அறியத் துடித்துக் கொண்டிருந்தது. கஞ்சியை ஒரு வழியாக விழுங்கிவிட்டு, டிரைவருடன் கோகுல்தாஸைக் காணச் சென்றான்.

கோகுல்தாஸ் அவனை, என்ன வேலையெல்லாம் தெரியும், முன்பு எந்த இடத்திலிருந்தான் என்றெல்லாம் விசாரித்துவிட்டு, மறுநாள் வேலையை ஏற்றுக்கொள்ள வரும்படி சொன்னார்.

ரங்கனுக்குத் தன் அதிருஷ்டத்தை நம்ப முடியவில்லை. சந்தோஷத்தால் துள்ளிக்கொண்டு டிரைவரின் குடிசைக்குச் சென்றான்.

"ரங்கா, நல்லா வேலை செய். என் தலை குனியும்படிப் பண்ணிடாதே. எதாவது, மொதல்லேயே தப்புப் பண்ணிட்டயோ, அப்புறம் உங்கிட்டே எப்பவும் தப்புக் கண்டு பிடிச்சுண்டே இருப்பாங்க. ஜாக்கிருதே! சொல்லிப் புட்டேன்'' என்று அவனை டிரைவர் எச்சரித்தான்.

"நீ அதெப்பத்திக் கவலைப் படாதே, மாமா.''

"அவனிடம் விடை பெற்றுக் கொண்டு, ரங்கன் தோட்டக் கதவை நோக்கி நடந்தான். அப்போது அந்தப் பக்கத்திலிருந்த கோவிந்தனின் குடிசையிலிருந்து வெளிச்சம் தெரிந்தது. தன் வீடு ஆகப் போகும் அந்தக் குடிசையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ரங்கனுக்கு உண்

றான்.

"நாம்ப இன்னமே என்ன செய்யறது?" என்று ஒரு பெண் குரல் உள்ளே கேட்டது.

"எனக்குத் தெரியலையே. பிச்சைதான் எடுக்கணும்" என்று புருஷக் குரலில் அதற்குப் பதில் வந்தது.

"அதுதான் நம்பளாலே முடியும். வேறே என்ன முடியும்? நம்பளெப் போலே ஏழைங்களுக்கு எத்தனை கஷ்டம்! காலேலேருந்து ராத்திரிமட்டும் நாயாட்டமா நித்தமும் ஒழைக்கறோம். நமக்கு வயசாயிடுச்சோ வயிற்றில் அடிதான்."

"நாம்ப என்ன செய்யறது? நம்ப எசமான், நம்பளிலே ஒத்தர் இல்லையே. அவர்கிட்டே இதெப் பத்திப்பேசி, பிரயோசனமில்லே. அவர், தம் வேலை ஆவதைத்தான் பார்ப்பாரு."

"எசமாங்கள் எல்லாரும் சுய காரியப் புலிங்க. அவங்க இன்னைத்தரெப் பத்தி யோசிக்கறதே இல்லே. நம்ப சக்தியெல்லாம் அவாளுக்கு உண்மையா உழைக்கறத்துலே போயிடுத்துன்னு, அவங்க எண்ணறதில்லே. இத்தனைக்கும் நமக்கு இன்னம் கொஞ்ச நாள் அவர் வேலையைச் செய்ய முடியும். நம்பளாலே முடியாதப்போ நாம்பளே போயிடமாட்டமா?"

"எசமானரோடே அந்த டிரைவர் இருக்கானே, அவன் தான் இதுக்குக் காரணம். தன் சிநேகிதனுக்கு நல்ல வேலை கெடைக்கணும்னு, அவன் இந்த வேலெ செஞ்சிட்டான்."

"ஆமா, அது ஒரு பாம்புன்னா. அவனுக்குச் சமயம் பாத்து

**வீரனின் கணக்கு**

1814 - ஆம் ஆண்டு நடந்த போரின்போது, மார்மாண்ட் என்ற தளபதியிடம், நெப்போலியன், "நம்மிடம் லட்சம் வீரர் இருக்கிறார்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"இல்லை; அறுபதாயிரம் பேர் தான் இருக்கிறார்கள்" என்றார் அந்தத் தளபதி.

"சரிதான். அறுபதாயிரம் வீரரோடு, என்னையும் சேர்த்தால், மொத்தம் லட்சம்" என்றார் நெப்போலியன்!

வாலாட்டத் தெரியும். இரு இரு, கழுதே! உன்னைச் சும்மா விட்டேனா பாரு. நான் நேரே ஐயாகிட்டப் போயி, அவன் எப்படிக் கார் எண்ணெயை எல்லாம் அவரை ஏமாத்தி எடுத்துக்கறான்னு சொல்லாட்டாப் பாரு. அப்பத்தான் ஐயருக்கு அவன் நம்பளெப் பத்தி எப்படிப் பொய் சொல்லறான்னு தெரியும்."

"சீ! நீ பேசாமே இருடி. அந்தப் பாவம் நமக்கெதுக்கு?"

"பாவமா? என், நான் நெசத்தெத் தானே சொல்லறேன்? நான் சொல்லறதெல்லாம் வீணுக்கில்லே. நெசம்மா ஐயாகிட்டே சொல்லறேனா இல்லையா, பாரு. அவர் தம் கண்ணாலேயே பாக்கட்டும். என் கூடாது? நாம்ப இப்போ என்ன செய்யறது? எங்கே போவது? அவன் நம்ப வாயிலே மண்ணைப் போட்டுட்டானே." இத்துடன் கிழவி அழ ஆரம்பித்து விட்டாள்.

இதை எலலாம் கேட்டுக் கொண்டிருந்த ரங்கனுக்கு, மனதை ஈட்டி எடுத்துக் குத்துவதுபோல் இருந்தது. தன்னால்

கஷ்டம் வரும் என்று எண்ணிய தும், அவன் மனது புண்பட்டது. தன்னையும் அறியாமல் அங்கேயே வெகு நேரம் நின்றுவிட்டான். பிறகு, திரும்பி டிரைவரின் குடிசைக்குச் சென்றான்.

"என்ன, எதையாச்சும் மறந்துட்டயா?"

"இல்லே, மாமா. நான் வந்து.. ...கேளு......நீ என்னை நடத்தினத்துக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கேன்.......அப்புறம்.... ...நீ எனக்காக ரெம்பக் கஷ்டப்பட்டே.......ஆனா.......என்னாலே அந்த வேலையெச் செய்ய முடியாது" என்று உளறிக் கொட்டினான்.

"என்ன! நீ என்ன சொல்லறே?"

"ஒண்ணு மில்லே. எனக்கு இந்த வேலெ வேண்டாம். நானே வேறே வேலெ பாத்துக்கறேன்."

படாதது.

"நீ என்னடா, என்னை மடையனா ஆக்கலாம்னு எண்ணிக் கிட்டையா? எச்சக்கலை நாயாட்டமா வந்து என்னைக் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டே. இப்போ என்னடான்னா, வேலை வேண்டாமாம்! எசமான் எதிரே என்னை அவமானப் படுத்தவாடா வந்தே, களுதே?"

அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. ரங்கனின் முகத்தைப் பார்க்கவும் வெறுப் படைந்தவன் போல, வேறு புறம் திரும்பிக் கொண்டான்.

ரங்கன் மௌனமாய்ச் சிறிது தலை குனிந்து கொண்டு நின்றான். பிறகு, பதற்றமில்லாமல், ஆனால் வேகமாய், தோட்டக் கதவை நோக்கிச் சென்றான். கதவைத் திறந்து தெருவுக்கு வந்ததும், அவன் ஒரு பெரு மூச்செறிந்து விட்டு, அமைதியுடன், ஏதோ சங்கடத்தைக் கடந்து விட்டவன் போல், மேலே நடந்தான்.

☆

## பூனையும் பெண்ணும்

கனெக்டிகட் மாகாணத்தில் நியூ பிரிட்டன் என்னுமிடத்தில், ஒரு மரத்தின்மேல், பூனைக்குட்டி ஒன்று, இறங்க வழி தெரியாமல் 'மியா, மியா' என்று கத்திக்கொண்டிருந்தது. இதைக் கண்ட எலீனர் போர்க் என்ற ஒரு பெண்மணிக்கு இரக்க முண்டாகிவிட்டது. பூனைக்குட்டியைக் காப்பாற்றுவதற்காக, இவள் அந்த மரத்தின் மீது ஏறினாள்.

இந்தப் பெண் மேலே ஏறிவரக் கண்ட பூனைக் குட்டி, பயத்தால் 'கிடுகிடு' என்று கீழே இறங்கிவிட்டது. ஆனால், பெண்ணுக்கு இறங்கத் தெரியவில்லை. மரத்தின்மேலே சிக்கிக்கொண்டாள். தீயணைக்கும் படையினர் வந்து, ஏணி வைத்து, அம்மாளைக் கீழே இறக்க வேண்டியதாயிற்று!

# போனது வந்தது

— 'வருணன்'

## முதற் களம்

(மாலை நேரம். குடிசையின் முன்னர் **கருப்பாயி** ஏதோ எண்ணமிட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். அவளுடைய பத்து வயதுப் பெண் **மீனாட்சி**, தெருப் பக்கத்திலிருந்து ஓடி வருகிறாள்.)

**மீனாட்சி :** அம்மா! அம்மா! இந்த வருசம் கார்த்திகையின் போது, போன வருசத்தைவிட நல்லா, நிறைய விளக் கேத்தணும். அவலுருண்டை எல்லாம் வாங்கி, சாமிக்குப் படைச்சுக் கும்பிடணும்.

**கருப்பாயி :** என்னமோ உங்க அப்பாரு மனசு எப்படி யிருக்கோ?

**மீனா :** ஏன்? எப்படி யிருக்கும்? போன வருசம், அதுக்கு முந்தின வருசம் எல்லாம் கூட, அப்பாவே அகல் எல்லாம் வாங்கி வந்து விளக் கேத்தினாரு. எனக்குக் கூட, சுருசுரு வாணம், மத்தாப்பு, பட்டாசு எல்லாம் வாங்கிக் கொடுத்தாரு. ஏன் அம்மா, உன் முவம் என்னமோ மாதிரி இருக்குது! என் மேலே என்னமானா கோவமா?

**கரு :** உன் மேலே என்னா கோவம்? நம்பளே யெல்லாம் படைச்சாரே அந்தக் கடவுள் மேலே தான் கோவம்!

**மீனா :** கடவுள் என்னா பண்ணாரு? அவர்தான் நம்ப கண்ணுக்குக்கூட அகப்படாமே எட்டினாப் போலெ எங்கேயோ இருக்காரே. இன்னிக்கிக் கூட, பள்ளிக்கூடத்திலே வாத்தியாரம்மா கடவுளெப் பத்தி, தோத்திரப் பாடல் ஒண்ணு சொல்லிக் கொடுத்தாங்களே.

**கரு :** ஆமாம்; இப்படித் தோத்திரம் சேஞ்சு சேஞ்சு தான் கடவுளுக்குக் காது செவிடாப் போச்சே; சூடம் எத்திக் காட்டி எத்திக் காட்டித்தான் அவர் கண்ணு கூட, குருடாப் போச்சு.

**மீனா :** கடவுளை இப்படியெல்லாம் திட்டாதே, அம்மா! பாவமில்லா!

**கரு :** ஆமாம், கடவுளுக்குக் கண்ணிருந்தா, கள்ளுக் கடையெல்லாம் மறுபடியும் திறக்க விடுவாரா? யாரோ ஒரு மகானுபாவன் வந்தாரு; கள்ளுக் கடைங்கள்ளாம் மூடிடுங்கோன்னு உத்தரவு போட்டாரு. வவுத்திலே பாலை வாத்தாருன்னு

பகிரதன் கங்கை கொண்டு வந்ததுபோல, காங்கிரஸ் எதிரிகள் மதுவிலக்கு ஒழிந்த காரியத்தைப் பிரமாதமான காரியமாய் எண்ணி மகிழலாம். இது காங்கிரஸுக்கு அவமானமல்ல; மற்றவருக்குத்தான் அவமானம். இதோ இங்கே சித்தரித்துள்ள உருக்கமான காட்சிபோல, எத்தனை ஏழை வீடுகளில் நடக்குமோ, யார் கண்டார்?

படியும் கள்ளுக் கடைங்கள் ளாம் திறந்து விடப் போருங்க ளாமே.

**மீனு:** அப்படியானு முன்னே போலே, அப்பா, கள்ளெக் குடிச் சுப் புட்டு வந்து என்னேயும் உன்னேயும் அடிப்பாங்களா?

**கறு:** என்ன பண்ணு வாங் களோ? விட்ட பழக்கத்தை மறுபடியும் பிடிச்சுக்காமே இருக்கணும். கடவுள் அது வரைக்கும் நல்ல புத்தியெக் கொடுத்தாரானுப் போதும்.

**மீனு:** அதுக்காகவா கவலைப் படறே, அம்மா நீ? நாயனு அப் படியெல்லாம் செய்ய மாட் டாங்க, அம்மா! கள்ளுக் கடை போவறத்தை நிறுத்திட்ட பிறகு, இப்போ எல்லாம் வேலெ மேலே யிருந்து வந்தவுடனே குளிக் கிருரு, தூண்ணூறு பூசிக்கிருரு, பஜனே மடத்துக்குப் போருரு, புஸ்தகம் எடுத்துப் படிக்கக் கத்திக்கிணு இருக்காரு. காலம்பர வும் இப்படியே தான் செய்ய ருரு. ரெண்டு மூணு வருசமா இப்படியே சேஞ்சுகினு வராரு. இனிமேலே மாறுவாரா என்ன, அம்மா! இதுக்காக வெல்லாம் நீ விசனப் படாதேயம்மா! அப்பா வந்தாருன்னு, நான் சொல்லிக் கிறேன்.

**கறு:** ஐயோ, பைத்தியமே! உனக் கொண்ணும் தெரியாது. கள்ளுக் கிருக்கிற சக்தி எதுக்கு இருக்குது? குதிரை, கொள்ளு தின்றத்தை மறுந்து விட்டாலும் விடும்; மனுசன், கள்ளுப் பழக் கத்தை விடவே மாட்டான். இன்னிக்கு நேத்திக்கு ஏற்பட்ட பழக்கமா? அந்தப் படுபாவி மாயாண்டி பழக்கப் படுத்திப்புட் டுப் பூட்டான் இருபது வருசத் குத் தீம்பா வந்து சேந்துது. சம் பாதிக்கிற பணமெல்லாம் குடிக் குத்தான். கட்டிக்க நல்ல சீலே யுண்டா? ஒரு நாளேக்காவது நல்லா முகங் கொடுத்துப் பேசு வாங்களா? ஒருநாள் போறது ஒரு யுகமா யில்லா இருந்துது? என்னமோ புண்ணியவான் காந்தி மகான் வந்தாரு, குடியும் குடித்தனமுமா ஆனேம், இருக் கிற வரைக்கும் செம்மையாய்ப் புழைச் சுட்டுப் போவோ மின்னு நினேச்சேன். நடுவிலே கடவுள் கல்லேத் தூக்கி போட்டுட்டாரு.

**மீனு:** கடவுள் என்னும்மா பண்ணுவாரு? கெவர்னமெண் டார் உத்திரவு போடராங்கோ. அதன் பிரகாரம் நடக்குது.

**கறு:** அந்த காந்தி சொல்ற படி சேஞ்சா, எல்லாருக்கும் நல்ல தில்லேயா?

**மீனு:** அவர் தான் இப்போ ஜெயிலிலே இருக்காரே. அவர் வார்த்தையை இப்ப யாரு கேப் பாங்க? அதனுலே தான், கெவர்னமெண்டாரு இஷ்டப் படி செய்யருங்க.

**கறு:** ரொம்ப கெவர்ன மெண்டைக் கண்டவ நீ. போயி உள்ளே விளக் கேத்து. உங்கப் பாரு வரத்துக்கு நேரமாச்சு.

**மீனு:** நீ விசனப் படாதே யம்மா! நான் அப்பாவைச் சரிப் படுத்தி விடறேன்.

(மீனுட்சி உள்ளே போகி ருள்.)

### இரண்டாங் களம்

(தெரு மூலேயில் முருகன், கண்ணன், மாயாண்டி ஆகிய மூவரும் பேசிக் கொண்டிருக் கிருர்கள்.)

இனிமேலே பஜனை மடத்துக்குப் போவயா; இல்லாட்டி, கள்ளுக் கடைக்குப் போவயா?

முருகன்: கள்ளுக் கடையெல்லாம் திறந் துட்டாங்களாம். அதுக்காக இவன் இவ்வளவு கும்மாளம் போட றுண்டா.

கண்ணன்: பின்னே இன்னு டான்னு, உண்றது, துண்றது இதுங்களை யெல்லாங் கூடவா கெவர்னமெண்டாரு கட்டுப் படுத்து வாங்கோ? அவன் அவன் பிரியமானத்தைக் குடிக்கிறுன். அப்படி யெல்லாம் கூடாதுன்னு சட்டம் போட்டா, அது எத்தினி நாளைக்கு நடக்கும்?

மாயா: அதான் நானும் கேக்கறேன், எத்தினி நாளைக்கு நடக்கும்ணேன்? இந்தக் காங்கிரஸ் காரனுங்க கொட்டங்கள்ளாம் அடங்கிப் போச்சுப் பாத்தியா?

முரு: நல்லத்தைத் தானே சொன்னுங்க அவங்க?

கண்: ரொம்ப நல்லத்தைக் கண்டுட்ட வருடா இவரு?

மாயா: என்ன நல்லத்தைச் சொன்னுங்கப்பா, காங்கிரஸ் காரரு? நம்பளை யெல்லாம் கூட்டி வெச்சுக்கினு, கள்ளுக் குடிக்காதேன்னுங்கோ......

கண்: அதுக்கு முழ நீளம் பேரு கூடச் சொல்லுவாங்களே, இன்னு அது?

முரு: மது விலக்கு.........

கண்: ஆம், அதான். நீ பஜனை மடத்துக் கல்லாம் போறே, உனக் கெல்லாம் தெரியுது.

மாயா: சரி, நம்பளைச் கள்ளுக் குடிக்கக் கூடா துண்ருங்களே; குடிக்கலாமா?

கண்: அப்படிக் கேளு நாயத்தை? பெரிய மனுசன்னு மொடா மொடாவாக் காபி குடிக் கலாம்; நாமெல்லாம் மொந்தை மொந்தையாக் கள்ளுக் குடிக்கக் கூடாதாங் காட்டியும்?

மாயா: இவங்களுக்கு என்னடா தெரியும், நம்ம கஸ்டம்? காலையிலே பதினேரு மணிக்கு ஒயுங்கு பண்ணிக்கினு ஆபீசுக் குப் போறுங்கோ; அங்கே ரவை நேரம் மேஜைக் கிட்டக் குந்திக் கினு அப்படியும் இப்படியுமாக் கிறுக்கிப் புட்டு, சாயங்காலம் அஞ்சு மணிக்கு ஊட்டுக்கு வந்துப் புடராங்க. நம்பளைப் போலே காலம்பரப் புடிச்சு ராவு வரையில் ஏரு புடிச்சு உழுதா, தெரியும்? ஏத்தம் இறைச்சா, தெரியும்?

கண்: இல்லாட்டி எங்கேயாவது நெசவு மில்லு கில்லுலே வேலெ சேஞ்சா, தெரியும். எலும்பு முறிஞ்சு போறுப் போலே வேலெ சேஞ்சுட்டு, களைப்பாறதுக்கு எதாச்சிம் தண்ணீ கொஞ்சம் போட்டுக் கிணுதான் சரிப் படுது.

மாயா: இதோ பாரு, முருகா! இந்த வேசம் கீச மெல்லாம் உட்டுப்புடு. கடவுளைக் கும்புட் டுக்கினு இருக்கிற காலம் வேறே. இப்போ புடிச்சு என் கட்டிக் கினு அழறே? நாளையிலேந்து நம்ப பழைய மாதிரி ஆரம்பிச் சுக்கலாம்.

கண்: இதோ பாரு, முருகா! இப்போ ரெண்டு மூணு வருசமா கள்ளுக் குடிக்காதே நம்ப உடம்பு எப்படிக் கயிறுப் போச்சு, பாத்தியா? இப்படியே விட்டு விட்டோமானு எத்தனே

பிடிக்கும்னு நெனெச்சுக்கினு இருக்கே? நாம்ப செத்துப் பூட்டா, பொஞ்சாதி புள்ளெங்களை யெல்லாம் யார் காப்பாத்தறது? இந்தக் காங்கிரஸ் காரனுங்களா காப்பாத்தப் போறுங்கோ?

**மாயா:** காப்பாத்து வாங்களே! நல்லாக் காப்பாத்து வாங்க! காந்திக்கு ஜேன்னு கூச்சப் போடுவாங்கோ. அவ்வளவு தான். அது கிடக்குது. கள்ளுக் கடைக்கு நாளெக்குத் தான் போவணுமின்னு என்ன எழுதி வெச்சிருக்கு; இன்னிக்கே போயி ரவை போதும் ருசி பார்த்தா என்ன கெட்டுப் போச்சு?

**கண்:** கடை திறந் துட்டாங்களா?

**மாயா:** ஓ ஓ! இன்னிக்குக் காலம்பரவே புள்ளேயார் பூசை யெல்லாம் பண்ணி, தேங்காய் உடைச்சு, ஒரு பீப்பாய் கள்ளு வண்டியிலே கொண்டாந்தாங்களே. நம்ப குப்பன் மகன் தானே வண்டியெ ஓட்டிக்கினு வந்தான்.

**முரு:** பார்த்துக்கலாம் நாளேக்கு; இன்னிக்கி என்ன அவசரம்? வூட்லே பொம்பளேங்கோ, கள்ளுக் கடைக்குப் போறேன்னு, கண்ணைக் கசக்கு வாங்கோ. கொயந்தே வேறே பரிகாசம் பண்ணும்.

**மாயா:** அடேய், நீ என்ன இப்படிப் பொம்புளேங்களுக்கும் கொயந்தெங்களுக்கும் பயப்படறேயே. ரெண்டு உதே குடுத்தா, சும்மாக் கிடக்க றுங்கோ.

**கண்:** என்ன முருகா! இப்படி யோசிக்கிறியே. நீ ஆம் பணத்தை இஷ்டம் போலே செலவழிக்கிறதுக்கு உனக்கு அதிகாரமில்லே?

**முரு:** இப்போ என்ன டா நீங்க? வூட்லே போயி, பணம் எடுத்து வரச் சொல்றீங்களா?

**மாயா:** இல்லாட்டி வூட்லே போய்ச் சாமி கும்பிடச் சொல்றுமா? போடா. போயி, பொம்பளேங்களே ரெண்டு அதட்டுப் போட்டுக் குந்த வெச்சுப்புட்டு, பணத்தே எடுத்தாடா. டே கண்ணு! நானும் போய் வூட்லே இருக்கிற காசைப் பீராஞ்சிகினு வாரேன்.

(எல்லோரும் போகிறுர்கள்.)

## மூன்ருங் களம்

(முருகனின் குடிசையில் ஒரே கூச்சல். கறுப்பாயியும் மீனுட்சியும் அழுது கொண்டிருக்கிறுர்கள்.)

**முரு:** கார்த்திகைக்கு விளக்கேத்தப் போருங்களாம் விளக்கு. விளக்கேத்தினு விடிஞ்சுப் பூடுமா வூட்டுத் தரித்திரமெல்லாம்? காசு கேட்டா, கொடுக்க மாட்டேன்றீங்களா ஒளிச்சு வெச்சுக்கினு? யார் சம்பாரிச்ச காசு? எய் மீனுச்சி! சும்மா அழுவாதே. போன வாரம் எட்டணுக் கொடுத்தேனே, அதைக் கொண்டா.

**மீனு:** வாணும்ப்பா! கள்ளுக் கடைக்குப் போக வாணும். அவங்க பேச்சைக் கேட்டு ஏன் இப்படிக் கெட்டுப் போவணும்?

**முரு:** யார் கெட்டுப் போறது? எனக்கு இன்னு நீ புத்தி சொல்றது? அந்த எட்டணுவைக் கொண்டு வரயா? இல்லாட்டி இப்போ உங்க ஆத்தாளுக்கு

இனிமேலே ... கிடைக்கும்.

மீனு: அந்த எட்டணுவுக்கு வாங்கின எத்தனை அரிசி ... கு நம்ம வூட்டுக்கு வரும்! நாஜேவளை கள்ளுக் குடிச்சுப் ... டா, எங்க எல்லாரையும் ... ட்டினி போட்டாப் போலே தானே ஆகுது?

முரு: உன்னெப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிச்சதுக்கு என்னடான்னு, இந்த மாதிரி வாயாடக் கத்துக்கிணே யாக்கும். சீ, சீ! உள்ளே போய்ப் பணத்தெ எடுத்துக்கினு வா.

(கண்ணனும் மாயாண்டியும் தெருவிலிருந்து கொண்டு கூப்பிடுகிறார்கள்.)

கண் - மாயா: டே முருகா!

முரு: இந்தா வந்திட்டேன். தா, மீனுச்சி! ஜல்தி எடுத்தா அந்த எட்டணுவை.

மீனு: படுபாவிங்க நல்லா வந்து சேந்தாங்க. வூடு இனிமேலே நாசந்தான்.

கண்: (வெளியிலிருந்தபடியே) இந்த முருகன் இருக்கானே ரொம்பக் கோழை மனசுக்காரன். எத்தினி நேரம் ஆக்கறான், பாரு.

மாயா: கோழை மனசுமில்லே, மண்ணுமில்லே. பொம்பளேங்களுக்குப் பயந்தவன். தான் சம்பாரிச்ச காசை எடுத்துக்கினு வரத்துக்கு எத்தினி நேரம் பாரேன்.

மீனு: அப்பா! நான் சொல்றேன், கேளு.

முரு: கிளிப்புள்ளெ க்கிச் சொல்றமாதிரி அப்போ புடிச்சுச் கொண்டுவான்னு, என்னமோ கதை பேசிக்கினு இருக்காளே.

(அருகில் சென்று ஓங்கி இரண்டு அறை கன்னத்தில் கொடுக்கிறான். மீனாட்சி 'கோ' வென்று அழுகிறாள்-)

கறு: (உள்புறமாக இருந்து கொண்டு) ஐயையோ! கொயந்தையெக் கொன்னுப்புடராங்களே.

முரு: உன்னே, உன் கொயந்தையெ ரெண்டு பேரையும் கொன்னுப்புடுவேன் இப்போ. வெச்சிருக்கற பணத்தெக் கொண்டு வரீங்களா இல்லியா?

கறு: (எட்டணுவை வீசி எறிந்து) எடுத்துக்கினு போ. நாசமாப் போவானுங்க எல்லாம், இப்படிக் குட்டிச் சுவராக்கறுங்களே. இவங்கள்ளாம் அழிஞ்சுதான் பூடுவாங்க. ஐயோ! நல்லா ஒயுங்கா இருந்த வரை எப்படிக் கெடுத்துப்புடுது இந்தக் குடி?

(முருகன் வெளியே போய் விடுகிறான். கண்ணனும் மாயாண்டியும் கூடவே சிரித்துக் கொண்டு போகிறார்கள். கறுப்பாயி, குடிசைக்கு முன்புறமாக வந்து உரக்கக் கத்துகிறாள்.)

கறு: ஊரிலே கேள்வி முறையே இல்லியா? தெய்வம் தேவாதிங்கள்ளாம் இல்லியா? நல்லா இருந்த குடும்பம் கெட்டுப் போவுதே. கடவுளே! உன்னைக் கும்பிட்டதெல்லாம் வீணுப் போச்சே. போன குடி மறுபடியும் வந்துட்டுதே.

(மீனாட்சி, மானம் பொறுக்க முடியாமல், தாயாரைக் கைபிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு போகிறாள்.)

✲

# மனித குமாரன் கனவு

33840

எர்னெஸ்ட் ரெனான்

ஏசு கிறிஸ்துவுக்கும், அவர் காலத்திய கிளர்ச்சிக்காரர்களுக்கும்—ஏன், எல்லாக் காலத்திய கிளர்ச்சிக்காரர்களுக்குமே—உண்மையில் ஒரு வித்தியாசமுண்டு. அது அவர் பரிபூர்ண லட்சியவாதியாயிருந்தது தான். சில அம்சங்களில் ஏசு ஓர் அராஜக வாதி. அரசாட்சியைப் பற்றி அவருக்கு அபிப்பிராயமே கிடையாது. அரசாங்கம் என்பது முற்றிலும் கேடான காரியம் என்றே அவருக்குத் தோன்றியது. அரசாங்கத்தைப் பற்றி, தெளிவில்லாத வார்த்தைகளிலே அவர் பேசியிருக்கிறார்; அரசியலைப்பற்றி யாதுமறியாத பொது ஜனங்களில் ஒருவர் போலவே, அப்படிப் பேசியிருக்கிறார்.

ஒவ்வொரு நியாயாதிபதியும், தெய்வபக்தி வாய்ந்தவர்களுக்கு இயற்கையிலே சத்துரு என்று அவருக்குத் தோன்றியது. துரைத்தன அதிகாரிகளுடன் சண்டை சச்சரவிட, தம் சீடர்களை அவர் தயார் செய்தார். இதில் ஏதும் வெட்கப்பட வேண்டிய தேவையேயில்லை என்று அவர் நினைத்தார். ஆனால், பணமோ அதிகாரமோ உள்ளவர்களை அகற்றி, அவர்களின் ஸ்தானத்தில் தாம் அமரவேண்டுமென்று, அவர் ஒரு போதும் ஆசைப்படவில்லை. பணத்தையும் அதிகாரத்தையும் அழித்துவிடவே, அவர் விரும்பினார்; தாம் அவைகளைக் கைப்பற்ற, அவர் ஆசை கொள்ளவில்லை. தம் சீடர்கள் பற்பல விதமான துன்பங்களுக்கும் தண்டனைகளுக்கும் ஆளாவார்கள் என்று, கிறிஸ்துபெருமான் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். ஆனால், தங்களைத் துன்புறுத்துவோரை, சீடர்கள் ஆயுதந் தாங்கி எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமே, அவருக்கு ஒருபோதும் உண்டாகவில்லை. துன்பங்களைத் தாங்கிக் கொண்டு கடவுளைச் சரண் அடைந்து விடுவதன் மூலம், சர்வ வல்லமை பெறலாம்; உள்ளத் தூய்மையின் மூலம், பலாத்காரத்தை வெல்லலாம்—இந்தக் கருத்து, ஏசுவின் அபூர்வமான கொள்கையாகும்.

ஒவ்வொரு காலத்தில், ஒவ்வொரு மகான்களும் அறிஞர்களும் ஒவ்வொரு விதமான கற்பனை உலகத்தைக் கனவு கண்டார்கள். பூலோகத்தையே சொர்க்கமாய்ச் செய்துவிட வேண்டுமென்பது தான், அவர்களுடைய ஆர்வமெல்லாம். கிறிஸ்து பெருமானும் அத்தகைய பூலோக சொர்க்கமொன்றைக் கற்பனை செய்தது, அவர் வாழ்க்கை, உபதேசங்களிலே புலனாகிறது. 'கிறிஸ்துவின் வாழ்க்கை' என்ற நூலிலே, ஏசுவின் அந்தக் கற்பனை உலகத்தை, ஆசிரியர் **ரெனான்** இவ்வாறு ஊகிக்கிறார்!

ஏசு வெறும் சூட்சும வாதியல்ல. ஏனெனில், சகல பொருள்களும் ஸ்தூலமாய் அடைந்து அனுபவிக்கக் கூடியவையே என்று அவர் கருதினார். தேகத்திலிருந்து பிரிந்த தனி ஆத்மா ஒன்றிருக்க முடியும் என்று அவர் கருதவேயில்லை. ஆயினும், அவர் ஒரு லட்சிய வாதியேயாவார். ஜடப் பிரக்ருதியை, கருத்தின் சின்

## எளியோருக்கு ராஜ்யம் !

"ஆண்டவரே, ஆண்டவரே' என்று என்னை அழைக்கும் ஒவ்வொருவனும் பரலோக ராஜ்யத்தில் பிரவேசித்துவிட மாட்டான். ஆனால், பரமண்டலத்தில் உள்ள என் அப்பனின் சித்தத்தை நிறைவேற்றுபவனே, அங்கே பிரவேசிப்பான்."

"ஒரு பணக்காரன் பரலோக ராஜ்யத்தில் நுழைவதை விட, ஓர் ஒட்டகம் ஓர் ஊசிக் காதின் வழியே நுழைந்து செல்வது அதிக எளிதா யிருக்கும்."

—ஏசு கிறிஸ்து.

னமே என்றும் கட்புலனாகாத சூட்சுமத்தின் பிரத்யட்ச வெளித் தோற்றமே என்றும் அவர் மதித்தார்.

தேவ சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க, நாம் யாரை நம்பியிருக்க வேண்டும்? இந்த விஷயத்தில், ஏசுவின் மனதிலே துளியும் சந்தேகம் உதிக்கவில்லை. மனிதர்களின் கண்ணுக்கு எது பெரிதும் மதிப்பாய்ப் படுகிறதோ, அது கடவுளின் கண்களுக்கு மகா கேவலமாய்ப் படுகிறது. தேவ சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்போர் எளிய ஜனங்களே; செல்வர்களோ, படித்தவர்களோ, புரோகிதர்களோ, அதை ஸ்தாபிக்கப் போவதில்லை. பெண்களும், பாமர மக்களும், தாழ்ந்தோரும், வாலிபருமே அதை ஸ்தாபிப்பார்கள். எளியவர்களுக்கே சுவிசேஷத்தைப் போதித்தது தான், கிறிஸ்துவின் பெரும் சிறப்பாகும்.

எளிமையழகும் சாந்த சுபாவமும் கொண்ட ஏசு, இங்கே மீண்டும் உயர்ந்தெழுகிறார். இந்த உலகின் சகல அதிகாரங்களும் தாழ்மைப்படுத்தப் பெறும் ஒரு மகத்தான சமூகப் புரட்சியை, அவர் கனவு காண்கிறார். உலகம் தம்மை நம்பாது, அது தம்மைக் கொன்று விடும் என்று அவர் அறிந்திருந்தார். ஆனால், தம் சீடர்களோ, அவ்வுலகத்தோடு சேர மாட்டார்கள் என்று அவர் கருதினார். தாழ்மையும் எளிமையும் படைத்ததொரு சிறு கோஷ்டியாராகவே அவர்கள் இருப்பார்களென்றும், தங்கள் தாழ்மையின் பலத்தாலேயே அவர்கள் வெற்றியடைவார்கள் என்றும், அவர் எண்ணினார். 'கிறிஸ்துவன்' என்பதற்கு நேர்விரோதமாக, 'இலௌகிகன்' என்ற பதத்தைக் கருதுகிறோம். இந்தக் கருத்து, குருநாதரின் சிந்தனைகளைக் கவனிக்கும்போது, முற்றிலும் நியாயமே என்று விளங்குகிறது.

### பகைவனை நேசி

உங்கள் சத்துருக்களை நேசியுங்கள். உங்களைப் பகைப்பவருக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவரை வாழ்த்துங்கள். உங்களை நிந்திப்பவருக்காகப் பிரார்த்தியுங்கள். உன்னை ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் கொடு. உன் அங்கியை எடுத்துக் கொள்ளுபவன், உன் அங்கவஸ்திரத்தையும் எடுத்துக் கொள்ளத் தடை பண்ணதே. உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுபவனை, அதைத் திரும்பக் கேளாதே. மனிதர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

—ஏசு கிறிஸ்து

# இன்ப உலகம்

இன்ப மான உலகை—மனமே
ஏன் வெறுக்க வேண்டும் ;
அன்பு வாழ்வு கொண்டால்—அதுபோல்
ஆயிரத்தில் வேண்டும்.
துன்ப மென்ப திங்கே—நம்மால்
தோற்று விப்ப தொன்றே.
மன்ப தைக்கு நன்மை—நல்கி
மகிழ்ந்து வாழ வேண்டும்.

மண்ணைத் தூற்ற லாமோ ;—உலகை
மாயை என்ன லாமோ ;
எண்ணம் வீழ்ச்சி யுற்றால்—கருதும்
யாவும் தீய தாமோ ;
பெண்ணை நோக லாமோ ;—அவளைப்
பேதை யென்ன லாமோ ;
கண்ணி லொன்று போனால்—பார்வை
கட்டை யாகு மன்றோ.

மனைவி மக்க ளோடு—கூடி
வாழும் வாழ்வு பொய்யோ ;
புனையும் பொன்னும் வீடும்—பொருளும்
பொய்மை கொண்ட தாமோ ;
நினையு மிந்த வேதம்—இன்னும்
நீண்டு கொண்டு போனால்,
முனையும் மாநி லத்தில்—நாம்தான்
மூச்சி ழந்து போவோம்.

காற்ற லைத்த போதும்—மேகம்
கடமை செய்வதே போல்,
ஊற்று நீரிலேனும்—நதிகள்
உலகைக் காப்பதே போல்,
சேற்றில் தோன்றி னாலும்—கமலம்
செம்மை யீவதே போல்,
தோற்று நின்ற போதும்—மகிழ்வாய்த்
தொண்டு செய்ய வேண்டும்.

—சி. இரா. தேசிகன்.

# புதிய கவிஞர்கள்

ப. ராமஸ்வாமி

சுவர்க்கத்திலே யுள்ள கம்பர், வள்ளுவர், சாத்தனார், இளங்கோ முதலிய கவியரசர்கள் நம்மைப் பற்றி விசாரிப்பதானால், என்ன கேட்பார்கள்? நமக்கு 'ரேஷன்' கார்டுகள் ஒழுங்காய்க் கிடைத்து வருகின்றனவா என்று கேட்க மாட்டார்கள். "நம்முடைய அருமைத் தமிழர்கள் கலைகளை ஆதரவோடு வளர்த்து வருகிறார்களா? அவர்களிடையே எங்கள் வழித் தோன்றல்களாகக் கவிவாணர் தோன்றி யிருக்கிறார்களா?" என்றுதான் கேட்பார்கள். இந்தக் கேள்விக்கு நாம் தலை நிமிர்ந்து பதில் சொல்லலாம். "ஆம், எங்களிடையே ஐந்தாறு புதுக் கவிவாணர் இருக்கின்றனர். அவர்களுடைய கவிதைகள் எங்கள் உயிருக்கு அமுதமாக இருக்கின்றன" என்று சொல்வோம். கடல் வற்றினாலும் நீர் தேங்காமலா போகும்? ஆயிரக் கணக்கான புலவர்கள் இருந்த இடத்தில், இன்று ஆறு புலவர்களாவது இருக்கிறார்கள்.

பஞ்சாங்கத்தைப் போல், கவிதையிலும் புதுக் கவிதை, பழங் கவிதை என்று உண்டா? இல்லை. கவிதை, என்றும் ஒரே கவிதை தான். ஆயினும், கவிதையின் உருவத்திலும், கட்டுக் கோப்பிலும், கவிதைக்காக எடுத்துக் கொள்ளும் விஷயத்திலும், காலந் தோறும் மாறுதல் ஏற்படும். புதிய கவிவாணர்கள் புது விஷயங்களைப் புது முறைகளில் பாடுவார்கள். இவைகளையே புதுக் கவிதை என்கிறோம்.

உணர்ச்சியை வெள்ளமாகத் தேக்கி வைத்துக் கொண்டிருப்பது கவி. கற்பனை வளத்தாலும் அநுபவ ஒற்றுமையாலும் அது சர்வ தேசங்களுக்கும் பொதுவான ஒரு பாஷை என்று சொல்லலாம். எண்ணமும் கலையும் ஒன்றுபடும் பொழுது, கவி பிறக்கிறது. ஒரு சிந்தனை, உணர்ச்சியோடும் சந்தத்தோடும் ஒட்டத்தோடும் வெளி வரும்போது, அதைக் கவி என்று பாராட்டுகிறோம். நல்ல கவியில் சிந்தனை மலரின் வாசனையையும், சொல் மலர்களின் சுகந்தத்தையும் நுகர்கிறோம். கவிவாணர்களே, நம் பாஷைக்கு அதிபதிகளா யிருக்கிறார்கள்,

நம்முடைய புது இலக்கியத்திலே, கவிதைதான் நமக்கு ரொம்பப் பெருமை கொடுப்பதாக இருக்கிறது. பாரதியார், தேசிக விநாயகம் பிள்ளை, ராமலிங்கம் பிள்ளை, சுப்பிரமணிய யோகியார், பாரதி தாஸன், சுத்தானந்த பாரதியார் ஆகியவர்கள் ஏராளமான

ஒரு தேசத்தை ஆட்டி வைக்கும் சக்திகளிலே தலை சிறந்தது கவிதை இலக்கியம் தான். அந்த இலக்கியத்தைப் படைத்துள்ள ஆறு நவயுகக் கவிஞர்களைப் பற்றி, திருச்சி ரேடியோ நிலயத்தில் சமீபத்தில் நிகழ்த்தப்பட்ட பேச்சு இது. நிலயத்தாரின் அனுமதியுடன் இங்கே வெளியிடப்படுகிறது.

திருக்கிறார்கள். சென்ற 40, 50 வருஷங்களில் இங்கிலீஷில் பாடக்கூடிய 400 கவிவாணர்கள் தோன்றியிருக்கிறார்கள்; அவர்களுடைய பாடல்கள் 2000 நூல்களாக வெளி வந்திருக்கின்றன. இத்தனை கவிஞர்கள் நம் தமிழுக்கு ஏற்படா விட்டாலும், கிடைத்த ஆறு பேர்களும் நமக்கு அருமையான பொக்கிஷங்கள் தான்.

இவர்கள் எல்லோருமே காலத்திற் கேற்ற புதுக் கவிகள். இவர்களுடைய புதுக் கவிதையில், வழக்கத்தில் இல்லாத பழஞ் சொற்கள் மறைந்து, ஜனங்களுடைய தினசரிப் பேச்சில் உயிரோடு ஒலித்துக் கொண்டிருக்கிற சொற்களே நிறைந்திருக்கின்றன; புதிய சந்தங்கள் சிலவற்றையும் பார்க்கிறோம். முன் காலத்தில் சூட்சுமத்தைப் பற்றியும், ஆத்மார்த்திக விஷயங்களைப் பற்றியும் அதிகமாய்ப் பாடுவது வழக்கம். இப்பொழுது சாதாரண, ஸ்தூலமான, இகலோக விஷயங்களை அதிகமாய்ப் பாடுகிறார்கள். பழங் கவிதை, முடி தாங்கிய மன்னர்களையும் அசகாய சூரர்களையும் பற்றியே மிதமிஞ்சி விஸ்தரிக்கும். புதுக் கவிதை, பெரும்பாலும், சாதாரண மனிதனைப் பற்றியே விஸ்தரிக்கிறது. சுவர்க்கத்திற்கும் இயற்கைக்கும் பதிலாக, இப்பொழுது சமூக அமைப்பைப் பற்றியே அதிகமான பாடல்கள் வெளி வருகின்றன.

தமிழில் புதுக் கவிதை, பாரதியாரிலிருந்து ஆரம்பமாகிறது. பழமையிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் தோன்றிய புதுமைக் கவி பாரதியார். பாரதியார் மகாகவி மட்டுமல்லர்; மகா வீரர், மகா தேசபக்தர். அம்சங்கள் பல நிறைந்தவை. எத்தனையோ தினுசாக அவைகளைப் பார்த்து ஆனந்திக்கலாம். 'மாகாளி பராசக்தி'யிலிருந்து சிட்டுக் குருவிவரை, அவர் பாடியிருக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தில் உலகமும் தேசமும் நம் அருமைத் தமிழ்நாடும் இருந்த நிலைமையைக் கண்டு, சூழ்ந்திருந்த சுற்றுச் சார்புகள் தம்முடைய உள்ளத்தில் உண்டாக்கிய அதிர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும், இன்பங்களையும், வேதனைகளையும் கவிகளாகக் கொட்டியிருக்கிறார். அவர் கவிகளைக் கட்டவில்லை, புனையவில்லை, தொடுக்கவில்லை; பொழிந்து கொட்டி யிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். அவர் பலரில் ஒருவ ரல்லர்; தனிச் சிறப்பு வாய்ந்த மகா புருஷர். அவர் உருக்கி ஊற்றிய சொற்கள், இன்று நம் செயல்களாக உருக்கொண் டிருக்கின்றன. இதை விடப் பாரதியாரின் பெருமைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

பாரதியாரை இப்பொழுது புகழாதவரே இல்லை. அநேகர் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறார்கள். தேசிக விநாயகம் பிள்ளையவர்கள், பாரதியாரைப் பற்றிப் பாடியிருக்கும் சில வரிகளைப் பார்ப்போம்: பாரதியார் பாட்டில்,

'சொல்லுக்குச் சொல்லழகும்
[ஏறுமேயடா-கவி
துள்ளும் மறியைப் போலே
[துள்ளுமேயடா.'

* * *

'குயிலும் கிளியும் பாட்டில்
[கூவுமேயடா-மயில்
குதித்துக் குதித்து நடம்
[ஆடுமேயடா.'

* * *

'உள்ளந் தெளியுமொரு
[பாட்டிலேயடா-மிக்க
ஊக்கம் பிறக்குமொரு
[பாட்டிலேயடா.

கண்ணீர் சொரிந்திடுமோர்
[பாட்டிலேயடா.'

நாஞ்சில் நாட்டிலே தோன்றியவர் 'கவிமணி' தேசிகவிநாயகம் பிள்ளை. இப்பொழுது இவருடைய அருமையான பாடல்கள் தமிழ் நாடெங்கும் பரவி வருகின்றன. இவருடைய பாடல்கள் குழந்தைகளுக்குப் பாலும் சர்க்கரையும் போல இனிப்பானவை. நமக்கோ, செவிக்கும் சிந்தைக்கும் தெவிட்டாத விருந்து. தமிழின் சிறப்பு, தமிழின் இனிமையெல்லாம் இந்தப் பாடல்களிலே பார்க்கிறோம்.

புத்தரைப் பற்றி, 'கருணைக் கடல்', 'புத்தரும் மகனிழந்த தாயும்' என்ற தலைப்புக்களில் பிள்ளையவர்கள் அநேகம் பாடல்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளை ஒரு முறை படித்தாலே, கவிவாணரின் பண்பட்ட உள்ளத்தை அறிந்து கொள்ளலாம். இவர் தமிழ்ச் சிப்பியிலே விளைந்த ஒரு நன்முத்து. இவரைக் 'கருணைக் கவி' என்றே சொல்லலாம். உலக மக்கள் அநுபவிக்கும் துன்பத் தீயால் இவருடைய உள்ளம் வெந்து சாம்பி ஓலமிடுவதுபோல், சில பாடல்கள் அமைந்திருக்கின்றன. அநேகம் பாடல்கள், நம்முடைய ஆறாத புண்களுக்கு அருமருந்தாக இருக்கின்றன. பாடல்கள் எல்லாம் 'மலரும் மாலையும்' என்ற நூலாக வெளிவந்திருக்கின்றன. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற, அழகான நகைச்சுவை ததும்பும் சோக சரித்திரம் ஒன்றையும் பிள்ளையவர்கள் பாடியிருக்கிறார்கள்.

இவருடைய பாடல்களின் உருக்கத்தைச் சிறிது கவனிப்போம். புத்த பகவானிடம் ஒரு அவருடைய பால் மணம் மாறாத பாலகன் இறந்து கிடக்கிறான். அவனைத் தோள்மேல் போட்டுக்கொண்டு, தாயார், அவனுக்கு உயிர்ப் பிச்சை வேணுமென்று பிரார்த்திக்கிறாள். எதற்காக? குழந்தை இல்லாமல் அவள் படுகிற பாட்டைப் பாருங்கள் :

'வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடந்தல் கண்டெனக்குச்
சிந்தை தடுமாறுதையா.

'பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூச் சூட்டிடம்மா
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா?

'நெஞ்சிற் கவலையெலாம்
நிற்காமல் ஓட்டும் அந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது
புத்திதடு மாறுதையா.

'சித்திரத் தேரும்
சிறுபறையும் கூடி எனைப்
பித்தியிலும் பித்தி
பெரும் பித்தி ஆக்குதையா.

'தாயாகி உள்ளம்
தருக்கி யிருந்தது போய்ப்
பேயாகி இன்று
பிணத்தூக்கி நிற்பேனோ?'

உலகத்தில் குழந்தைகளை இழந்த தாய்மாரெல்லாம் ஏககாலத்தில் சேர்ந்து ஓலமிடுவது போன்ற உணர்ச்சியை, சில வெள்ளைச் சொற்களை அடுக்கி வைப்பதன் மூலம் நமக்கு உண்டாக்கி யிருக்கிறார் இந்தக் கவி. சொல்லின் பெருமை எளிமை யென்றும், அதுதான் கலைக்கே கலையாக விளங்குவது என்றும் அமெரிக்கக் கவி வால்ட் விட்மன் கூறியிருக்கிறார். இதற்கு உதாரணமாக, நம் தேசிகரின் பாடல்களைக் குறிப்பிடலாம்.

அடுத்தாற்போல் பாரதிதாஸனைப் பார்ப்போம். இவர் புரட்சிக் கவிஞர். மற்றப் புதுக் கவிஞரிடம் இல்லாத சில விசேஷ அம்சங்கள் இவரிடம் உண்டு. தேசிக விநாயகம் பிள்ளை சாந்தமும், அமைதியும், அன்பும் தழைக்

சமூக-அரசியல் புரட்சிகள் - இவைகளுக்கும் அவருக்கும் வெகு தூரம். ஆனால், பாரதிதாஸன், போர் முரசு கொட்டும் புதுக் கவி. ‘கொலைவாளினை எடடா மிகு-கொடியோர் செயல் அறவே’ முரசடிக்கிறார். ‘சட் டச் சட சட சட்’டென்று சமூகக் கொடுமைகளையெல்லாம் தகர்த்தெறியவேண்டும் என்பதே இவர் பிரசாரம்.

இவர் கொட்டும் பேரிகை நாதத்தை கேளுங்கள் :

‘நல்லவர் நாட்டினை
வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப் பான்மை,
தொல்புவி மேல்விழும்
பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்.

சொல்லிடும் நெஞ்சில்
எரிமலை பூகம்பம்
சூழத் தகாது கண்டாய்.
செல்வங்கள் யார்க்கும்
என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்.’

இவர் பாடல்களெல்லாம் ஆணித்தரமானவை; அவைகளில், காணப்படும் அபிப்பிராயங்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத்தான் இருக்கும். காதலை நம் தேசத்தார் இழிவுபடுத்தி வருவதைக் கண்டு, இவர் ஒரு கதாபாத்திரத்தின் வாயிலாகக் கூறுவது இது :

‘காதலிருவர்களும்—நம்
கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன் !—இதில்
மற்றவர்க்கென்ன உண்டு ?
சூது நிறையுலகே—ஏ
துட்ட இருட்டறையே !’

கடல்சூழ்ந்த உலகம் அவருக்குச் ‘சூது நிறை உல’காகவும் ‘துஷ்ட இருட்டறை’யாகவும் தோன்றுகிறது. உண்மையும் இதுதானே !

தாலாட்டுப் பாடல்களில் கூட, இவருடைய தத்துவங்களும் கின்றன :

‘எல்லாம் அவன் செயலே என்று
[பிறர் பொருளை
வெல்லம்போல் அள்ளிவிழுங்கும்
[மனிதருக்கும்,
காப்பார் கடவுள் உமைக்
[கட்டையில் நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் என
[உரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின்
[மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கே, என்
[செந்தமிழே கண்ணுறங்கு !’

கடுமையான பிரசாரத்தின் நடுவேயும், கவி குழந்தையை ‘என் செந்தமிழே’ என்று அழைப்பது மிக அருமையாக உள்ளது.

பெண் குழந்தைக்கொரு தாலாட்டு :

‘மூடத்தனத்தின் முடை நாற்றம்
[வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப்
[பெட்டகமே !

* * *

‘புண்ணிற் சரம்விடுக்கும்
[பொய் மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல் சிந்திக்
[கட்டழிக்க வந்தவளே !’

* * *

‘எல்லாம் கடவுள் செயல்
[என்று துடை நடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப்
[புதுமை செய வந்தவளே !’

‘தமிழன் இதயம்’ என்ற நூலிலே, நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் பாடல்கள் பல இருக்கின்றன. ராமலிங்கர் நமது தேசிய கவி. நம் தற்கால லக்ஷியங்களெல்லாம் இவருடைய பாடல்களில் பிரதிபலிக்கக் காண்கிறோம். நல்ல பண்பட்ட உள்ளம்; இயற்கையிலேயே இவர் ஓவியர். ஆகவே, கலையுணர்ச்சி குன்றாமல் இவரால் கவி பாட முடிகிறது. இவருடைய பாடல்களில் உணர்ச்சி யிருப்பினும், ஆவேசம் குறைவு.

சில பாடல்கள், 'தமிழ்க்குமரி' என்னும் நூலில் வெளிவந்தன. சொல் வளத்தில் இவர் கைதேர்ந்தவர். கருத்துக்களும் அருவி போல் வரும். இன்னும் கொஞ்சம் கட்டுப்பாட்டுடனும், 'Poetic Restraint' என்று சொல்லப்படும் கவிகளுக்குரிய நிதானத்துடனும் இவர் கவிகள் எழுதினால், பல நூற்றாண்டுகள் அவைகள் நிலைத்து நிற்க முடியும். இவருடைய புதிய பாடல்கள் பல, பழைய கம்பரை நமக்கு நினைவுறுத்துகின்றன.

**புது**வையிலே தவம் செய்யும் சுத்தானந்த பாரதியாரைப்பற்றித் தமிழ் நாட்டில் அறியாதவரே இருக்க முடியாது. ஒழுக்கத்தாலும், விடா முயற்சியாலும், அவர் அரும் பெரும் தமிழ்ப்பணி கிறார். தமிழை மிகவும லாகவமாகக் கையாளுவதில் அவர் நிபுணர். ஏராளமான பாடல்களை அவர் எழுதியிருக்கிறார். 'புதுமை' அதிகமுண்டு. சில பாடல்கள், உயர்ந்த கவிதா ரஸம் நிறைந்து காணப்படுகின்றன.

இன்னும் அநேக நண்பர்கள் பத்திரிகைகளில் தனிக் கவிகள் எழுதி வருகிறார்கள். இவைகளும் வரவேற்கத் தக்கவை.

யார் பாட்டு எழுதினாலும் படிப்போம். ஆனால், பாட்டில் கொஞ்சமாவது இனிப்பு இருக்க வேணும். 'சர்க்கரை கூட்டினால், கம்பளியும் தின்னலாம்' என்று மலையாளத்தில் சொல்லுவார்கள். அதுபோல், பாட்டிலும் இனிப்பு இருந்தால் படித்து அநுபவித்து விடலாம்.

## கொடுங்கோலும் கடும்புலியும்

உலக மகான்களில் மிகப் பிரசித்தமான ஒருவர், கன்பியூஷஸ் என்ற சீன வேதாந்தி. அவர் சுமார் 2,500 வருஷங்களுக்கு முன் வாழ்ந்தார்.

ஒரு சமயம் தம் சிஷ்யர்களுடன், ஒரு மலைச்சாரல் வழியாய், அந்த வேதாந்தி சென்றுகொண்டிருந்தார்.

அங்கே ஒரு சமாதியின் அருகே ஒரு பெண் நின்று அழுதுகொண்டிருந்தாள்.

**வேதாந்தி**:—"ஏன் அம்மா, நீ அழுகிறாய்?"

**பெண்**:—"முதலில் இங்கே என் மாமனாரை, ஒரு புலி அடித்துக் கொன்றுவிட்டது. அடுத்தபடி என் புருஷனை அது கொன்றது. இப்போது என் மகனையும் அந்தப் புலி கொன்றுவிட்டது. இதற்குத்தான் அழுகிறேன்."

**வேதாந்தி**:—"அப்படியானால், நீ ஏன் இந்த இடத்தை விட்டுப் போகாதிருக்கிறாய்?"

**பெண்**:—"இங்கே கொடுங்கோல் ஆட்சியில்லாதிருக்கிறது; அதனால்தான்."

வேதாந்தி தம் சீடர்களை நோக்கித் திரும்பி "என் மக்களே! இதை நினைவு கூருங்கள்: கடும்புலியை விட, கொடுங்கோல் மன்னனே அதிகக் குரூரமாயிருக்கிறான்; அவனுக்கே அதிகமாய் அஞ்ச வேண்டியிருக்கிறது" என்றார்.



'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸுஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது,

# நரஸூஸ் டீ

M. N. K.—15 TM.

சண்டையிலும் சமாதானத்திலும் பொருத்தமானதும் உண்மையானதும்............

# வைரங்களே

உறைவிடம்

# ஸூரஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும்...............................
சென்ற அரை நூற்றாண்டுகளாக நிரந்தர நன்மதிப்புப் பெற்றுள்ளது.

ஆகையால்

# ஸூரஜ்மல்ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்



# திருடனின் கடிதம்

கே. தாமோதரம்

அன்பார்ந்த சகோதரி!

உனக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்ப வேண்டுமென்று, எனக்கு வெகு நாளாக ஆசை. ஆனால், இதுவரைக்கும் அனுப்ப முடியவில்லை. கொடிய பலம் பொருந்திய இந்தக் கம்பிகளுக்குப் பின்னால் இருந்து கொண்டு, நாலா பக்கங்களிலும் சூழ்ந்திருக்கும் பெரிய மதில் சுவர்களுக் கப்பால் சமாசாரம் அனுப்புவது லேசான காரியமல்ல. இது உனக்குத் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன்.

நானும் என் தோழர்களும் இங்கே வசிக்கும் சிறை வாழ்க்கையின் கஷ்டங்களைப் பற்றி, இப்போது நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இங்கே இருக்கும் கைதிகளெல்லாம் பரம ஏழைகள், ஆதரவற்றவர்கள், பசியால் பீடிக்கப்பட்டவர்கள் என்று மட்டும் உனக்குத் தெரிந்திருந்தால் போதுமென்று நினைக்கிறேன்.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னே இருந்து கொண்டு எழுதும் கடிதம் அது. ஆம்; அவன் திருடத்தான் திருடினான். ஏன் திருடினான்? அதையெல்லாம் பற்றி யார் யோசித்தார்கள்? அவன் மனக் கதவு திறந்து சிந்தனை வெள்ளம் பெருக்கெடுக்கிறது. ஆனால், சிறைக் கதவோ...? இந்த உணர்ச்சிச் சித்திரத்தை, சு. குருசாமி மலையாளத்திலிருந்து மொழிபெயர்த் திருக்கிறார்.

வன விலங்குகளைப் போல் நாங்கள் இருள் சூழ்ந்த இந்தக் கூண்டுகளில் அடைபட்டுக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஏன்? நாங்கள் ஏழ்மையில் பிறந்ததனாலும், மானமும் மரியாதையுமாய் வாழ்க்கை நடத்துதல் எங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாலுமே. இதுதான் எங்களுடைய குற்றம்; இதற்காகத்தான் சமூகம் எங்களுக்குச் சிறைவாசத் தண்டனை விதித்திருக்கிறது.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, நம் வீட்டுக் கடுத்த வீட்டிலிருக்கும் கோவிந்தனும் இங்கே வந்து சேர்ந்திருக்கிறான். அவனையும் திருட்டுக் குற்றத்துக்காகவே கைது செய்திருக்கிறார்களாம். என் அன்புமிக்க தாயார் துன்பம் நிறைந்த இவ்வுலகை விட்டுச் சென்று விட்டாள் என்பதை, அவன் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். ஐயோ! தன் அன்புள்ள மகனைப் போலீஸ்காரர் பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்று கேட்டதும், அவளுடைய உள்ளம் என்ன துடிதுடித்ததோ! என்ன என் துர்ப்பாக்கியம்! தாயின் கடைசிக் காலத்தில் கூட, அவளுக்குச் சேவை செய்ய, என்னால் முடியவில்லை. நான் இல்லாத சமயம் பார்த்து, காலன் அவளை நெருங்கி

யோசித்து என்ன செய்ய? இது போகட்டும்.

என்னுடைய மனைவியின் வியாதி மென்மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறதென்றும், தொழிற்சாலையிலிருந்து ஒரு காரணமுமில்லாமல் உன்னை நீக்கி விட்டார்கள் என்றும் கேட்டு, அளவு கடந்த துக்கம் அடைகிறேன். என் உள்ளத்தில் ஒரு பெரும் புயல் கிளம்பியிருக்கிறது. ஐயோ! கஷ்ட காலமே! நீ என்ன செய்யப் போகிறாயம்மா? எவ்வித ஆதரவுமில்லாத என் மகளும், உன்னுடைய இரண்டு சிறு குழந்தைகளும், உனது முன்தானையைப் பிடித்துக்கொண்டு, நீர் நிறைந்த கண்களால் உன் முகத்தைப் பார்த்து, "அம்மா, எங்களுக்குப் பசி பொறுக்க முடியவில்லை; தின்ன எதாவது கொடுக்க மாட்டாயா?" என்று கேட்கும்போது, நீ என்ன செய்வாயம்மா? ஐயோ! என்னால், அந்தத் துயரக் காட்சியை நினைக்கவும் சகிக்கவில்லையே! நான் குற்றம் செய்தேன் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், அதற்காக நிராதரவான என் குடும்பம் முழுதும் இத்தனை கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமா? அது அத்தகைய பெரிய குற்றமா? ஒரு மனிதனுடைய குற்றத்துக்காகக் கிழவர்களும் குழந்தைகளும் நிறைந்த அவனுடைய குடும்பம் முழுவதையும் அலங்கோலப் படுத்துவது நியாயமா? இது சமூகத்துக்கு அடுக்குமா? ஐயோ! சமூகமே! ஒருவனுடைய குற்றத்துக்காக அவனை மட்டுமல்ல; பால் மணம் மாறாத அவனுடைய பச்சைக் குழந்தைகளையும் மிதித்து மண்ணோடு மண்ணாக்குகிறாயே!

குற்றமா? உண்மையில் நான் எதாவது குற்றம் செய்திருக்கிறேனா? உன் நெஞ்சில் கையை வைத்துச் சொல். நான் குற்றவாளியா? உலகம் முழுதும் உறக்கத்திலாழ்ந்திருந்த அந்த நடுராத்திரி வேளையில், ஐசுவரியம் நிறைந்த அந்த ஜமீன்தாரின் வீட்டுக்குள் சென்று கொஞ்சம் அரிசி எடுத்துக்கொண்டு வந்தது உண்மைதான். நான் திருடிவிட்டேன் என்று உலகம் சொல்கிறது. சரி, அப்படியே வைத்துக் கொள்வோம். ஆனால், நான் எதற்காகத் திருடினேன் என்பதையும் யோசிக்க வேண்டாமா? எனக்கு அந்த ஜமீன்தாரின் மீது எதாவது தீராப் பகையுண்டா? கிடையவே கிடையாது. நான் பட்டினி கிடப்பதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால், பசி பொறுக்க மாட்டாமல் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கும் என் குழந்தைகளையும், வைத்தியம் செய்வதற்கு முடியாததனால் எமன் வாயில் நுழைந்து கொண்டிருக்கும் என் தாயாரையும் என் கண்ணால் பார்த்து எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பேன்? எனக்குத் தண்டனை விதித்த அந்த நீதிபதி, ஒரு நாளைக்கு வேண்டாம், சில மணி நேரம் பட்டினி கிடக்கட்டும்; அப்புறம் தெரியும் பசி எத்தகைய பயங்கரமான வியாதி என்று!

பிறருடைய உழைப்பினால் தங்களுடைய வயிற்றை நிரப்பிக் கொண்டு, சாய்வு நாற்காலியில் படுத்து ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் ஜனங்கள், "நீ என் எதாவது வேலை செய்யக்கூடாது?" என்று என்னைக் கேட்பார்கள். பிரிய சகோதரி! உனக்குத் தெரியாதா? ஒரு வேலை சம்பாதிப்ப

தற்காக நான் எவ்வளவு முயற்சி செய்தேன்? எவ்வளவு கடினமானதாயிருந்தாலும் சரி, நான் எப்பொழுதும் வேலை செய்வதற்குத் தயாராகவே இருக்கிறேன். ஆனால், யார் வேலை கொடுக்கிறார்கள்? பசிப்பிணியைச் சற்றுத் தணிப்பதற்காக நான் எத்தனையோ பேர்களிடம் கடன் வாங்க நேர்ந்தது. அந்தக் கடன்களை யெல்லாம் உரிய சமயத்தில் திருப்பிக் கொடுக்க முடியாததால், நான் கடன்காரன் ஆகிவிட்டேன். அவர்களுடைய பணத்தை நான் ஏன் திருப்பிக் கொடுக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளும் சக்தி அவர்களுக்கில்லை. சில தினங்களுக்கப்புறம், ஜனங்கள் எனக்குக் கடன் கொடுக்க மறுத்தார்கள். அப்புறம் நான் பிச்சை எடுக்க ஆரம்பித்தேன். ஆயினும், இரண்டு நாட்கள் பிச்சை எடுத்ததிலேயே, இவ்வுலகத்தில் பிச்சைக்காரர்களுடைய வாழ்க்கை எவ்வளவு கஷ்டமானது என்று தெரியவந்தது. எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. நமது ஏழைக் குடும்பம் மூன்று பகல் இரவாய்ப் பட்டினி கிடந்தது. குழந்தைகளின் பரிதாபக் காட்சி, என் உள்ளத்தை உலுப்பியது. என்னால் அதைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. கடைசியில் திருடுவதற்கு நிச்சயித்தேன்.

அன்றிரவு ஜமீன்தார் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது, நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்து, கொஞ்சம் அரிசி எடுத்துக் கொண்டு வந்தேன். அந்தக் குற்றத்துக்காகத்தான், சிறைக்கூடம் என்று சொல்லப்படும் இந்த நரகத்துக்கு நான் வர நேர்ந்தது. நல்லதுதான்; சிறிது காலமாவது என் குழந்தைகளின் பசிக் கொடுமையை என் கண்ணால் பார்க்காமல் நான் வாழலாமல்லவா? உண்மையில் அதில் எனக்குச் சற்றுச் சந்தோஷமே. நீ தான் கொஞ்சம் யோசித்துப் பாரேன்; நான் என்ன குற்றம் செய்து விட்டேன்? ஜமீன்தாரிடம் அவருடைய தேவைக்கு அதிகமாகவே பணம் இருக்கிறது; வயிறு நிறையச் சாப்பிடுவதற்குக் கூட என்னிடம் வழியில்லை. உண்மையில் நான் திருடியதால், ஜமீன்தாருக்கு ஒரு விதமான கஷ்டமும் ஏற்படவில்லை. இப்பொழுதும் அவருடைய இரும்புப்பெட்டிகளெல்லாம் பணத்தினால் நிரம்பியிருக்கின்றன. வானளாவும் அவருடைய மாளிகை நிறையத் தானியம் குவிந்து கிடக்கிறது. ஆனால், அவருடைய மாளிகையைச் சுற்றிலுமோ நூற்றுக் கணக்கான ஏழைகள் ஒருவேளைச் சோற்றுக்காக ஓலமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏழை ஜனங்களுக்கு எவ்வித உதவியையும் காணோம். பிச்சை எடுக்கலாமென்றால், அவமானத்தைத் தவிர வேறு ஒன்றுங் கிடைப்பதில்லை. எங்கிருந்தாகிலும் ஏதாவது எடுத்துச் சாப்பிடுவோமென்றால், அது குற்றமாகக் கருதப்படுகிறது. அப்படிச் செய்பவனை, சமூகம் மிக இழிவானவனாகக் கருதுகிறது. அவனுக்குச் சொர்க்கவாசல் திறக்கமாட்டாதாம்! ஏழெட்டு மாதச் சிறைவாசத்துக்கப்புறம், அவன் வெளியில் வந்தானென்றால், ஜனங்களெல்லோரும் அவனைச் சுட்டிக் காட்டி, "உஷார்! அதோ அவன் திருடன்!" என்று கூறுகிறார்கள்.

பிரிய சகோதரி! நானும் உண்மையில் சத்தியவந்தன் என்பது நீ அறிந்த விஷயமே; ஆனால், இன்று உலகம் முழுதும் அசத்

இந்தப் பாழுஞ் சமூகம் மாறாத வரைக்கும், நாம் எங்கும் சத்தியத்தைக் காண முடியாது. வயிற்றுக்காக மனிதன் எதையும் செய்யப் பின்வாங்க மாட்டான், செய்வான் என்பதைச் சமூகம் அறிய வேண்டியது மிக்க அவசியம்.

ஓர் ஏழையைப் பார்த்து, 'நீ பட்டினி கிடக்கலாகாது' என்று உத்தர விட்டால், அவன் அதை எப்படி நிறைவேற்ற முடியும்? ஆனால், உண்மையில் இந்த உத்தரவைப்போல்தான் இருக்கின்றன இன்றையச் சட்டங்கள். உண்ண உணவின்றி வாடும் ஏழைக்குச் சமூகம் என்ன உத்தரவிடுகிறது? "அடே துஷ்டா! பட்டினி கிடக்காதே! கிடந்தாயானால், உனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும். உன்னைச் சிறைக்கு அனுப்புவோம். தெரிந்ததா?" என்று சொல்கிறது. திருடாமல், கொள்ளையடிக்காமல், மனிதன் சுகத்துடனும், சந்தோஷத்துடனும், மானத்துடனும் வாழ முடியாத வரை, இந்தச் சட்டங்களால் எவ்விதப் பிரயோஜனமுமில்லை.

பிரிய சகோதரி! பணக்காரன், ஏழை என்ற வித்தியாசமில்லாத சகோதரிகளாய் வாழும் புனிதமான ஒரு கற்பனை லோகத்தைப்பற்றி, நான் அடிக்கடி கனவு காண்கிறேன். கொடுமைக்குப் பதில் அன்பும், பசிக்குப் பதில் திருப்தியும், அறியாமைக்குப் பதில் ஞானமும் அந்த உலகத்தில் நிலவும். அத்தகைய உலகத்தில் எவனாவது தேவைக்கு அதிகமான பணத்தைப் பெட்டியில் பூட்டி வைத்திருப்பானாகில், அவன் குற்றவாளி என மதிக்கப்பட்டு, மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படுவான். அங்கே யாரும் பசியினால் வருந்த மாட்டார்கள். அத்தகைய சௌந்தரியமான ஒரு சமூகத்தைச் சிருஷ்டிப்பதற்காக, நான் என் எதிர்கால வாழ்க்கையைச் செலவழிப்பேன். சந்தர்ப்பம் நேர்ந்தால் சமத்துவம் என்ற பலிபீடத்தின் மீது, நான் என் வாழ்க்கையைப் பலியிடுவேன். நான் என்னென்ன செய்வேன், எப்படிச் செய்வேன் என்பதையெல்லாம், நான் சிறையினின்றும் விடுதலை பெற்று வந்தவுடன், உனக்கு விளக்கிச்சொல்கிறேன். நீ எனக்கு எல்லா விதங்களிலும் உதவி செய்ய வேண்டும். செய்வாயல்லவா?

—உன் பிரிய சகோதரன்

✲

## அவன் குற்றமா?

**ஜட்ஜி:** (கூண்டிலிருக்கும் எதிரியைப் பார்த்து) "ஏனப்பா, சென்ற இருபது வருஷ காலமாய்த் திரும்பத் திரும்ப என்னிடம் நீ வந்து கொண்டேயிருக்கிறாயே? என்ன இது?"

**எதிரி:** (அலட்சியமாக) "நிஜம்தான் எஜமான்! ஆனால், உங்களுக்குப் புரொமோஷன் ஆகாவிட்டால், அதுக்கு நான் என்ன செய்யறதுங்க?"

# புதுக்கோட்டை வரலாறு

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.**

சென்னை மாகாணத்தின் சமஸ்தானங்களில் ஒன்று புதுக்கோட்டை ராஜ்யம். ஆதியிலே அச்சீமையின் பெயர் தொண்டைமான் நாடு. அதன் அரசர்களுக்குத் தொண்டைமான், பல்லவராயர் எனும் பட்டப் பெயர்கள் உண்டு. புதுக்கோட்டை ராஜ்யத்தை நிறுவிய பெருமை **'கிழவன் சேதுபதி'** யைச் சேரும். அதற்குக் காரணமாயிருந்தவள் **காட்டேரி** என்னும் கண்மணி. அவ் வரலாற்றை இங்கே சிறிது ஆராய்வோம்.

தற்சமயம் புதுக்கோட்டைச் சீமையிலே அடங்கியுள்ள பிரதேசங்களில், ஒரு பாகம் புராதன காலத்திலே சோழ ராஜ்யத்துக்கும், மற்றொரு பாகம் பாண்டிராஜ்யத்துக்கும் உட்பட்டிருந்தன. பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்திலே, நாயக்க மன்னவர் நம் தமிழகத்தைக் கைக் கொண்டனர். அப்போது அம்மன்னவரின் கீழ்ப் பற்பல பாளையக்காரர் உதித்தனர். உதிக்கவே, புதுக்கோட்டை ராஜ்யத்தின் மேற்குப் பாகம், மணப்பாறை, மருங்காபுரி பாளையக்காரருக்கு உட்பட்டிருந்தது; தென் பக்கம் சேதுபதியின் ஆதீனத்தில் இருந்தது; மத்திய பாகத்தைப் **பல்லவராயர்** அல்லது தொண்டைமான்கள் என்போர் ஆண்டு வந்தனர்.

ஆதியிலே தொண்டைமான் நாடாக இருந்த பிரதேசமே இப்போது புதுக்கோட்டை ராஜ்யமா யிருக்கிறது. ஆங்கிலக் கும்பெனியார் நாட்டுக்கு வந்த பின், அவர்களுக்குப் பல்வேறு சேவை செய்து, ராஜ்யத்தைப் 'பக்கா' செய்துகொண்ட பெருமை புதுக்கோட்டைச் சமஸ்தானத்துக் குரியதாகும்.

மதுரையிலே நாயக்கரின் ஆட்சி தோன்று முன்பு (புதுக்கோட்டைக்கு வட கிழக்கிலுள்ள) **அம்புக்கோவில்** என்னுமிடத்தில் திருமலைத் தொண்டைமான் எனும் குறுநிலமன்னவனொருவனிருந்தான். இவனுக்கும் பல்லவராயன் எனும் பட்டப்பெயர் உண்டு. இவனும் புதுக்கோட்டையின் மத்திய பாகத்தை யாண்டு வந்த பல்லவராயத் தொண்டைமானும் தாயாதியர் போல் சதா சண்டையிட்டு நின்றனர். இவனுடைய முன்னோர் திருவேங்கடத்திலே ஆண்டவனுக்குத் திருத்தொண்டு புரிந்து வந்தனர். அத்தொண்டின் அருமை பெருமையினைக் கண்டு, **விஜயநகர** ஸாம்ராஜ்யத்தின் அதிபர்கள் **தொண்டைமான்** எனும் பட்டப்பெயர் சூட்டினர்.

பின்னாளில் அம்முன்னோருக்கு விஜயநகரில் செல்வாக்கு மிகுந்தது. அவர்களில் ஒருவன் திருப்பதி அல்லது **திருமலைத் தொண்டைமான்** எனும் பெயர் பெற்றான்; பெற்ற பின்னர், விஜயநகரத்தின் தளகர்த்தரில் ஒருவனானான்; அப்பால், அம்புக்கோவில் வந்து, அங்கே தண்டல்காரன் ஆயினான்: நாளடைவில் அப்பிரதேசத்தின் தலைவனாகி விட்டான். திருமலைத் தொண்டை

ஆவடை ரகுநாதத் தொண்டை மான் எனப்படுவான். விஜய நகரின் வேந்தர் வேந்தனை ஸ்ரீரங்கராயன் என்பான், ஒரு சமயம் யானை வேட்டையாடச் சென்றான். அச்சமயம் திருமலைத் தொண்டைமான் தனது பராக்கிரமத்தால் கதகளிறொன்றைப் பற்றிக் கொணர்ந்து பார்த்திபன் முன்னே நிறுத்தினன். அது கண்டு களித்த வேந்தன் அத் தொண்டைமானுக்கு 'ராயர்' எனும் பட்டமும் இன்னும் பல பிருதுகளும் வழங்கினன்.

மேலே கண்ட வண்ணம், அம்புக்கோவிலில் ஒரு பல்லவராயத் தொண்டைமானும் புதுக்கோட்டையின் மத்திய பாகத்தில் ஒரு பல்லவராயத் தொண்டைமானும் இருந்து வரலாயினர். திருமலையில் தொண்டு புரிந்து வந்தமை பற்றித் தொண்டைமான் என்று பெயர் வந்தது ஒரு புறமிருக்கத் தமிழ் இலக்கியங்கள் கூறுவதைப் பார்ப்போம். கிறிஸ்தவ சகாப்த ஆரம்ப காலத்தில், தமிழகத்திலே பிரசித்திபெற்ற மன்னவனை கரிகால் சோழன் இருந்து வந்தான். ஒரு தினம் அக்கரிகாலன் வேட்டைக்குப் போயினன். அங்கே நாக கன்னிகை யொருத்தி தென்பட்டனள். அவளை மணக்க விரும்பினன் கரிகாலன். "என் வயிற்றில் உதிக்கும் குமாரனுக்கு முடி சூட்ட வேண்டும்" என்றாள் அப் பெண்பால். சரியென்றான் சோழன். இருவருக்கும் காந்தர்வ மணம் நடைபெற்றது. பின்பு அக்காரிகை தனது நாடு சென்று விட்டாள்.

நாளடைவில் அவளுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அவனுக்குப் பருவம் வந்த பின், ஆதொண்டை மாலையைச் சூட்டி யனுப்பினள் அப்பெண். அவ் காலனை யடைந்து, அரசு வேண்டினன். அரசனோ மறுத்தான். உடனே, ஆகாயவாணி, "சோழனும் சொன்ன சொல் தவறுவனோ" என்றது. என்ன செய்வான் கரி காலன்? பட்ட மகிஷியின் வயிற்றில் வந்த மைந்தனோ இளவரசாக விளங்குகிறான். அரசை யாருக்குக் கொடுப்பது? முடிவில் காவிரிக் கரையைச் சேர்ந்த நாட்டை இளவரசனுக்கு ஈந்தான். நாக கன்னியின் புதல்வனுக்குக் காஞ்சி மண்டலத்தைக் கொடுத்தான். பின்னவன் தொண்டைமான் இளம்திரையன், ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்று பெயர் பெற்றான். இவன் ஆண்டு வந்த காஞ்சி மண்டலம், தொண்டை மண்டலம் என்று பெயர் பெறலாயிற்று.

தொண்டைமான் இளந்திரையனும் அவன் வழி வந்தோரும் நெடுங்காலம் காஞ்சியிலிருந்து ஆட்சி செலுத்தி வந்தனர். அப்போது நாடும் தொண்டை மண்டலம் என்று பிரசித்தி பெற்றது. இளந்திரையனது வமிசத்தினரும் தொண்டைமான்கள் என்று பெயர் பெறலாயினர். ஐந்தாம் நூற்றாண்டிலே பல்லவர் என்னும் மரபினர் தலையெடுத்தனர்; புஜபல பராக்கிரமத்தால் தொண்டை மண்டலத்தைக் கொண்டனர். அவர்களின் காலத்தில் தான், சைவ, வைணவ சமயங்கள் தமிழகத்தில் சிறந்தோங்கலாயின. மகாபலிபுரமும் பிரபல துறைமுகமாக விளங்கி வந்தது. பல்லவரும் தொண்டைமான்கள் எனப்பட்டனர்.

பதினோராம் நூற்றாண்டு தொடங்கியது; மீண்டும் சோழர் தலையெடுத்தனர். தொண்டைமண்டலத்தை மீட்டனர். உடனே பல்லவரின் அரசு மறைந்துவிட்டது. நாளடைவில் அப்பல்லவர் சோழ

குறுநில மன்னராகவும் தளகர்த்தராகவும் துலங்கினர். உதாரணமாக **கருணாகரத் தொண்டைமானைக்** குறிப்பிடலாம். குலோத்துங்க சோழன் காலத்தில், இவனே கலிங்கத்தை வென்றவன். இவன் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள **வண்டலூர்** எனும் இடத்தின் அதிபன். இவன் கொண்ட கலிங்க வெற்றியைக் குலோத்துங்கன் மேலேற்றி, **ஜெயங்கொண்டார்** எனும் புலவர் **கலிங்கத்துப் பரணி** பாடினர்.

இனி விக்கிரமசோழன் காலத்தில், பல்லவரிலே பலர் தொண்டைமான் எனும் பெயருடன் அச்சோழனிடம் சிற்றரசாகவும் தளகர்த்தராகவும் சேவகம் புரிந்து நின்றார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டிய ராஜ்யத்துக்காகப் பெரும் போர் மூண்டது. தனக்கே அரசு உரித்தாகும் என்று வாதாடியவர்களில் ஒருவன் குலசேகர பாண்டியன். தொண்டைமான் எனும் ஒருவன் அக்குலசேகரனுக்கு உற்ற துணையாக இருந்து அரும் போர் விளைத்தான். அத்தொண்டைமானுக்கு, மதுரை அருகிலுள்ள திருமங்கலம், ஸ்ரீவில்லிபுத்தூர் இவை சொந்தமாயிருந்தன. தவிர, தஞ்சை நகருக்கு அருகே தொண்டைமானொருவன் இருந்தனன். இவன் பெயர் **சாமகித நாராயணன்.** தஞ்சையை அடுத்துள்ள **கருந்தட்டாங்குடி** எனும் கிராமத்தை வேதியருக்கு இவன் மானியமாகக் கொடுத்தான். எனவே, தொண்டை மண்டலத்தி லிருந்த பல்லவ மரபினர், சோழ, பாண்டி நாடுகளில் சென்று குடியேறித் தொண்டைமான்கள் என்று விளங்கினர் என்பது திண்ணம்.

மேலும் பல்லவர் என்போர் அரசுரிமை கொண்ட பொழுதும் சரி, தெலுங்கு நாட்டிலும் தமிழ் நாட்டிலும் உள்ள மக்களுடன் விவாக சம்பந்தம் கொண்டு மக்களோடு மக்களாயினர். அன்றியும் தமிழ் வேளாளரின் முப்பது கோத்திரங்களில் பல்லவராய கோத்திரமும் ஒன்று என்பார் ஆராய்ச்சியில் தேர்ந்த ராவ் பகதூர் வெங்கையா. புதுக்கோட்டை யரச பரம்பரையார், பல்லவரின் சந்ததியார் என்பதே சரித்திர ஆராய்ச்சியாளரின் சித்தாந்தம்.

புதுக்கோட்டையின் மத்திய பாகத்திலிருந்து ஆட்சி செலுத்திவந்த தொண்டைமான், சேதுபதிக்கு உட்பட்டே நடந்து வந்தான்; எனினும், ஒரு சமயம் சேதுபதியை விடுத்து, தஞ்சை நாயக்கரைச் சார்ந்துகொள்ளச் சதி செய்தனன். அது கண்டு கிழவன் சேதுபதிக்குச் சீற்றம் மிகுந்தது. உடனே சேதுபதி அத் தொண்டைமானை நீக்கிவிட்டு, அம்புக்கோவிலில் இருந்த ரகுநாதத் தொண்டைமானை (1675-ஆம் ஆண்டிலே) அரியணையில் அமர்த்தினன்; இதற்குக் காரணமாக, அத்தொண்டைமானின் சோதரி-கட்டழகி-காட்டேரி என்பாளையும் முன்னதாகவே மணம் புரிந்திருந்தான்.

ரகுநாதத் தொண்டைமான் பெருவீரன்; பரம ராஜதந்திரி. கரையான் மண் சேர்ப்பதே போல் அவனும் சிறிது சிறிதாக மண் சேர்த்து வந்தான். காலக்கிரமத்தில் அவன் நாடு பெருகியது. அவன் வழிவந்தோர் சமயம் பார்த்து, சேதுபதி, தஞ்சை வேந்தன், மதுரை மன்னவன் ஆகிய மூவரையும் உதறித் தள்ளித் தனிக்காட்டு ராஜாக்கள் ஆயினர். தற்காலப் புதுக்கோட்டை ராஜ்யம் உதித்த வரலாறு இதுவே யாம்.

ராஜ்யத்தின் பரப்பு ஆயிரம் சதுர மைல்; கிழமேலாக 50 மைல்; தென்வடலாக 40 மைல். அதன் வடக்கிலும் மேற்கிலும் எல்லை திருச்சி ஜில்லா; தெற்கே மதுரை; கிழக்கே தஞ்சை. சோழ பாண்டியரும் மதுரை நாயக்க வரசரும் மறைந்த பின்னர், பதினெட்டாம் நூற்றாண்டிலே ஆங்கில வர்த்தகக்கும்பினியார் இங்கே மண் கொள்ள முயன்றனர். அப்போது ஆற்காடு நவாபு பதவிக்குப் போட்டியும் சண்டையும் ஏற்பட்டன. முகம்மதலியின் பக்கம் ஆங்கிலக் கும்பினியார் சேர்ந்து கொண்டனர். போட்டி நவாபின் பக்கம் நின்றனர் பிரஞ்சுக்காரர். அப்போது புதுக்கோட்டை, ஆங்கிலக் கும்பினிக்குப் பக்கபலமாக நின்றது; தன்னைப் பகைவர் சூறையாடியும், தன் நாட்டில் பஞ்சம் நேர்ந்தும் அது வருந்தியது. அப்போதும், விசுவாசங் காரணமாக, ஆங்கிலக் கும்பினியின் அனுப்பி ஊழியம புரிந்தது.

மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் வரிப்பணம் தண்ட யூஸப்கான் என்பானைக் கும்பினியார் அனுப்பினர். அவ்வேளை யூஸப்கானுக்குப் படை உதவிப் பேரூழியம் புரிந்தது புதுக்கோட்டை ராஜ்யம். கும்பினியாரின் மீது மைசூர் ஹைதர் அலி போருக்கு எழுந்த காலையிலும், கும்பினியாருக்கு அந்த ராஜ்யம் தலை கொடுத்தது. அப்பால், சிவகங்கை, பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள் கும்பினிக்கு விரோதமாக எழுந்து, பற்பல சண்டைகள் போட்டார்கள். அச்சமயத்திலும் ஆங்கிலேயரின் பக்கமே நின்றது. மேலும், பாஞ்சாலங் குறிச்சியின் ஊமைத்துரையைப் பிடித்தும் ஆங்கிலேயரிடம் கொடுத்தது. இங்ஙனம் கும்பினியாரிடம் விசுவாசங் காட்டியதில் சிறந்த ராஜ்யம் புதுக்கோட்டையாம்.

✲

## 'கேளுங்கள், கேளுங்கள்!'

அயர்லாந்து தேசத்து நாடகாசிரியரும் அரசியல்வாதியுமான ரிச்சர்டு பிரின்ஸ்லீ ஷெரிடன் என்பவர், காமன்ஸ் சபையில் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது யாரோ ஓர் ஆசாமி நிமிஷத்துக்கொரு தடவை குறுக்கிட்டு, "கேளுங்கள், கேளுங்கள்!" என்று கோஷித்துக் கொண்டேயிருந்தது அவருக்கு மிக்க எரிச்சல் மூட்டியது.

ரிச்சர்டு மேலே பேசும்போது, சகோதர ராஜீய வாதி ஒருவரைக் கண்டிக்கையில், அழுத்தந் திருத்தமாக, "இவ்வளவு பெரிய அயோக்கிய முட்டாளை, அல்லது முட்டாள் அயோக்கியனை நீங்கள் வேறு எங்கே காண முடியும்? எங்கே?" என்று கேட்டார்.

அந்த உபத்திரவ ஆசாமி, தமது வழக்கப்படியே, "கேளுங்கள், கேளுங்கள்" என்று கோஷித்தார்.

உடனே, ரிச்சர்டு, அவர் பக்கம் திரும்பி, "இவ்வளவு சட்டென்று தகவல் கொடுத்தீர்களே; உங்களுக்கு வந்தனம்" என்று சொல்லி, உட்கார்ந்துவிட்டார். சபை முழுதும் ஒரே சிரிப்பு.

# தொழிலாளர் விரும்புவதும்?





நாட்டின்
உயிர் நாடி
--தொழிலாளர்



—அவர்கள்
நாவின்
உயிர் நாடி
அசோகா





# அசோகா

REGD. No. 1506
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

# மாணவருக்கு

மகாத்மா காந்தி
எழுதியதும் பேசியதும்

494 பக்கங்கள்: தெளிவான மொழிபெயர்ப்பு
அழகிய கதர் பைண்டு.

விலை ரூ. 7—8—0. தபாற் செலவு வேறு

"இதை ஒரு மகத்தான புத்தகம் என்றே சொல்லவேண்டும். விஷயத்தைப் போலவே தோற்றமும் மகத்தானதாய் இருக்கிறது. மகாத்மா காந்தி மாணவர்களுக்காகவும் மாணவரைப் பற்றியும் எழுதிய விஷயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. உணர்ச்சி வேகம் வாய்ந்த நல்ல மொழிபெயர்ப்பு"

கல்கி 10—11—43

புதுமைப் பதிப்பகம்
காரைக்குடி

விரைவில் வெளிவரும்!

# புதிய சீனு

சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு நாடு என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும்? இதற்கோர் அரிய உதாரணம் சீனு.

'சாந்தமான சீனு இன்று வீரச் சீனுவாகத் திகழ்கிறது' என்று ஆங்கில அறிஞன் லாரென்ஸ் பின்யன் வியந்து சொல்கிறுன். இந்நூலைப் படித்தால், அது ஏன் என்று விளங்கும்.

சீனுவின் பெருந்தகைமை, ஜப்பானின் துரோகம், சீனுவில் ஐரோப்பியர் புரிந்த திருவிளையாடல்கள், முடியரசு வீழ்ந்து குடியரசு ஏற்பட்ட வரலாறு, சியாங்கே ஷேக் யார் முதலிய பல விவரங்கள் சுவைபட இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன.

எழுதியவர்: வெ. சாமிநாத சர்மா.

சக்தி காரியாலயம்

தபால் பெட்டி நெ 1361 ஜி. டி., சென்னை.

# காசி யாத்திரை



'பாண்டியன்'

'காசி ஊசி கடலாசி; கண்டெட மெல்லாம் பரதேசி' என்பார்களே; இதற்கு என்ன பொருள் என்று பல நாள் வரை எனக்குத் தெரியாது. காசிக்கு நேரே போன போதுதான், விஷயம் புரிந்தது. காசியில் கண்ட இடமெல்லாம் பரதேசிகளை உண்மையாகவே காணலாம். 'பரதேசி என்று வந்தோர் யாரானாலும் பரிவோடு உபசரித்துப் பங்கும் தந்த ஒரு நகரம் இவ்வுலகில் இருக்குமானால் உண்மை' அது அந்தக் காசிமா நகரம் ஒன்றேயாகும். ஹிந்து மத பக்தர்களுக்கு மட்டும் அல்ல, சகல பரதேசிகளுக்குமே, காசி தலை நகராக விளங்குகிறது.

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் ரயில் ஏறினால், மூன்றே நாளில் காசிக்குப் போய்விடலாம். பெஜவாடா தாண்டியவுடன், ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் 'சாகறம், சாகறம்' என்ற சத்தம் கேட்கும். 'யார் சாகிறார்கள், எதற்காகச் சாகிறார்கள்?' என்று எட்டிப் பார்த்தோமானால், சூடான தேத் தண்ணீர் விற்பவன்தான், 'சாகறம், சாகறம்' என்று நம் முன் கோஷம் செய்துகொண்டு வருவான். 'சாகறம்' என்பது 'சா—கரம்' என்பதன் அவசரத் திரிபு. நமக்குள் பல மதங்கள் இருப்பது போலவே, 'சா'யிக்கும் இரண்டு மதங்கள் உண்டு. ஒன்று ஹிந்து சா; மற்றொன்று முஸ்லிம் சா.

'சா'யிக்கு அடுத்தபடி ரயில்வே ஸ்டேஷன்களில் முதல் இடம் வகிப்பது கரம்—தூத் (சூடான பால்). இந்த 'கரம்—தூத்' மிகவும் ருசியாக இருக்கும். ஓர் அணாக் கொடுத்தால், சூடான பாலை ஒரு மண் கோப்பையில் ஊற்றி, நம்மிடம் கொடுத்து விட்டுப் போய் விடுவான். தென் இந்திய ரயில்வே ஸ்டேஷன்களில் நாம் காப்பி குடிப்பதை, காப்பி கொடுத்தவன் 'உர்' என்று பார்த்துக் கொண்டேயிருந்து, டம்ளரையும் டபராவையும் வாங்கிக் கொள்ளத் துடிப்பானே, இதைப்போல் அவர்கள் துடிப்பதில்லை. வடக்கத்தி வியாபாரிகள், கோப்பையை நமக்கே சொந்தமாகக் கொடுத்து விடுவதனால், எவ்வளவோ சௌகரியங்கள் உண்டு! அந்த மாதிரி நம் பக்கங்களிலும் செய்தால்,

எந்தக் கோயிலுக்குள் போனாலும், தீண்டாமைக் கொடுமையைக் காணும் நமக்கு, காசிக் கோயிலுக்குள்ளே போனால், ஓர் ஆச்சர்யமுண்டாகும். அங்கே யார் வேண்டுமானாலும், விசுவநாதரைத் தொட்டுக் கும்பிடலாம். இதென்ன அதிசயம்? பக்கத்திலே மசூதியில் தொழுகை நடக்கையில், இங்கே கண்டாமணி 'கண கண' என்று சப்திக்கும். முஸ்லீம் சகோதரர்கள் இதை ஆட்சேபிக்கவில்லை. காசி யாத்திரையிலே இன்னும் பல விசேஷங்களும் உண்டு. அவைகளையெல்லாம் இங்கே கட்டுரையாளர் வர்ணிக்கிறார்.

கும் !

காசி வரையில், பூரி, தூத், ஹிந்து சா, முஸ்லீம் சா என்ற சத்தமே கேட்கும். நமக்குப் பிரியமான ஓர் இட்டலி, தோசை, இடியாப்பம் என்பவை மருந்துக்குக் கூடக் கிடைக்க மாட்டா. விதியே என்று வடக்கத்தி உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

காசி ஸ்டேஷனை ரயில் அடைந்ததும், பலர் வந்து நம்மை வரவேற்பார்கள். நம் பெட்டிகளை, நமக்குச் சிரமமில்லாமல், பலர் தூக்கிக் கொள்வார்கள். நமக்கு ஆச்சரியமா யிருக்கும். நம்மை ஏன் இப்படி யெல்லாம் வரவேற்று உபசரிக்கிறார்கள் என்று நாம் திகைக்கும் வேளையில், அவர்களே நமக்கு விஷயத்தைச் சொல்லி விடுவார்கள். மிகச் சொற்பமான செலவில் மோட்ச லோக சாம்ராஜ்ய சாயுஜ்ய பதவிகளை அடையும்படி செய்து விடுவதாக, ஒருவர் சொல்லுவார். சிலர் நமக்காகவே சத்திரம் கட்டி வைத்திருப்பது போலவும், நம் வருகைக்காக வெகு நாள் ஆவலுடன் காத்திருந்தது போலவும் பேசுவார்கள். இவர்கள் தான் ஏமாற்று வித்தையில் பிரசித்தி பெற்ற பண்டாக்கள். இவர்களிட மிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால், முதலில் நமக்கு ஹிந்தி தெரிய வேண்டும். அடுத்தபடி நாம் யாத்திரிகர் போல் காண்பித்துக் கொள்ளக் கூடாது; ஏதாவது ஒரு வீட்டின் பெயரைச் சொல்லி, நழுவிவிட வேண்டும்.

ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தால், குதிரை வண்டிகையா யிருக்கும். ஆனால், எல்லாம் ஓட்டையா யிருக்கும். குதிரைக்கு அழகாக ஆபரணம் பூட்டும் வழக்கம், காசிக் குதிரை வண்டிக்காரர்களிடம் இல்லை. நம் பக்கத்து மாடுகளைப் போல் குதிரைகளை நினைத்து, குதிரைகளின் கண்களை மூடாமல் வெறும் கடிவாளத்துடன் அவர்கள் ஓட்டுகிறார்கள். ஆள் இழுக்கும் ரிக்ஷா, காசியில் கிடையாது. ஆனால், சைக்கிள் ரிக்ஷா மிக அதிகம்.

காசி நகரம் பார்ப்பதற்கு மிக்க அழகாக இருக்குமென்று நினைத்துப் போனால், ஏமாற வேண்டியதுதான். ஏனெனில், அங்கே சந்துகளே அதிகம். அகலமான பெரிய வீதிகள் ஒன்றிரண்டு தான் உண்டு. வீட்டு மாடிகளெல்லாம் மிக்க உயரமா யிருக்கும். ஒரு வீட்டு மாடியிலிருந்து எதிர் வீட்டு மாடிக்குப் பலகை போட்டு நடக்கிறார்கள் என்றால், சந்துகள் எவ்வளவு குறுகலாக இருக்க வேண்டும், பார்த்துக் கொள்ளுங்களேன்! இந்தச் சந்துகளில் சென்றால், சில சமயம் நம் தலைகளில் எச்சில் இலைகள் விழலாம்; அல்லது வீடு கூட்டிய குப்பைகளை, நம் சிரமேல் தாங்க நேரிடலாம். இவையெல்லாம் நேராமல் தப்புவதற்காக மேலே கொஞ்சம் பார்த்து நடந்தால், கீழே பாதைகளில் நீட்டிக் கொண்டிருக்கும் கற்கள் நம் பாதாரவிந்தத்தைப் பதம் பார்த்துவிடும்; அல்லது சந்தை அடைத்துக் கொண்டு சாவதானமாக அசை போட்டுக் கொண்டிருக்கும் ரிஷப வாகனங்களின் மீது முட்டிக் கொள்ள நேரிடும்.

சந்துகள் நிறைந்திருக்கின்றன என்று விசாரித்ததில், தெரிய வந்த விஷயம் வருமாறு: மொகலாயர்கள் அரசாட்சி புரிந்த காலத்தில், அவர்கள் கூட்டமாக வந்து ஹிந்துக்களின் பெண்களைத் தூக்கிக் கொண்டு போய் விடுவார்களாம். இம் மாதிரி நெருங்கிய சந்துகளாக இருந்தால், சேர்ந்தாப் போல் கூட்டமாக அவர்கள் வர முடியாது; ஒவ்வொருவராகத்தான் வரவேண்டும். அப்படி அவர்கள் வரும்போது, ஹிந்துக்கள் தத்தம் வீடுகளின் உயரமான மாடிகளிலிருந்துகொண்டு, பெரிய பெரிய கற்களைக் கீழே உருட்டி விடுவார்களாம். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மீண்டும் வர முடியாத இடத்துக்கு, மொகலாயர்கள் போய்ச் சேர்ந்து விடுவார்களாம்.

மொகலாய அரசனின் இன்னொரு காரியத்தையும் சொன்னார்கள். அதை நாம் இப்பொழுதும் பார்க்க முடிகிறது. இப்போது இருக்கும் விசுவநாதர் கோவிலுக்குப் பக்கத்தில், ஒரு பெரிய மசூதியிருக்கிறது. அந்த மசூதி தான் முன் காலத்து விசுவநாதர் கோவிலாம். அதை இடித்துத் தகர்த்து, அதில் இந்த மசூதியைக் கட்டி விட்டார்கள். மசூதியில் ஹிந்துக் கோவிலின் சின்னங்கள் இன்றும் தென்படுகின்றன. ஒரு நந்திகூட இருக்கிறது. ஹிந்துக்கள் இன்றும் பூஜிக்கிற ஒரு கிணறும் மசூதிக்குள் இருக்கிறது.

இந்தக் கிணற்றைப் பற்றி ஒரு வேடிக்கையான கதை சொல்லுகிறார்கள். மொகலாய அரசனின் படைகள் தம் வாசஸ்தலத்தை (கோவிலை) இடித்துத் தகர்க்க வருகிறார்கள் என்று தெரிந்ததும், விசுவநாதப் பெருமான் தமது இந்தக் கிணற்றுக்குள் குதித்து ஒளிந்து கொண்டாராம்! இந்த ஹிந்துக் கடவுளே இப்படித்தான்! எதிரியைச் சண்டை போட்டு விரட்டாமல், நம்மைத்தான் ரொம்பவும் சோதிப்பார்! பாருங்கள்; ஒரு ஹிந்துவும் முஸ்லீமும் ஓர் ஊருக்கு இரவில் பிரயாணமானார்கள். வழியில் மழை அதிகமாக அடித்து ஊற்றியதால், ஒரு சிவன் கோவிலுக்குள் நுழைந்து அங்கே படுத்தார்கள். ஹிந்து, கடவுளுக்குப் பயந்து ஒரு மூலையில் போய்ப் படுத்துக் கொண்டான். ஆனால், முஸ்லீமோ, ஆண்டவன் சந்நிதானத்துக்கு முன் கடவுளை நோக்கிக் காலை நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டான். ஓரமாக ஒதுங்கிப் படுத்திருந்த தம் பக்தனாகிய ஹிந்துவுக்கு முன், கடவுள் நடுச் சாமத்தில் பிரத்தியட்சமானார். "ஏ! பக்தா" என்று அதட்டிக் கூப்பிட்டார். "பிரபோ, என்ன இந்த ஏழையைத் தேடி வந்தது?" என்று, உடம்பு வெட வெடவென்று ஆடச் சிரம் வணங்கிக் கேட்டான் பக்தன். "அதோ பார்! அந்த முகமதியன் எனக்கு நேரே கால் நீட்டிக்கொண்டு படுத்திருக்கிறான். அவன் காலை மடக்கச் சொல்லுகிறாயா; அல்லது உன் கண்ணைப் பிடுங்கட்டுமா?" என்று வீராவேசத்தோடு கடவுள் திருவாய் மலர்ந்தருளி மறைந்து விட்டார். பக்தன் என்ன செய்வான், பாவம்! அந்த முஸ்லிம் நண்பனைக் கெஞ்சி, காலை மடக்கச் சொன்னதாகக் கதை. ஆகவே, காசியில் ஜனங்கள் அந்தக் கிணற்றுக் கதையைச் சொல்லுவதில் வியப்பொன்றுமில்லை.

இப்போது மசூதிக்குப் பக்கத்தில் தான், காசி விசுவநாதர்

முன் மேளம் கொட்டக் கூடா தென்று இந்தியாவின் பல பாகங்களில் ஹிந்து-முஸ்லிம் கலகங்கள் இக்காலத்தில் நடைபெறுவதை நாம் பார்க்கிறோம். ஆனால், காசியில் அந்தச் சண்டையே கிடையாது. எப்போதும் விசுவனாதர் கோவிலில் கண்டாமணியும், மேளமும் சத்தம் செய்த வண்ணமாகவே இருக்கின்றன; பக்கத்திலுள்ள மசூதியில் முஸ்லீம் சகோதரர்கள் தொழுத வண்ணமாகவே யிருக்கிறார்கள்.

விசுவனாதர் கோவிலுக்குச் செல்ல வேண்டுமானால், மிக நெருக்கமான சந்து வழியாகத் தான் செல்லவேண்டும். வழி நெடுகலும் ஒட்டுக் கடைகள் இருக்கும். ஆகவே, சுவாமி தரிசனம் செய்யச் செல்லும் பக்தர்களும் வியாபாரம் செய்யும் கூட்டமும், அந்தச் சந்தில் எப்பொழுதும் நின்று கொண்டும் போய்க் கொண்டு மிருக்கும்.

இவ்வளவையும் தாண்டிக் கோவிலை அடைந்தால், கோவில் நம் பக்கத்துக் கோவில் போல் இல்லாமல், மிகவும் குறுகலாகவும் பார்வையில்லாமலும் இருக்கும். நமது மதுரைக் கோவிலுக்குள் முந்நூறு காசி விசுவனாதர் கோவிலை வைக்கலாம். காசிக் கோவிலின் கோபுரம் பூராவும் தங்க மயமாக இருக்கிறது. காசி விசுவனாதர் கோவிலுக்கு, மேல் மாடி உண்டு. சுவாமி நம் பக்கத்து லிங்கம்போல் தான் இருக்கிறார். ஆனால், கொஞ்சம் பள்ளத்தில் வீற்றிருக்கிறார். மிகவும் ஒடுக்கமான இடத்தில் காற்று வராத கட்டிடத்துக்குள் இருப்பதால், விசுவனாதருக்கு வியர்வை உண்டாகுமென்று கருதி, அவர் மின்சார விசிறி ஒன்று ஓடிக் கொண்டே யிருக்கிறது.

நான்கு வேளை பூஜை, மிகமிக ஆடம்பரத்துடன் விசுவநாதருக்கு நடந்து வருகிறது. அதில் மூன்று வேளை பூஜை, நாட்டுக் கோட்டைச் செட்டியார்களால் நடத்தப்படுகிறது. அண்டாக் கணக்கில் பால் அபிஷேகம் செய்கிறார்கள். மேள கோஷ்டி ஒன்றும் நம் நாட்டு வழக்கப்படி வைத் திருக்கிறார்கள். மேளம் என்றால், நமக்குச் சர்வ சாதாரணம். வட நாட்டிலோ மேளக் கச்சேரி என்றால், மிகவும் ஆச்சரியப்பட்டுக் கூடி விடுவார்கள்; வியந்து வியந்து பாராட்டுவார்கள். தமிழர்களுக்கு இது ஒரு பெருமை!

காசி விசுவனாதருக்குப் பூஜை செய்யும் உரிமையை, பல மகாராஜாக்கள் பல லட்சக்கணக்கில் பணம் கொடுத்துக் கேட்டும், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அந்த உரிமையை விட்டுக் கொடுக்க ஒப்பவில்லை. கோவிலுக்காக ஒரு பெரிய நந்தவனம் கூடச் செட்டியார்களால், ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வளவையும் நிர்வகிக்க, நகர சத்திரம் ஒன்று இருக்கிறது. தென்னாட்டி லிருந்து செல்பவர்களை, நகர சத்திரத்தின் நிருவாகி திருவாளர் சு. வீர. வீரப்ப செட்டியாரவர்கள் மிகவும் உபசரித்துக் கொண்டாடுகிறார்கள். பக்தர்கள் விசுவனாதருக்கு மாலைகள் போட்டுத் தொழுது, அந்த மாலைகளைத் தம் கழுத்தில் போட்டுக் கொண்டு உல்லாசமாக நடப்பதைப் பார்த்தால், நமக்கு வேடிக்கையா யிருக்கும்.

காசி விசுவனாதரை நாம் அனைவரும் தொட்டுக் கும்பிட

வழக்கம் அங்கே இல்லை. சாவியிட்டுப் பூட்டுமிட்டுச் சுவாமியிருக்குமிடத்தைச் சிறைச்சாலையாக்கவில்லை. ஹிந்துக்களுக்குத் தலைமை ஸ்தலமும் புண்ய க்ஷேத்திரமுமான காசியில் தீண்டாமையில்லாதிருக்க, மற்ற இடங்களில் அளவு மீறிய கட்டுத்திட்டங்களுக்குக் கடவுள் உட்படுத்தப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருப்பது வேடிக்கை தான்.

இவ்வளவு பெருமை மிக்க கோவிலுக்குத் தர்ம கர்த்தாவாக ஒரு தென்னாட்டுத் தமிழர் இருக்கிறார் என்றால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். காசியிலே மிகவும் செல்வாக்குடையதமிழர், மேலூரைச் சேர்ந்த திருவாளர் முத்து வீரப்ப முதலியாரவர்கள். அவர்தான், கோவில் தர்ம கர்த்தா.

காசி என்றால், உடனே அடுத்த வார்த்தை கங்கை என்பது நாம் அறிந்ததே. 'காசியிலே கங்கையிலே நூற்றி எட்டுத் திருப்பதியிலே' என்று நம் சாஸ்திரிகள் நமக்கு உருவேற்றியிருக்கிறார்களே; அந்தப் புனிதமான கங்கைதான் காசியில் 'மயானம்'. அதில் விழுந்து சாவது கூட நலமென்று பல பாட்டிகள் கங்கையில் விழுகிறார்கள். கங்கையில் பிணங்கள் மிதப்பதும் வெறுக்கத் தக்க பொருள்கள் தென்படுவதும், சிலருக்குக் குளிக்கக்கூடத் தடையாக இருக்கலாம். ஆனாலும், பக்திப் பெருக்கால் தலையை முழுகி விடுகிறார்கள். இங்கேதான், பண்டாக்களின் சர்வ வல்லமைகளும் காண்பிக்கப்பட்டு, பக்தர்களிடம் பணம் பிடுங்கப்படுகிறது.

ஹரிச்சந்திர கட் என்ற இடத்தில், தென்னாட்டைச் சேர்ந்த ... கிறார்கள்.

காசி ஹிந்து சர்வ கலாசாலை மிகவும் பிரசித்தி பெற்றது. மாளவியாஜி, சர்வ கலாசாலைக்குள்ளேயே வசிக்கிறார். இந்தப் பிரம்மாண்டமான சர்வ கலாசாலைக்கு, தென்னாட்டைச் சேர்ந்த சர் ராதா கிருஷ்ணன் வைஸ்-சான்சலராக இருக்கிறார். தென்னாட்டில் 'இந்தியன் டீ' யைப்பற்றிச் செய்யும் விளம்பரத்தைப்போல, காசியில் 'இந்தியன் காப்பி' யைப்பற்றி விளம்பரம் செய்கிறார்கள். ஏனெனில், அங்கே காப்பி குடிப்பவர்கள் அதிகம் இல்லை.

காசியில் காந்தி அடிகள் திறந்து வைத்த பாரதமாதா கோவில் ஒன்று இருக்கிறது. கோவில் என்றவுடன், நம் மனக்கண் முன் ஒரு கோபுரம், சுற்றுப் பிரகாரம், சுவாமியின் உருவம் எல்லாம் வந்து நிற்கும். ஆனால், பாரதமாதா கோவில் ஒரு பங்களா மாதிரிதான் இருக்கிறது. இந்தியா போன்ற ஒரு படத்தைச் சலவைக் கல்லால் அற்புதமாகச் செதுக்கி, பிரமிக்கத்தக்க வேலைப்பாடு காட்டியிருக்கிறார்கள்.

காசியிலே கங்கையிலே தீண்டாமையில்லாதது போல நூற்றி எட்டுத் திருப்பதியிலும் இல்லாமலிருக்கலாகாதா என்ற எண்ணமும், ஹிந்துக் கோவிலில் மேளம் கொட்டப் பக்கத்திலுள்ள மசூதியில் நிம்மதியாகக் காசி முஸ்லீம்கள் தொழுவதைப்போல இந்தியா வெங்கும் இருக்கலாகாதா என்ற ஏக்கமுமே, காசியை விட்டுத் திரும்பும்போது, பொது நல எண்ண முடையவர்களுக்கெல்லாம் உண்டாகும்.

# ஆகி வந்த படம்

சரோஜா ராமமூர்த்தி

கிருஷ்ண ஜயந்திக்கு இன்னும் ஒரு வார மிருக்கும். சுகன்யா, வீட்டிலுள்ள புதிய கிருஷ்ணன் படம் ஒன்றைத் தேடி எடுத்து வைத்திருந்தாள். அந்த வருஷம்தான் அவளுக்குக் கலியாணமாயிற்று. வீட்டில் பெரியவர்கள் என்று யாருமில்லை. வீட்டின் எஜமானி என்ற பொறுப்புடன் பண்டிகைகள் ஒவ்வொன்றையும் விமரிசையாய்ச் செய்வதில், அவளுக்கு அபார ஆசை. கிருஷ்ணன் படம், புராதனமானதுதான். பிரசித்தி பெற்ற ஓர் ஓவியன் வரைந்த படம். ஆனால், முகத்தில் தெய்விகக் களை, அழகு எதுவும் இல்லை. வெள்ளைக்காரக் குழந்தைக்கு நகை போட்ட மாதிரி என்று சொல்லி விடலாம். அந்தப் படம் கிடைத்ததில், அவளுக்கு ஒரு திருப்தி. என்றோ இறந்துபோன தன் மாமியார் வைத்துப் பூஜித்த படம் என்ற பக்தியுடன், அதைப் பத்திரப் படுத்தி வைக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அத்துடன், வீட்டு விவகாரங்களை அதிகம் கவனிக்காமல் ஆபீஸுக்குப் போவதும், ஊர் சுற்றுவதுமாய் இருக்கும் தன் கணவன் முத்துக்கிருஷ்ணனிடம் படத்தைக் காண்பிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

அண்டை அயலில் உள்ளவர்கள் எல்லோரும் மராத்தியர்கள். சுகன்யாவுக்கு ஹிந்தியோ, மராத்தியோ தெரியாது. ஜாடைமாடையாய் அவர்களுடன் ஒன்றிரண்டு வார்த்தை பேசுவாள்.

கணவன் வரும் நாழிகை ஆகிவிட்டதா என்று மணியைப் பார்த்தாள். அவன் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. தென்னிந்திய பட்சண வகைகளுடன், தான் அந்த 'ஆகி வந்த பட'த்தை வைத்துக் கிருஷ்ண ஜயந்தி கொண்டாடப்போவதை, அண்டை அயலாரிடம் சொல்ல முடியாமல் இருந்தது, அவளுக்கு ஒருவித வேதனையை அளித்தது. அது ஸ்திரீகளின் சுபாவம் போலும்!

மாலைக் காற்றுக் குறுகுறு என்று அடிக்க ஆரம்பித்தது. தாதரில் ஜன நெருக்கமற்ற ஒரு தெருவில், மாடியில் குடியிருந்தார்கள் அவர்கள். அழகிய 'பால்கனி'. அதைச் சுற்றிப் படர்ந்திருக்கும் சம்பங்கிக் கொடியில் கொத்துக் கொத்தாய் மலர்கள். அவைகள் காற்றில் அசையும்போது, கம்மென்று மணம் வீசியது. பக்கத்து 'பால்கனி'யில் மராத்தியப் பெண் பிரபா நின்று கொண்டிருந்தாள். அவள் காலேஜில் படிக்கிறவளாய் இருந்தாலும், சுமாராகத்தான் ஆங்கிலம் பேச வரும். வட இந்தியர்களே அவசியமான சம

அது அழகில்லை; புதுமையாயில்லை. ஆயினும், நீண்ட காலமாய் மாமி பூஜை செய்து வந்த படமாகும். அதிலே அவளுக்கு அளவிறந்த பக்தியும், பற்றுதலும். ஆனால், அவனுக்கென்ன தெரியும், அதெல்லாம்? அவன் அதைத் தெருவிலே எறிந்துவிடுகிறான். என்றாலும், கிருஷ்ண ஜயந்தி அன்றைக்கோ.........?

கம் பேச மாட்டார்கள். பிரபா, சுகன்யாவைப் பார்த்து, "இன்று எங்கேயும் வெளியே போக வில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை, இன்னும் ஒரு வாரத்தில் கிருஷ்ண ஜயந்தி வரப் போகிறது. வீட்டில் ஒழிவே இல்லை. பூஜை செய்யப் படம் வேண்டுமே; பெட்டியைத் தேடினேன். ஒரு படம் அகப்பட்டது. மாமியார் பூஜை செய்த படம் போல் இருக்கிறது. என் கணவர் இருக்கிறாரே, ஊரிலிருந்து வந்த பெட்டியைக் கையால் கூடத் தொடவில்லை. நான் கேட்டதற்கு, 'ஏதாவது ஓட்டைச் சாமான்கள் இருக்கும்' என்றார். பார்த்தாயா? புருஷர்களுக்கு இதெல்லாம் எங்கே தெரிகிறது?" என்றாள் சுகன்யா.

பிரபா, "ஆமாம்" என்று புன்னகையுடன் தலை அசைத்தாள்.

தெருக் கோடியில் முத்துக்கிருஷ்ணன் வருவதைப் பார்த்தாள் சுகன்யா. அவ்வளவுதான். பிரபாவின் புன்னகையைக்கூடக் கவனியாமல், உள்ளே போய் அவனை வரவேற்கத் தயாராய் நின்றாள்.

"பொழுது போகவில்லை, போகவில்லை என்று என்னையும், இந்த ஊரையும் பழித்தாயே; சிநேகிதமெல்லாம் பலமாய் இருக்கிறதே" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் முத்துக்கிருஷ்ணன்.

"ஆமாம், நீங்களும்தான் ஊரிலிருந்து வந்த பெட்டியில் ஓட்டைச் சாமான்கள் இருக்குமென்று பழித்தீர்கள். இன்றைக்குத் தானே தெரிந்தது; திவ்யமான தேடினதில் அகப்பட்டது" என்று சொல்லிக்கொண்டே, சுகன்யா படத்தை எடுத்து வந்து காண்பித்தாள்.

முத்துக்கிருஷ்ணன் நிதானமாகப் படத்தை வாங்கிப் பார்த்தான். பிறகு, ஒரு விதச் சிரிப்புடன், "இந்தப் படம் நன்றாக இருக்கிறதென்றா சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"நன்றாக இருக்கிறதோ இல்லையோ; அம்மா வைத்துப் பூஜை செய்து 'ஆகி' வந்த படம். அழகென்னவாம் அழகு! பகவான் எப்படியிருந்தால் என்ன?" என்றாள் சுகன்யா.

முத்துக்கிருஷ்ணன், சுகன்யாவின் அருகில் சென்று உட்கார்ந்தான். 'பிரைவேட்' வாத்தியார் மாதிரி படத்தைக் கையில் வைத்துக்கொண்டு, அதன் லட்சணங்களை விவரிக்க ஆரம்பித்தான்.

"இந்தா! அசடு மாதிரி பழங்கதை பேசுகிறாயே. புராதன சித்திரத்தில் இருக்கும் எந்த உயர்ந்த



பக்தர்கள், குழந்தைக் கண்ணனை அழகுத் தெய்வம் என்று புகழ்ந் திருக்கிறார்களே. அவனுடைய வாயைக் குமுதச் செவ்வாய் என்கிறார்கள். இந்தச் சித்திரம் சப்பை மூக்கும், வாயுமாய் இருக்கிறதே! வேறு படம் நல்லதாய் வாங்கினால் போச்சு'' என்று முடித்தான்.

சுகன்யாவின் முகம் சுண்டிப் போயிற்று. முகத்தை 'உர்' என்று வைத்துக் கொண்டு 'பால்கனி'யில் போய் நின்று விட்டாள். அடுத்த வீட்டு 'பால்கனி'யில் ஏதோ புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தாள் பிரபா.

சுகன்யாவைப் பார்த்ததும், "வேலையெல்லாம் முடிந்ததா? உங்கள் மாமியாரின் படத்தைக் காண்பிக்கிறீர்களா?'' என்று கேட்டாள். அவள் கேட்டவுடன், சுகன்யாவுக்கு லஜ்ஜையாய்ப் போய்விட்டது. 'சப்பை மூக்கும், வாயும்' என்று தன் கணவன் பழித்தது உடனே நினைவுக்கு வரவே, "நாளைக்குக் காண்பிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, உள்ளே திரும்பி வந்தாள்.

2

அன்று ஞாயிற்றுக் கிழமை. பம்பாயிலிருக்கும் தென்னிந்தியர்களுக்கு, அது ஒரு பண்டிகை தினம் போலே. வீட்டில் பாயஸத்தோடு, நண்பர்களுடன் சாப்பிடுவார்கள். இதெல்லாம் யுத்தத்துக்கு முன்பு.

சுகன்யா, சமையல் அறையில் ஏதோ வேலையாய் இருந்தாள். அன்று படத்தைப் பற்றி நடந்த விவாதம் மறுபடியும் துளிர் விடவில்லை. ஏனென்றால், முத்துக்கிருஷ்ணன் படத்தைப் பற்றி மறுபடி பேசவேயில்லை. சுகன்யா வைத்துப் பூஜை செய்யும் எண்ணத்துடனேயே இருந்தாள்.

பக்கத்து அறையில் 'லொட்டு லொட்' டென்று சத்தம் கேட்டது.

"இந்தாருங்கள்! வீட்டுக்காரன் வந்தால், என்ன சொல்லமாட்டான்? வீடு பூராவும் ஆணி அடிப்பதே வேலையாய்ப் போய் விட்டதே உங்களுக்கு'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அவள்.

முத்துக்கிருஷ்ணன், கையில் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு, அதன் ஆணிகளைக் கழற்றிக் கொண்டிருந்தான்! சுகன்யா திகைத்துப் போனாள். அவள் கண்களில் ஜலம் தளும்ப ஆரம்பித்தது. முகம் சிவக்க ஆத்திரத்துடன், "என்ன! இதென்ன வேலை? என்னைப் பார்த்தால் மனுஷியாகத் தோன்றவில்லையா உங்களுக்கு?'' என்று இரைந்தாள்.

"என்ன நடந்துவிட்டது? ஏன் இப்படிக் கத்துகிறாய்?'' என்று கேட்டான் முத்துக் கிருஷ்ணன்.

"நாளைக்குப் பொழுது விடிந்தால் கிருஷ்ணஜயந்தி ஆயிற்றே; பூஜைக்கு என்ன பண்ணுவது?'' அவளுடைய குரல் கம்மிப் போயிற்று. பக்கத்திலிருந்த சோபாவில் உட்கார்ந்து வாசிக்க ஆரம்பித்தாள்.

முத்துக்கிருஷ்ணன், வாய் பேசாமல், படத்தின் கண்ணாடியையும் சட்டத்தையும் மட்டும் எடுத்துக்கொண்டு, காகிதத்தை 'பால்கனி' வழியாய்க் கீழே விட்டெறிந்தான். சுகன்யா கோபத்தால் உள்ளும் புறமும் வெதும்ப, அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை.

யில் எழுந்தவுடன் பிரபாவைத் தேடிக்கொண்டு, அவளது அறைக்குச் சென்ருள் சுகன்யா. பிரபா காலேஜுக்கு அவசரமாய்க் கிளம்பிக் கொண்டிருந்தவள், "வாருங்கள், இன்று பூராவும் வேலை சரியாய் இருக்கும் என்றீர்களே? எது, காலையிலேயே இந்தப் பக்கம் வந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

அவள் அடிக்கடி கிருஷ்ண ஜயந்தியைப் பற்றியே நினைவூட்டிக் கொண்டிருந்தது, தான் அவளிடம் பெருமை அடித்துக் கொண்டதால்தான் என்பதை மறந்துவிட்டாள் சுகன்யா. அதற்குப் பதிலாக அவள்மீது இவளுக்கு அபாரமாகக் கோபம் வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "உங்களிடம் ஏதாவது கிருஷ்ணன் படமோ, பொம்மையோ இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"ஏன், உங்கள் பழைய படம் என்னவாயிற்று?" என்று கேட்டாள் பிரபா ஆச்சரியத்துடன்.

"அதுவா? அது அவருக்கு நன்ருய் இல்லையாம்; தூர எறிந்து விட்டார். அவரவர்களின் இஷ்டம். உங்களிடம் ஏதாவது இருந்தால்............"

"இந்தப் பொம்மைதான் என்னிடம் இருக்கிறது. டில்லிக்குப் போனபோது அடையாளமாக வாங்கினேன். சலவைக் கல்லால் செய்தது. முகம் எவ்வளவு லட்சணமாய் இருக்கிறது பாருங்கள். வேண்டுமானல் பூஜைசெய்ய எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அதை அவளிடம் கொடுத்தாள் பிரபா.

பொம்மையைக் கொண்டு வந்து ஹாலில் வைத்துவிட்டு கிருஷ்ணன் அவசரமாய் எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தான்.

"நாளும் கிழமையுமாய் ராத்திரி பன்னிரண்டு மணிக்கு வராதீர்கள். தினம்தான் ஆபீஸ் தொல்லை இருக்கவே இருக்கிறது. சீக்கிரம் வருகிறீர்களா? படத்தைத்தான் தூர எறிந்தாயிற்று. வேறு படமாவது சுறுக்க வாங்கி விடுங்களேன்" என்று, கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

"இன்று அவசரமாய்ப் புனைவுக்குப் போகிறேன். சீக்கிரம் வரமுடிந்தால் படம் வாங்கிக் கொண்டு வருகிறேன். அதுவும் உன் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது" என்று அவள் கன்னத்தில் அவன் லேசாகத் தட்டினன்.

"குளித்து விட்டு மடியாய் இருக்கிறவளைத் தொட்டு என்ன விளையாட்டாம்!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டாள் சுகன்யா.

முத்துக்கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே போனன்.

### 3

மாலை ஆறு மணிக்கு மேலாகி விட்டது. பட்சணங்களை எல்லாம் ஹாலில் கொண்டுவந்து வைத்தாள் சுகன்யா. பிரபாவின் பொம்மைதான் அத்தனை பட்சணங்களையும் தின்பதற்கு அங்கே காத்துக் கொண்டிருந்தது. "இந்தமாதிரி இசைகேடான புருஷர்களை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது?" என்று நினைத்துக் கொண்டே, பூஜையை ஆரம்பித்தாள்.

கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. முத்துக்கிருஷ்ணன்

கழற்றி விட்டு, கையிலிருந்த 'பாக்கிங்'கைப் பிரித்தான். சுகன்யா அதைக் கவனியாமல் அலட்சியத்துடன் பூஜையில் கவனம் செலுத்துக் கொண்டிருந்தாள். பூராவும் பிரித்து முடிந்தவுடன், "சுகன்யா!" என்று கூப்பிட்டான். சுகன்யா திரும்பிப் பார்த்தாள்.

"இந்தப் படம் எப்படியிருக்கிறது பார்" என்று அவளிடம் கொடுத்தான்.

சுகன்யா படத்தைப் பார்த்தாள். பார்த்ததும் அவள் முகத்திலே ஒருவித வியப்பும், உதட்டை விட்டு வெளிவர முடியாமல் தவித்த ஒரு புன்சிரிப்பும் தென்பட்டன. அது, முன்னொரு நாள் அவன் வீசியெறிந்த அந்த 'ஆகி வந்த படம்' தான்.

துப் பார்த்து, "இதைத்தான் அன்று தூர எறிந்தீர்களே?" என்று கேட்டாள்.

முத்துக்கிருஷ்ணன் சிரித்தான்.

"ஆமாம், அன்று அதற்காக நீ ரொம்ப வருத்தப்பட்டாய். அதனல் ஆபீஸுக்குப் போகும்போது, தெருவில் கிடந்த படத்தை எடுத்துக் கொண்டு போய் ஆபீஸில் வைத்திருந்தேன் பத்திரமாக" என்றான்.

குறைந்திருந்த சந்தோஷமெல்லாம் மறுபடி வந்துவிட்டது சுகன்யாவுக்கு. பூஜையை விரைவாக முடித்துக்கொண்டு 'ஆகி வந்த படத்'தைப் பிரபாவிடம் காண்பிப்பதற்காகப் பெருமையுடன் அதை எடுத்துக்கொண்டு அடுத்த வீட்டுக்குச் சென்றாள்.

✲

## வெளியேறிய காரணம்

ஒரு ராஜ மாளிகையில் ஏதோ ஒரு விழாவுக்கு ஏற்பாடாகியிருந்தது. **'உண்மை விளம்பி'** என்ற பத்திரிகையின் நிருபர் சச்சிதானந்தம், தம் நண்பர்களோடு ஏதோ உல்லாசமாயிருந்துவிட்டதால், அந்த விழாவுக்குப் போகத் தவறிவிட்டார். வீட்டிலிருந்தபடியே தம் கற்பனா சக்தியைப் பிரயோகித்து, அந்த விழாவைப் பிரமாதமாய் வர்ணித்து ஒரு செய்தியை ஜோடித்து, 'உண்மை விளம்பி'க்குக் கொடுத்துவிட்டார்.

மறுநாள் இதர பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தார். அந்த விழாவைப்பற்றிய விரிவான வர்ணனையை, ஒன்றிலும் காணவில்லை. ஆனல், அந்த விழா ரத்தாகிவிட்டது என்று ஒரு மூலையில் ஒரு செய்தி காணப்பட்டது.

யாரிடமும் ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல், 'உண்மை விளம்பி'யின் காரியாலயத்தை விட்டு, சச்சிதானந்தம் வெளியே கிளம்பி விட்டார். திரும்பி அங்கே தலைகாட்டவேயில்லை.

கொஞ்ச நாள் கழித்து, எங்கேயோ வீதியிலே, 'உண்மை விளம்பி'யின் ஆசிரியர், சச்சிதானந்தத்தைக் கண்டு, "என்ன, ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டீரே? இதுதான் அழகா?" என்று கோபித்தார்.

"உண்மையைச் சொல்லட்டுமா? பொய்ச் செய்தியெல்லாம் வெளியிடும் ஒரு பத்திரிகையின் உறவே கூடாதென்றுதான், நான் வெளியேறி விட்டேன்" என்றார் சச்சிதானந்தம்!




**கர்னல் ஸி. மாலினீர்**

விடியற் காலை மணி ஐந்திருக்கும். என் அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. விழிப் பூட்ட ஊதும் சங்கேதமான ஊதலை, காப்டன் பாக்ஸ் (**Fox**) ஊத முயன்றிருக்கிறார். நேற்று ராத்திரி வெகு நேரம் வரையில், அவர் உறங்காமல் வேலை செய்து கொண்டிருந்ததால், ஊதலைச் சரியாய் அவரால் ஊத முடியவில்லை. அரை மணி நேரத்தில் படை புறப்பட வேண்டுமென்று என்னிடம் சொல்வதற்காக, அவர் வந்தார். பனி மூடிய நாட்டுப்புறக் காட்சிகளுக்கு நடுவே, ராணுவக் கார் ஒன்றில், விமான நிலையத்துக்கு, நான் சென்றேன்.

ஆகஸ்டு மாதம் தான். என்றாலும், காருக்குள்ளே ஒரே குளிரா யிருக்கிறது. விமான தளத் தலைவர் அங்கே வந்து சேர்ந்த அதே நிமிஷத்தில், நானும் போய்ச் சேர்ந்தேன். அவர் ஒரு லெப்டினன்ட் கர்னல். நல்ல உயரம்; மிக்க வாலிபம்; நல்ல கறுப்பு; மிக அழகு. அவரைக் கண்டவுடனே, அத்தனை விமானிகளும் சட்டென்று துள்ளி எழுந்தார்கள். அவர்களிடம் கர்னல் ஏதோ சொன்னார். அது என் காதில் விழவில்லை. அவர்களெல்லாம் தட்சணமே மீண்டும் உட்கார்ந்து கொண்டார்கள்.

முதலாவதாக, உளவுப் படை அதிகாரி (**Intelligence Officer**), மேடைமீது ஏறுகிறார். உடனே, அவர் குரலும், பேச்சுத் திறனும் என் மனதைக் கவர்கின்றன. ஓர் உத்தியோகஸ்தர், பிற உத்தியோகஸ்தர்களுக்கோ அல்லது வீரர்களுக்கோ பேசும் பேச்சாக அது இல்லை; ஒரு நிபுணர், தம் சகோதரர்களிடம், அவர்கள் மேற் கொள்ளப் போகும் காரியம் எவ்வளவு முக்கியமானது என்று விளக்கிச் சொல்வதைப் போலவே யிருந்தது. அவர் யாருக்குப் பிரசங்கம் செய்கிறாரோ அந்த இம்மனிதர்கள், தங்கள் உயிருக்கே துணிந்து செல்லப் போகிறார்கள். எதிரியின் மக்னீஷியம் (**Magnesium**) தொழிற்சாலை ஒன்றை அழிக்க வேண்டும். அதிலே இவர்களுடைய உயிர் போனாலும் பரவாயில்லை என்று, இவர்களுக்குத் திருப்தி யூட்ட வேண்டும். இவர்களுக்கு அவர் தெரி

ஒரு மாதத்துக்கு முன் ஏதோ ஒரு தட்டுக்கெட்ட ஜப்பானிய விமானம் வந்து, சென்னை மீது சில குண்டுகள் வீசிப் போயிற்று. உடனே, நம் சர்க்கார் "இனிமேல் சங்கு ஊதுவதா, வேண்டாமா?" என்றெல்லாம் கலவரமடைந்து, கடைசியில் "ஊதுகிற சங்கை ஊதியே தீர்ப்போமே" என்று முடிவு செய்தார்கள். ஜனங்களோ, பல விதப் பரபரப்படைந்தார்கள். இப்படிப்பட்ட நாம், நேசக் கட்சியாரின் இருபது பிரம்மாண்டமான விமானங்கள், ஜெர்மனியில் போய்ச் செய்து விட்டு வந்த இந்தப் பயங்கர அட்டகாசத்தைப் படிக்கவேண்டும். இது சீமை **'ஸ்பெக்டேட்டர்'** பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை.

படத் தக்கவாறு மிக்க விரிவா யிருந்தன. மின்சார விளக்கு களை அணைத்தார். வெண்மை யான திரையிலே மிக மிகப் பெரிய பூகோள நிழற் படங் களைக் காட்டினர். வெவ்வேறு கோணங்களிலிருந்து எடுத்த பற் பல புகைப் படங்களையும் போட்டுக் காண்பித்தார். படங் கள் நிரம்பத் தெளிவா யிருந்தன; அவர் சொல்லிய விளக்கமும் மிக்க கச்சிதமா யிருந்தது. ஆகை யால், எங்கள் குறியான அந்தத் தொழிற்சாலைக்கு மேலே நாங் கள் செல்லும்போது, இந்த இடமெல்லாம் ஏற்கனவே நான் பார்த்ததே போன்ற ஆச்சரியம் எனக்கு உண்டாயிற்று.

அதன் பின், உளவுப் படை அதிகாரியின் இடத்துக்கு, செய் திப் போக்குவரத்து அதிகாரி (Communications Officer) வரு கிருர். பறக்கும்போது எத்தனை விதமான 'வேவ்-லெங்த்' (Wave-length) மின்சார சக்தியும் எந்தச் சங்கேதச் சொற்களும் (Code-words) உபயோகிக்க வேண்டும் என்பதை அவர் குறிப்பிடுகிருர். அடுத்தபடி காலநிலை அதிகாரி, (Meteorologist), மேடை மீது ஏறுகிருர். மீண்டும் இருள் சூழ் கிறது. ஐஸ்லாந்தி லிருந்து ருஷியாவுக்குப் போகும் வழி யிலே ஆகாயத்தின் சீதோஷ்ண நிலைகள் எப்படி யிருக்கும் என் பதைப் பற்றி யெல்லாம், பொது வாக அவர் எடுத்துச் சொல்லு கிருர். பின்பு, நாங்கள் பறந்து செல்லப் போகும் பாதையிலே உள்ள நாடுகள், கடற் கரைகள், சமுத்திரம் இவைகளையும் இவற் றின் மீதுள்ள மலைகள், சம வெளிகள், காடுகள் ஆகியவற் றையும் காட்டும் நிழற் படங் களைத் திரையில் இட்டு விளக்கு கிருர். எங்களுக்கும் வானத்துக்கும் இடையிலேயோ சூழ்ந்திருக்கக் கூடிய பற்பல விதமான மேகத் திரளைப் பற்றியும், அவர் எங் களுக்கு விவரித்துச் சொல்கிருர். உதாரணமாக, இன்று தினம், நாங்கள் போகும் வழி முழுதும் 3.000 மீட்டர் (சுமார் 10,000 அடி) உயரத்தில் மேகக் கூட் டங்கள் கடல் போல் சூழ்ந் திருக்கும்; நாங்கள் குண்டு வீசப் போகும் இடத்துக்கு இப்பால் பத்து கிலோ மீட்டர் (சுமார் 1,00,000 அடி) தூரத்திலே தான், அந்த மேகக் கூட்டங்கள் விலகிப் போகும். நான் இதற்கு முன்னே எத்தனையோ காலநிலை அதிகாரிகளின் கணிதங்களெல் லாம் தவறிப் போனதைக் கண்டவ ஞதலால், எனக்கு இவர் கணிதமும் சந்தேகமாய்த் தான் இருந்தது. போய் நேரே பார்த்தால் தான், நிச்சய மேற் படும். நான்காவதாக, இயந்திர நிபுணர் (Engineer Officer) தோன்றுகிருர். இத்தனை தூரம் இத்தனை உயரத்தில் இத்தனை வேகத்தில் இத்தனை மணி நேரம் பறக்க வேண்டும்; மணிக்கு இத் தனை காலன் பெட்ரோல் அதற் குச் செலவாகும். அதற்குப் பின், கீழே இத்தனை உயரத் துக்கு இறங்கி இத்தனை வேகத் தில் இத்தனை தூரம் பறக்க வேண்டும்; அதற்கு இவ்வளவு பெட்ரோல் செலவாகும். இதை யெல்லாம் அவர் விளக்குகிருர். இந்தப் பிரசங்கங் களெல்லாம் முடிந்த பின்பு, படைத் தலைவர், (Group Commandant) ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்துகிருர். மற்றவர் பேச்சுக்களின் முக்கிய மான அம்சங்களை யெல்லாம் சுருக்கமாய்த் தெளிவு படச் சொல்லி, இன்றையப் படை

விளக்குகிறார். "உங்களை நம்பலாம்; அது எனக்குத் தெரியும்" என்று குறிப்பிடுகிறார். பின்பு, எங்களுக்கு இடப் பட்டுள்ள கட்டளையையும், நாங்கள் எந்த விதமாய் அணிவகுத்துப் பறக்க வேண்டும் என்பதையும், யாரார் தலைவர்கள், யாரார் உப தலைவர்கள் என்ற பெயர்களையும் விவரித்துக் கூறுகிறார். கடைசியில், அமைதியாக, "க்ஷேமமாய்ப் போய் வாருங்கள்!" என்று வாழ்த்துகிறார்.

இப்போது, எல்லோரும் தயாராகி விட்டோம். தலைவரிடமிருந்து, சமிக்ஞை வருகிறது. முதல் விமானம் கிளம்புகிறது. பின்னே, ஒவ்வொரு பத்து நிமிஷம் கழிந்த பின்னும் ஒவ்வொன்றாய் மற்ற விமானங்கள் பின் தொடர்கின்றன. முதலிலே, இங்கிலாந்துக்குக் குறுக்கே பறக்கிறோம்; அங்கங்கே வெவ்வேறு நிலயங்களிலிருந்து புறப்பட்ட வெவ்வேறு விமானங்களும் எங்களோடு வந்து சேர்ந்து கொள்ளுகின்றன. இறுதியாக, எல்லா கோஷ்டிகளும் ஒன்று சேர்ந்த பின்புதான், உண்மையிலே புறப்பட வேண்டிய சமிக்ஞை வருகிறது. முன் வரிசை விமானங்கள், கடலுக்குள்ளே வெகு தூரம் போன பின்புங் கூட, கடைசி வரிசை விமானங்கள் தரையிலே வெகுதூரம் பின்னே நிற்கின்றன. அது ஒரு பிரம்மாண்டமான அணிவகுப்புக் காட்சியாயிருந்தது.

நாங்கள் மேகங்களைப் பிளந்து கொண்டு பறந்து செல்லும் போது, என் விமானத்திலிருந்த இதர வீரர்களுடன் அறிமுகப் செய்து கொள்ளத் தொடங்கினேன். எங்கள் விமான ஓட்டி பேசினேன். அவர் மேற்கு வெர்ஜினியாவிலுள்ள பைன் வில்லி வம்சம். திசை காட்டி அதிகாரி, ரோட் தீவைச் சேர்ந்த பிராவிடன்ஸ் என்னுமிடத்துக் காரர். குண்டு வீசும் அதிகாரி, டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள ஜாஸ்பர் என்னுமிடத்திலிருந்து வந்தவர். எஞ்சினீர், மாண்டனாவைச் சேர்ந்த ஹார்லோடன் நகரவாசி. ரேடியோ அதிகாரி இல்லினாய்ஸ் மாகாணத்திலுள்ள ராக்போர்டு நகரத்திலிருந்து வந்தவர்; ஜெக் வம்சம். மற்றவரும் இப்படியே.

எங்களுக்குள் ஐக்கிய அமெரிக்காவின் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் நாலைந்து ஐரோப்பிய நாட்டினரும் மூன்று நான்கு மதஸ்தர்களும் இருந்தோம். இந்த அத்தனை மனிதர்களும் அமெரிக்கர்களே. அவர்கள் தாங்கள் அமெரிக்கராயிருப்பதில் பெருமை கொண்டு, களிப்பு நிறைந்து, உறுதியான தோழர்களாய் ஐக்கியப் பட்டிருந்தார்கள். பழைய உலகத்தைச் சேர்ந்த ஐரோப்பாக் கண்டம், தன் மானிடச் செல்வத்தை அள்ளிக் கொடுத்தது; அமெரிக்காக் கண்டம் அதை ஏற்றுப் பக்குவப்படுத்தி விட்டது. இந்த ஸ்காட்லாந்தியர், இந்த ஜெக்குகள், இந்தப் பிரஞ்சுக்காரர், இந்த இத்தாலியர் ஆகிய இந்த சுதந்தரப் பிரஜைகள் அனைவரையும் கொண்டதொரு மகத்தான குடியரசை, அமெரிக்கா படைத்து விட்டது. இதுதானே புதிய உலகமாயிருக்கவேண்டும்? இதுவேதானே, இத்தனை நாளாய்ப் பழைய உலகம் வீணே கண்டு கொண்டிருந்த கனவைப் பலிக்கச் செய்யவும் வேண்டும்?

பகுதியும் சூரியன் மறைந்தேயிருந்தது. ஆனால், அதைப்பற்றி நாங்கள் தொல்லைப்பட வில்லை. ஏனெனில், எதிரி குண்டிலிருந்து இதுவே எங்களுக்குப் பாதுகாப்பாயிற்று. எங்கள் குறி யிடத்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்ததும், காலநிலை யதிகாரி சொன்னபடியே, வானம் முற்றிலும் வெளிவாங்கி யிருந்தது. எங்கள் குறியிடமோ—அதைத்தான் காலையிலே நாங்கள் புறப்படு முன் பார்த்திருக்கிறோமே—அதுவும் விசேஷமாய் விளக்குகள் போட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது; எங்கள் சௌகரியத்துக்காகவே இப்படி அது பிரகாசிப்பது போல் தோன்றியது. எங்களுக்கு அதிர்ஷ்டந்தான். குண்டு வீச்சின் ஆரம்பத்திலே, என் மனம் பேரானந்தத்தால் பூரிக்கிறது; என் அமெரிக்க நண்பர்கள் அனைவரையும் விட மிக அதிகமான பேரானந்தம் அடைகிறேன். எங்கள் குறியான தொழிற்சாலை அமைந்திருக்கும் துறைமுகத்திலே உள்ள கட்டிடங்கள் மட்டுமல்ல, அதன் அக்கம் பக்கத்திலே உள்ள கட்டிடங்களும் அட்டை வீடுகளைப் போல் 'சட சட' என்று நிலைகுலைந்து சாய்வதை நான் காண்கிறேன்—எங்கள் முதல் முறைக் குண்டு வீச்சிலேயே இப்படி! பலமான குண்டுகள்; குறி பிசகாமல் விழுந்திருக்கின்றன.

ஆனால், இதோ ஜெர்மன் சண்டை விமானங்கள், எங்களைச் சூழ நாலா புறமும் உயரக் கிளம்புகின்றன. அது தெளிவாய்த் தெரிகிறது. என்றாலும், ஜெர்மன் யுத்த இயந்திரத்தின் ஒரு பகுதியான அந்தத் தொழிற்சாலையின் சீரழிவை—விட்டு, நான் என் கண்களை எடுக்கவில்லை. 1915-ஆம் ஆண்டில், விமானத்திலிருந்து குண்டு வீசுவது எனக்கு வெறுப்பா யிருந்தது. ஆகையால், போர் விமானத்தில் பறக்க, பற்பல சாக்குப் போக்குகள் கூறினேன். அதை இப்போது நினைத்தால்!......ஒருவனுடைய ஆயுட்காலத்தில் இரண்டு யுத்தங்கள்!......பிரான்ஸில் பின் வாங்கியபோது, சாலையெல்லாம் ஜனங்களைச் சுட்டு, பயங்கரமாய்ப் படுகொலை செய்தார்கள். அதை நான் கண்ட போது, என் மனத்தில் துளியும் பச்சாத்தாபம் ஏற்படவில்லை. அப்படிப் பச்சாதாபப் படுவது கோழைத்தனம், முட்டாள்தனம் என்றே இன்று எனக்குத் தோன்றுகிறது. வாருங்கள், நீச நாய்களே! இந்தா இது உனக்கு, இது அவனுக்கு, இது அவனுக்கு—எங்களைப்போல் பத்து மடங்கு வீரர் பின்னால் வருகிறார்கள். இன்றிரவு பிரிட்டிஷ்காரர் வந்திருக்கிறோம்; நாளைக்கு, பாஸ்டன் என்ற விமானப் படையுடன் பிரஞ்சுக்காரர்கள் வருவார்கள்; அதன் பின், அமெரிக்கர் வருவார்கள். உயர்ந்த மனிதர்களே; உயர்ந்த ரகமான பார்சல்களே உங்களுக்குப் பரிசு வரும்; வாங்கிக் கொள்ளுங்கள்.

ஜெர்மன் சண்டை விமானங்கள், எங்களை முன்னாலும் பின்னாலும் வந்து தாக்குகின்றன. அவைகளில் மூன்றில் இரண்டு பங்கு விமானங்கள், கறுப்பு வர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. இரவிலே சண்டை போடுவதற்காகவே, அவைகளுக்கு அப்படிக் கறுப்பு வர்

னங்கள் போதாததாலேயே இவைகளைப் பட்டப் பகலிலே அவர்கள் உபயோகிக்க நேர்ந் திருக்கிறது. அத்தனைக் கத்தனை, அவைகளைக் குறி பார்த்துச் சுடு வது எங்களுக்குச் சுலபமாகி விட்டது. மெஸ்ஸெர்ஷ்மிட்ஸ் **(Messerschmitts)** என்ற ஜெர் மன் விமானங்கள் அனைத்தும், தூரத்தி லிருந்து கொண்டே எங்களைச் சுடுவதைக் காண்கி றேன். கோட்டைகள் **(Fortress-es)** என்ற எங்கள் விமானங் களோ, நெருக்கமாய் அணி வகுத்து, எங்களுடைய சகல பெரிய பீரங்கிகளையும் கொண்டு பதில் சொல்லுகின்றன. 'கோட் டைகள்' என்ற பெயர் அவை களுக்கு நன்ருய்த் தகும்! அவை இருபது விமானங்கள்; ஒவ் வொன்றிலும், டஜன் மெஷின் பீரங்கிகள்; ஒவ்வொரு பீரங்கி யும் நிமிஷத்துக்கு 800 குண்டு கள் சுடும். இவை ஒரு முனைப் பட்டுச் சுடும் போது, சண்டை விமானம் எதுவும் கிட்ட நெருங்க முடியாது. நெருங்கினல், தட் சணமே தலை குப்புற விழுந்து எரிந்து சாம்பலாக வேண்டியது தான்; அல்லது, அந்தரத்தி லேயே நொறுங்கித் தூளாக வேண்டியதுதான்.

எதிரிகள், புதியதொரு தந்தி ரத்தைக் கைக் கொண்டுள்ள தாக, சகோதர விமானிகள் சமிக்ஞை செய்கிருர்கள். தூரத் திலே யிருந்தபடி, எதிரிகள் எங் கள் விமானங்களின் நான்கு முன்புற விசிறிகளையும் குறி பார்த்துச் சுடுகிருர்களாம்; ஏனெனில், அந்த விசிறிகள் மிகப் பெரியவையா யிருப்பதால், குறி வைப்பது சுலபம். ஒரு விமானத்தில் ஒன்று அல்லது இரண்டு மோட்டார்கள் பழுது பட்ட விமானம் கொஞ்சம் மெதுப்பட்டு, பின்னே வர வேண்டும். அப்போது, பிணம் தின்ன வரும் நரிகள் போல, எதிரி கள் பத்துப் பதினைந்து பேராய் வந்து அதைத் தாக்குவார்கள்.

அவர்களுடைய புதிய தந்திரம் இன்று எங்களிடம் பலிக்க வில்லை. தூரத்திலே கரிய சண்டை விமானம் ஒன்று தலை குப்புற விழுந்து மாய்வதைக் காண்கிறேன். எங்கள் கோட்டை விமானங்கள் இருப தும், கடைசி வரையில் அணி வகுத்து ஒழுங்காய் வருகின் றன. நீண்ட காலமாய் எனக்கு அனுபவ மிருந்தும், இப் போதுதான் முதன் முதலாக ஒருண்மை புலனுயிற்று; அதா வது, லேசான சண்டை விமா னங்கள் வந்து என்னதான் தாக் கினலும், எப்பேர்ப்பட்ட நிலை மையிலும், பெரிய பெரிய பீரங்கி களைப் பூர்த்தியாய்த் தாங்கும் நம் முடைய பெரிய விமானங்களே கட்டாயம் வெற்றி பெறும். இந்தப் படை யெடுப்பில் நான் நேரே கலந்து கொண்ட அந்த நிமிஷத்துக்கு முன் வரையில், எப்படி நம்முடைய 'கோட்டை' விமானங்கள், எதிரியின் சண்டை விமானங்கள் மீது பற்பல வெற்றி கள் அடைந்திருக்கின்றன என்று ஆச்சரியமே அடைந்து கொண் டிருந்தேன். இப்போதோ, அதற்கு நேர்மாருய்த்தான் ஆச் சரியப்பட வேண்டும்.

எதிரி விமானங்கள், வெகு தூரம் வரையில் எங்களைத் துரத் திக் கொண்டு வந்தன; என்ருலும், பய பக்தியோடு மிக எட் டவே வந்து கொண்டிருந்தன. ஏதாவது மோட்டார் பழுதடை யாதா என்ற ஆவலோடு அவர் கள் வந்திருக்கலாம். ஆனல்,

பலன் கிடைக்கக் காணோம். கடலுக்குள் எண்பது மைல் தூரத்துக்கு மேல், அவர்கள் இன்று எங்களைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறார்கள்; அதன் பின்பு, திரும்பிப்போவது போல், பாசாங்கு செய்தார்கள். ஆனால், சற்றுக் களைப் பாறலாம் என்று நான் படுத்துக் கொள்ளப் போன சமயத்தில், மீண்டும் மெஷின் பீரங்கிகள் 'படபட' என்று சுடத் தொடங்கின. 110 ஜெர்மன் விமானங்கள் வந்து, கடல் மேகங்களுக்குள் மறைவாய்ப் புகுந்து கொண்டு, நாங்கள் எதிர் பாராதபடி எங்களைத் தாக்க முயன்றன. நாங்கள் அவர் அளித்தோம். எதிரி விமானங்களில் இரண்டு, கடலிலே 'பொதீர்' என்று விழுந்து மாய்வதைக் கண்டோம். இதோ மறுபடியும் ஆங்கிலக் கடற்கரைக்கு மேலே நாங்கள் வந்துவிட்டோம். ஒரு கண நேரம் வட்ட வளைய மிட்ட பின்பு, எங்கள் முன் வரிசை விமானங்கள் சிலவற்றைத் தரையில் இறங்க விட்டோம். பின்பு நாங்களும் இறங்கினோம்; நாங்கள் கலைய வேண்டிய இடத்துக்கு, டாக்ஸி கார்களில் சென்றோம். அங்கே போய்ச் சேர்ந்ததும், நாங்கள் அனைவரும் கோலாகலமாய் யுத்த நாட்டிய மொன்றை ஆடலானோம்.

*

## குதிரையும் கோமகனும்

தற்போதுள்ள பிரிட்டிஷ் மன்னர், யார்க் கோமகனா யிருந்த காலத்தில், தற்போது ராணியாயுள்ள எலிஜபெத்தைக் காதலித்தார்.

ஒரு முறை நாட்டிய மாடுகையிலும் இன்னொரு முறை கோல்ப் பந்தாட்டத்தின் போதும், தம்மை அவள் மணக்கவேண்டு மென்று, எலிஜபெத்தை வேண்டினாராம். இரு முறையும் அவள் மறுத்து விட்டாள். "பல போட்டிகளில் என் குதிரைகள் வெற்றிப் பரிசுகள் பெற்றிருக்கின்றன. குதிரை சவாரியிலேதான், நான் அதிர்ஷ்டசாலி" என்று சொல்லி, குதிரை சவாரி செய்தபடி, மூன்றும் முறை எலிஜபெத்தை வேண்டிய பொழுதுதான், இவரை மணக்க அவள் சம்மதித்தாளாம்! மன்னருக்குக் குதிரைகளிடம் இன்றும் வெகு மோகமாம்.

ஆனல், ஒரு பழைய கதை. சீன வேதாந்தி கன்பியூஷஸ், கோமகன் லு என்பவரிடம் மந்திரியா யிருந்தபோது, ஆட்சி மிக்க நேர்த்தியாய் நடைபெற்றது. பக்கத்துச் சிற்றரசன் ஒருவனுக்கு இதில் பொறாமை ஏற்பட்டது. லு கோமகனின் ஆட்சிக்குக் கேடு செய்ய, அவன் ஓர் அபூர்வ யுக்தி செய்தான். மகா அழகிகளான எண்பது தாசிகளையும், வெகு கம்பீரமான இருநூறு குதிரைகளையும், இவனுக்கு அவன் பரிசளித்தான். அவ்வளவு தான்; லு கோமகன், ராஜ்ய காரியங்களை யெல்லாம் மறந்து, கேளிக்கைகளிலும் குதிரைசவாரிகளிலும் சதா ஆழ்ந்துவிட்டான். ஆட்சி கேடுற்றது. இது சகிக்காமல், கன்பியூஷஸும் பதவியை உதறி, நாட்டையும் துறந்து அன்கறுவிட்டார்!




### இந்தியாவுக்காகவே தயாரிக்கப்பட்டது!

சரியாய் மணி காட்டுவதில், வெஸ்ட் எண்டு வாட்சுகள் பெற்றிருக்கும் புகழ் நமக்குப் பெருமை தருகிறது. உயர்தரமான வேலைப்பாட்டோடு, அருமையான உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்டிருப்பதால், அவைகளுக்குக் கொடுக்கும் பணம் நன்றாய்த் தரும். சீதோஷ்ண நிலைமைகள் எவ்வளவு கடுமையாய் இருக்கக்கூடிய இட்ங்களிலும்கூட் அவை உழைக்கும். ஒவ்வொரு வெஸ்ட் எண்டு வாட்சும் இந்தியாவுக்கென்றே ஸ்பெஷலாய்த் திட்டம் செய்து தயாரிக்கப் பட்டுள்ளது.

**வெஸ்ட் எண்டு வாட்சு கோ.**
**பம்பாய் & கல்கத்தா**

இறக்குமதிகள் ஒழுங்காய் இல்லையாதலால், விளம்பரம் செய்த சகல 'பாட்டர்ன்'களையும் சப்ளை செய்யச் சாத்தியமில்லை. என்றாலும், எங்களிடம் உள்ள ஸ்டாக்குகளை அனுசரித்து, ஆர்டர்களுக்கு முடிந்த மட்டில் சப்ளை செய்ய, சகல முயற்சியும் செய்வோம்.



**நியூ காலிபர் 'இ'**
**எக்ஸ்ட்ரா-பைன் வாட்சு—15 ஜுவெல்**

| | |
|---|---|
| நிக்கல் சில்வர் கேஸ் ... ... | ரூ. 62 |
| பேட்டண்ட் எவர் பிரைட் எஃகு ... | ரூ. 71 |
| 18 காரட் கெட்டித் தங்கம் ... | ரூ. 197 |

எந்த மாடல்களிலும் ரேடியம் இலக்கங்களும் முள்களும் உண்டு; ரூ. 3-0-0 பிரத்தியேகம்.



**கேட் ஹூப் ரெக்டாங்குலர்**
டி லக்ஸ் குவாலிட்டி வாட்சு—16 ஜுவெல்
18 காரட் கெட்டித தங்கம்...ரூ. 304.

# WEST END WATCH Co
**BOMBAY** **CALCUTTA**

# அருணா டிரேடர்ஸ்

கண்டி-சிலோன்

சக்தி காரியாலயம்

தமிழ்ப் பண்ணை

புதுமைப் பதிப்பகம்

நவயுகப் பிரசுராலயம்

கலைமகள்

அல்லயன்ஸ்

சைவ சித்தாந்தக் கழகம்

ஜோதி நிலயம்

கமலா பிரசுராலயம்

மற்றுமுள்ள வெளியீடுகளும்

ஆங்கில வெளியீடுகளும்

எங்களிடம் கிடைக்கும்




பட்டமது பறப்பதைப் பாரு பாப்பா!
பறந்து திரிந்து விண்ணில் ஆடுகின்றது.
இட்டப்படி காற்றிலது ஏறுகின்றது.
எட்டாத வானத்தை எட்டிப் பார்க்குது.

பட்டத்தைப் போல நீ பறந்திட வேணும்;
பாரினிலே வாழ்க்கை உயர்ந்திட வேணும்;
கட்டங்கள் பலவற்றைக் கடக்க வேணும்;
கலங்கிடா நெஞ்சம் படைத்திட வேணும்.

பறந்திடும் பட்டத்துக்குக் காற்றினைப் போலே,
பண்புடைய மக்களுக்குச் சத்திய மாகும்.
சிறந்தஉன் வாழ்வுக்குச் சின்னமதாக
சீரிய நல் ஒழுக்கமே கைக் கொள்ளுவாய்.

ஆடிப்பின் அயர்ந்து விழும் பட்டத்தினையே
ஆசையொடு பார்ப்போர் எவருமில்லையால்,
ஓடி நீ உழைக்காமல் ஓய்ந்து விடிலோ
உன்னை மதியார் எவரும் உண்மை அறிவாய்.

—ஷண்முக மணி.

# தூங்காத மீனு

'நீலா'

மீனு படுக்கையிலே படுத்தாள். படுக்கை கொள்ளவில்லை. புரண்டு புரண்டு பார்த்தாள். தூக்கம் வரவேயில்லை. எழுந்து உட்கார்ந்தாள். ஜன்னல் வழியாய் நிலா வீசிய சந்திரனைப் பார்த்தாள். அது இவளைப் பார்த்துச் சிரிக்கிறாப் போல் இருந்தது.

"சந்திரனே! என்னைப் பார்க்காதே! உனக்கு அதெப்படித் தெரியும்? பகலிலே அல்லவா அது நடந்தது. நீதான் பகலிலே வரமாட்டாயே. நான் தூங்க வேண்டும், போ" என்றாள். ஜன்னலை மூடினாள்.

மறுபடி படுத்தாள். அப்போதும் தூக்கம் வரவில்லை. சுவரில் இருந்த கடிகாரம், 'டிக்-டிக், டிக்-டிக்' என்று சத்தமிட்டது.

"ஓஹோ! உனக்கு மா கேலியா யிருக்கிறது. உன்னைத் தான் ஆணியறைந்து இங்கே மாட்டி யிருக்கிறதே. சமையல் உள்ளுக்கு நீ எப்படி வர முடியும்? வீணே மிரட்டாதே" என்று, கடிகாரத்தைக் கோபித்தாள்.

'குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்' என்பார்கள் அல்லவா? மீனு குற்றம் செய்து விட்டாள். தூக்கம் எப்படி வரும்? வரவேயில்லை.........பாவம்! தன் குற்றத்தை ஒரு பூனைக்குட்டிமீது ஏற்றிவிடப் பார்த்தாள். ஆனால், அவளால் முடிந்ததா? முடியவில்லை. கடைசியில், அவள் தாய் நேரே வந்தபோது, என்ன ஆச்சர்யம்!

இப்படியெல்லாம் மீனு கத்திய குரல், கூண்டிலிருந்த கிளியை எழுப்பிவிட்டது. "மீனு, மீனு! என்ன பண்ணுகிறாய்?" என்று கிளி கேட்டது.

"ஐயையோ! துஷ்டக் கிளியே! பாட்டியோடு அல்லவா, நீ அப்போது கொஞ்சிக் கொண்டிருந்தாய். உனக்கு மட்டில் அது தெரிந்து விட்டதோ? சீ! தூங்கு" என்று, அதையும் மீனு அதட்டினாள்.

"மீனு, மீனு! மீனு, மீனு! என்ன பண்ணுகிறாய்? என்ன பண்ணுகிறாய்!" என்று அடுக்கி அடுக்கிக் கேட்க ஆரம்பித்து விட்டது கிளி.

மீனு என்ன செய்வாள்? அவளுக்குத் தூக்கம் வரவேயில்லை. ஏன் தெரியுமா? மீனு ஒரு தப்பான காரியம் செய்துவிட்டாள். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்காதா?

மீனுவின் அம்மாள், மாலையில் அல்வா கிண்டினாள். அதில் கொஞ்சம் கொஞ்சம் எல்லாருக்கும் கொடுத்தாள். மீனுவுக்கும் தான் ஒரு பங்கு கொடுத்தாள். மிச்சம் இருந்த அல்வாவை, ராத்திரி ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக்கொள்ளலாம் என்று வைத்திருந்தாள். ஒரு கிண்ணத்தில் போட்டு, ஒரு தட்டினால் மூடி யிருந்தாள்.

அல்வா ரொம்ப இனிப்பாய் இருக்கும் அல்லவா; மீனுவுக்கு

ஆசையா யிருந்தது. யாரும் இல்லாத சமயம் பார்த்து, சமை யல் உள்ளுக்குள் நுழைந்தாள். ஒரு சிறு கரண்டியை எடுத்தாள். கிண்ணத்தில் போட்டு, அல்வா வைக் கொஞ்சம் வழித்தாள். வாயில் போட்டுக் கொண்டாள். ஆஹா! என்ன இனிப்பு! மீண் டும் ஒரு கரண்டி அள்ளி விழுங் கினாள். மறுபடியும் ஒரு கரண்டி. இப்படியே, அல்வா பூராவையும் மீனு தீர்த்து விட்டாள்.

அப்புறந்தான் அவளுக்குப் பயம் வந்தது. "அடடா! என்ன கெட்ட காரியம் செய்து விட்டேன். அம்மா அறிந்தால் கண்டிப்பாளே! எப்படித் தப்பு வது?" என்று யோசித்தாள். இந்தச் சமயத்தில், அவர்கள் வீட்டு அழகான பூனைக் குட்டி அங்கே வந்தது.

மீனுவுக்கு ஒரு தந்திரம் தோன் றியது. "இந்தப் பூனைக் குட் டியை, உள்ளே விட்டு, எல்லாக் கதவையும் சாத்தி விடுகிறேன். அம்மா வந்தால், அல்வாவைப் பூனைக்குட்டிதான் தின்று விட் டது என்று நினைப்பாள். என் னைப்பற்றிச் சந்தேகப்பட மாட் டாள்" என்று மீனு எண்ணி னாள்.

அப்படியே, பூனைக்குட்டியை உள்ளே தள்ளி, கதவை யெல் லாம் சாத்திவிட்டாள். எல்லாருக் கும் முன்னால், படுக்கவும் போய்விட்டாள். ஆனால், தூக் கம் வரவில்லை. அப்போதுதான், சந்திரனையும் கடிகாரத் தையும் கிளியையும் கோபித் துக் கொண்டான். என்ன செய்தும், கண்ணுறங்க முடிய வில்லை.

இப்படி அவள் தவிக்கையில், 'புர்-புர்-புர்-புர்' என்று,

## சோல்ஜர்கள் அறிவு!

வடக்குக் கரோலினா என்னு மிடத்தில், காம்ப் டேவிட் என்னும் புத்தகாலயத்தின் புத்தகங்களை யெல்லாம் வேறு இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி, சில சோல்ஜர்களுக்குக் கட்டளை யிட்டார்கள்.

அப்படியே புத்தகங்களை யெல் லாம், அவர்கள் அகற்றிவிட்டார் கள், ஆனால், கடைசியிலே அங்கே ஒரு புத்தகம் மாத்திரம் மிகுந்து கிடந்தது.

அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன தெரியுமோ? 'என்னை நீ எடுக்காதே!' என்பதுதான்!

இது நடந்த விஷயம்; கட்டுக் கதையல்ல.

ஏதோ கதவைப் பிறாண்டும் சத்தம் கேட்டது. கதவை மீனு திறந்தாள். உடனே, 'மியா! மியா!' என்று கத்திக்கொண்டு, அந்த எளிய பூனைக்குட்டி, இவளுடைய காலடியில் வந்து, படுக்கையில் தாவியது. இவளது கன்னத்தை நக்கியது. பின்பு, கண்ணை மூடிக்கொண்டு, மறு படியும் 'மியா! மியா!' என்று கத்தியது.

மீனுவுக்கு அழுகை வந்து விட்டது. "ஐயோ! என்னிடம் என்ன அன்பாயிருக்கிறாய் நீ. உன் மேலே அநியாயமாய்ப் பழி சுமத்தினேனே. பாவம்! அம்மாவிடம் போய் நிஜத்தைச் சொல்லி விடுகிறேன்" என்று சொல்லி, பூனைக் குட்டியையும் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

அப்போது, அம்மாவே அங்கே வந்து விட்டாள். "என்ன, கண்ணு! மீனு? என்ன? எங்கே புறப்படுகிறாய்?" என்று கேட் டாள்.

அழுகையோடு, "அம்மா! நான் பெரிய தப்புப் பண்ணிவிட்டேன்......" என்று ஆரம்பித்தாள்.

"என்ன தப்பு! அல்வாவைச் சாப்பிட்டு விட்டாயே; அது தானே! இதற்கா அழுகிறாய்? போனால் போகிறது. அழாதே!" என்றாள் அம்மா.

மீனுவுக்கு அழுகை அதிகமாகிவிட்டது. "அதுதான்...... ஆனால், அது உனக்கு எப்படித் தெரியும்? பூனைக்குட்டி சாப்பிட்டதாக அல்லவா சந்தேகப்படுவாய் என்று நினைத்தேன்?" என்றாள்.

"பூனைக்குட்டி சாப்பிட்டால், கிண்ணத்திலே கரண்டியைக் கொண்டு போய்ப் போடுமா, தாய்.

மீனுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேச முடியாமல், மீண்டும் தேம்பித்தேம்பி அழுதாள்.

"அழாதே, மீனு! கெட்ட காரியம் செய்வோர் எப்படியும் அகப்பட்டுக் கொள்வார்கள். ஆனால், தப்புச் செய்தாலும், உண்மையை நீ ஒப்புக் கொண்டாயே. அது எனக்குப் போதும், கண்ணே!" என்று சொல்லிய தாய், மீனுவைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்

பிறகுதான், மீனுவுக்கு மன நிம்மதியேற்பட்டது. நன்றாய்த் தூங்கினாள்.

✲

## சொல்லி வைத்தபடி

ஒரு முதலாளி, புதிய வேலைக்காரப் பையன் ஒருவனை அமர்த்திக் கொண்டார். அவனிடம் அவர் "அடே பையா! என்னை யாராவது, பார்க்க வந்தால், முதலில் யார் என்று கேட்டுத் தெரிந்து கொள். வியாபாரியாயிருந்தால், அவசர வேலையாயிருக்கிறேன் என்று சொல்; கடன்காரன் என்றால், பட்டணம் போயிருக்கிறேன் என்று சொல்; சிநேகிதனாயிருந்தால், உள்ளே வாருங்கள் என்று சொல்" என்று கூறியிருந்தார்.

முதலில் யாரோ ஓர் ஆசாமி வந்தார். "நீங்கள் யார்? வியாபாரியா, கடன்காரரா, சிநேகிதரா?" என்று கேட்டான் பையன்.

"மூன்றும்" என்றார் வந்தவர்.

பையன் 'தட தட' வென்று "எஜமான் வேலையாயிருக்கிறார்: பட்டணம் போயிருக்கிறார்: உள்ளே வரச் சொன்னார்" என்று சொல்லி முடித்தான்!

## உலகத்தின் மிகப் பழைய பத்திரிகை

பீகிங் நகரில் 'சிங்-பாவோ,' என்ற சர்க்கார் பத்திரிகை பிரசுரமாகிறது. அதுதான் உலகில் மிகப் பழைய பத்திரிகையாம். சென்ற 1,030 வருஷங்களாக, நில்லாமல் தொடர்ந்து அது வெளிவருகிறது. இத்தனை வருஷத்து இதழ்களின் தொகுப்பையும், பிரசுரகர்த்தர்கள், ஒரு பிரதி விடாமல் சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் அந்தப் பத்திரிகை கையால் எழுதப்பட்டு, நகல்கள் எடுக்கப்பட்டு, நாடெங்கும் வழங்கியதாம்.

## வாயுவேகத்தில் தயாராகிறது!

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனின்

# மானசம்ரக்ஷணம்

(தமிழ்)

நடிக நக்ஷத்திரங்கள்:

எஸ். டி. சுப்புலக்ஷிமி — காளி என். ரத்தினம்
வி. என். ஜானகி — டி. ஆர். ராமச்சந்திரன்
ஜி. பட்டு அய்யர் — ராஜகோபால அய்யர்
ராவ்பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸ்லே

மற்றும் பலர்

டைரக்ஷன் கே. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,

பாட்டு, சங்கீதம்:

பாபநாசம் சிவன், ராஜகோபால அய்யர்

ஸ்டுடியோ:

நியூடோன்

: டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

தி சௌத் இந்தியா பிக்சர்ஸ் லிமிடெட்.,

காரைக்குடி

பிராஞ்சுகள்: பெங்களூர், பெஜவாடா, கோயமுத்தூர்.

# தமிழிசைப் பாட்டுகள்

ஸ்வரத்துடன்

பதம்-கீர்த்தனை அபிநயப் பாட்டு-என்ற
முறையில் தொகுக்கப் பட்டிருக்கிறது
மொத்தம் 60-பாட்டுக்கள் 30-இராகங்களில்

சங்கீத சாஹித்ய வித்வான்
கிவளூர் பி. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்
இந்தப் பாட்டுகளுக்கு
ஸ்வரப்படுத்தி இருக்கிறார்கள்

மிக அழகிய பதிப்பு

விலை ரூ. 4-8-0
தபால் செலவு வேறு

புதுமைப் பதிப்பகம்
காரைக்குடி

எங்கள் வெளியீடுகளனைத்தும் சென்னையில் கிடைக்குமிடம் :—

சக்தி காரியாலயம்
261, சைனுபஜார் :: சென்னை


# அன்பர்களுக்கு

'சக்தி பத்திரிகை தேவைக்குத் தக்க படிதான் அச்சிடுகிறோம். ஆதலால் 'சக்தி' வாசகர்கள் தங்கள் சந்தாத் தொகையை அனுப்பிப் பத்திரிகை பெற வேண்டுகிறோம்.

வருடச் சந்தா ரூ. 6—0—0

## சக்தி காரியாலயம்

261, சைனு பஜார் :: சென்னை

# புத்தக உலகம்

**ஸ்ரீ அரவிந்த மலர்:** வெளியிட்டோர்: பாரதசக்தி நிலயம், புதுவை. விலை: ரூ. 1—0—0.

மனிதனைத் தேவனாக்குவது, சடத்தைச் சித்தாக்குவது—இதுவே யோகி அரவிந்தரின் லட்சியமாகும். அவருடைய தத்துவதர்சன மெல்லாம் இதை யொட்டியே செல்லும். இந்த அரவிந்த தர்சனத்தை விளக்கி, சுவாமி சுத்தானந்த பாரதி, திலீப் குமார ராய், க. அமுதன், நலினி காந்த குப்தா, பி. கோதண்டராமன் முதலிய பலர் எழுதியுள்ள வெவ்வேறு கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. அனைவரும் அரவிந்த பக்தர்கள்; கட்டுரைகள் அனைத்தும், சிக்கலான பல தத்துவார்த்தங்களை, அழகாக விவரிக்கின்றன. அரவிந்தருடைய உபதேசங்களின் சாராம்சத்தை அறிந்துகொள்ள விரும்புவோருக்கெல்லாம் துணையான ஒரு தமிழ் நூல்.

**திருக்கழுக்குன்றக் கோவை:** பதிப்பித்தவர்: எஸ். கலியாண சுந்தரையர். கிடைக்குமிடம்: 'தியாகராஜ விலாசம்', திருவட்டீசுவரன் பேட்டை, சென்னை. விலை ரூ. 2—0—0.

கோவை என்பது அகப்பொருள் துறைகளை அமைத்துக் கோக்கும் பிரபந்த வகையாகும். திருக்கழுக்குன்றப் பெருமானின் மகிமை விளங்குமாறு, இந்தக் கோவை பாடப்பெற்றுள்ளது. அந்த ஸ்தலத்திலே, மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் காலமான ஞாபகமாக, அவருடைய குமாரர், இதனை முதன் முதலில் பதிப்பித்திருக்கிறார். இந்தப் பிரபந்தம், இராமநாதபுரம் வித்துவான் சோமசுந்தரக் கவிராயரால், பல வருஷங்களுக்கு முன் பாடப்பெற்றதாகும். அணிகள் நிறைந்து செவிக்கினிய இசைத் தமிழில், இந்தப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. ஓரளவு தமிழ் பயின்றவர்க்கு மிக்க உதவியாயிருக்கத் தக்கவாறு, அரும்பத விளக்கக் குறிப்புரை சேர்க்கப்பட்டிருக்கிறது. மிக நல்ல பதிப்பு.

**மிதிலைச் செல்வி:** ப. நீலகண்டன். வெளியிட்டோர்: கலைவாணிக் கழகம், புதுக்கோட்டை. விலை: ரூ. 1—8—0.

கோசலைச் செல்வனான ராமன், 'தரம் பிறர் இன்மை உன்னித் தருமமே தூது செல்ல,' மிதிலைச் செல்வியான சீதாதேவியை மணக்கப் போகிறான். அதுகண்ட பூரிப்பால், மாடமாளிகை மீது நின்ற மணிக் கொடிகள் எல்லாம், 'அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின்' ஆடுகின்றன. வான்மீகியின் சீதா கல்யாணம் வீரனடைந்த பரிசிலாகும். கம்பரின் சீதையோ, காதல் மணம் செய்துகொள்கிறாள். 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.' பிறகுதான் வில் முறிக்கும் சம்பவம். அந்தச் சந்திப்புக் காட்சியை அற்புதமாய் வர்ணித்திருக்கிறார் கம்பர். வில்லெடுக்கும் வரையுள்ள அந்தப் படலங்களை, சுவை நிரம்பிய கம்பனின் பாடல்களைக் கொண்டே, ஆசிரியர் மிக அழகாக விளக்குகிறார். வசன நடையிலே தெளிவும், அரும்பத விளக்கமும் இருப்பதால், யாவரும் எளிதிலே படித்து இன்புறக் கூடியதாயிருக்கிறது.

**சத்திய வேட்கை:** ஆசிரியர்: ஆலிவ் ஷ்ரீனர். தமிழில் வெளியிட்டோர்: சக்தி காரியாலம், ஜி. டி. சென்னை. விலை: அணா ஆறு.

மனித லட்சியத்தைச் சித்தரிக்கும் ஓர் உவமைக் கதை. மனித வேடன் சத்தியப் பறவையை வலை வீசிப் பிடிக்க முயல்கிறான்.

**இந்தப் பகுதியில் மதிப்புரை செய்யப் பட்டுள்ள புத்தகங்கள் யாவும் 'சக்தி' காரியாலயத்திலும் விற்பனைக்குக் கிடைக்கும்.**

படுமோ? தேடித்தேடி யலேகிருன்; தியாக மெல்லாம் புரிகிருன்; துன்ப மெல்லாம் படுகிருன். உயிர் துறக்கும் வேளேயிலே, சத்தியப் பறவையின் ஓர் இறகு அகப்படுகிறது. அதுவே அவனுக்குப் பேரானந்தம் அளிக்கிறது. இந்த ஆச்சரியமான கதையை, பிரத்யட்ச நிகழ்ச்சி போல அழகாய் வரைந்திருக்கிருர் ஆசிரியர். தட்டாத இனிய தமிழ் மொழி பெயர்ப்பு.

**நாடகமே உலகம்:** ஆசிரியர்: நாடோடி. கிடைக்குமிடம்: தமிழ்ப் பண்ணே, தியாகராய நகர், சென்னே, விலே: ரூ. 1—4—0.

படிக்கப் படிக்க நகைப்பூட்டும் பதினெட்டுக் கதை, கட்டுரைகள் இதில் அடங்கியிருக்கின்றன. நம் கண் முன்னே நித்தமும் நிகழும் காட்சிகளே, ரஸமான முறையில் சித்தரிக்கிருர் ஆசிரியர். அவருடைய விகடத்திலே விஷயமும் நிறைந்திருக்கிறது. நாடகமேடையின் அபத்தங்களே, முதற்கட்டுரையை விட அழகாய் விளக்க முடியாது. பரிட்சையில் தேருத பையன், படிக்க நேரமில்லாத காரணங்களேச் சொல்லும் போது நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. ஆனுல், அதில் எல்லாம் எவ்வளவு உண்மையிருக்கிறது! கம்பர் குறை தீர்ந்த படலம், மாணவர்களின் ஓர் அசட்டுத்தனத்தைக் கண்டு நாம் நகைக்கச் செய்கிறது. இவ்வாறே ஒவ்வொரு கட்டுரையுமே பொருளும் சுவையும் நிறைந்திருக்கிறது.

**பசி:** ஆசிரியர்: க. நா. சுப்ரமண்யம். வெளியிட்டோர்: ஜோதி நிலேயம், திருவல்லிக்கேணி, சென்னே. விலே: ரூ. 1—12—0.

பசி என்ருல், சோற்றுப் பசியை ஆசிரியர் வர்ணிப்பதாக, யாரும் அஞ்ச வேண்டியதில்லே; ஏமாற வேண்டியதுமில்லே. ஆத்மப் பசி, கலேப் பசி, காதல் பசி ஆகிய எத்தனேயோ பசிகள் உண்டல்லவா? கதாநாயகனுக்கு, ஆத்மப் பசி; கதாநாயகிக்குக் காதல் பசி. இருவருக்கும் கல்யாணமாகி விடுகிறது. "சாமா விடவில்லே; உண்மையில் அது அவனுடைய கல்யாணத்தில் தான் ஆரம்பமாகிறது" என்று, முன்னுரையிலே ஆசிரியர் எச்சரிக்கிருர். எனவே, இந்த நாவலேத் தொடர்ந்து, இன்னும் பல பகுதிகளே அவர் எழுதப் போகிருர் என்று ஊகிக்கலாம். ஒரு மனிதனுடைய குணவளர்ச்சிச் சித்திரத்தை, அவனுடைய வாழ்க்கை யனுபவங்களோடு ஒட்டி வரைய, அவர் முயல்கிருர். இந்தப் 'பசி' அதில் முதல் படலமாகும். எழுதியிருக்கிற வரையில், ரஸமாகத்தான் இருக்கிறது.

**வாழ்க்கைச் செல்வம்:** வெளியிட்டோர்: யுனேடெட் இந்தியா லேப் அஷ்யூரன்ஸ் கம்பெனியார், எஸ்பிளனேட், சென்னே. விலே: ரூ. 1—8—0.

வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதிய பத்துச் சிறுகதைகள் அடங்கியுள்ள பிரசுரம் இது. கதைகள் அனேத்தும், 'இன்ஷியூர்' செய்து கொள்வதன் அவசியத்தை, நேர்முகமாக விளக்குகின்றன. எல்லாம் ருசிகரமாகவே யிருக்கின்றன. முக்கியமாக, 'அன்பின் வெகுமதி' என்ற கதையைக் குறிப்பிட்டாக வேண்டும். அது மிக்க கலேச் சுவையோடும் உருக்கமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அதில் 'இன்ஷியூரன்ஸ்' விஷயம் கடைசியிலே சுருக்கமாக, இயற்கையான முறையில், பிரஸ்தாப மாகிறது. வெறும் விளம்பரமாக இல்லாமல் நல்ல எழுத்தாளர்களே அழைத்து, அழகான சிறு கதைகளே எழுதச் செய்து, அவைகளேத் தொகுத்துப் புத்தகமாக இந்தக் கம்பெனியார் வெளியிட்டது, ஒரு நல்ல முயற்சியாகும்.

**நிழல்கள்:** ஆசிரியர்; சீனிவாச ராகவன். வெளியிட்டோர்; சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னே. விலே: ரூ. 1—8—0.

வாழ்க்கையிலே, தேக இச்சையால் ஏற்படும் பற்பல சிக்கல்கள்—விடுவிக்க முடியாத சிக்கல்கள்—இந்த நாடகத்திலே திரண்டு நிற்கின்றன. பழைய பாவ நிழல்கள், அனே

உண்டாக்குகின்றன. பாத்திரங்களின் குணதிசயங்கள் ஜீவனுள்ள முறையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நடிப்பதற்கு மட்டுமல்ல; படிப்பதற்கும் சிறந்த நாடகம்.

**கீதா யோகம்:** (2-ஆம் பாகம்) ஆசிரியர்: யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: பாரத சக்தி நிலயம், புதுச்சேரி. விலை ரூ. 2—4—0.

பகவத் கீதையின் 283-ஆவது சுலோகம் தொடங்கி, முடிவு வரையில், குறிப்புக்களும் மூலமும் பொருளுமாய் ஆசிரியர் விரிவுரை செய்துள்ளார். அவருடைய வியாக்கியானக் குறிப்புகள், தற்கால நிலைமைகளை அனுசரித்த முறையில், அமைந்திருக்கின்றன. தெளிவாயும் அழகாயும் இனிய தமிழில், கீதா சாஸ்திரத்தை அவர் விளக்குகிறார். கீதை ஓர் அபூர்வ நூல். அதற்கு எத்தனையோ மகான்களும் புத்திமான்களும் எவ்வளவோ விதமாய் உரை செய்திருக்கிறார்கள். அவை அனைத்துமே நல்ல ஆத்ம பொக்கிஷங்களாகும். சுவாமி சுத்தானந்தரின் விரிவான இந்த உரையும், தமிழர்களுக்குப் பெரிதும் பயனுடைத்தாகும்.

**எனது ராஜிநாமா:** ஆசிரியர்: சொக்கலிங்கம். வெளியிட்டோர்: கமலா பிரசுராலயம், 157, பிராட்வே, ஜி. டி., சென்னை. விலை அணா 10.

தாம் 'தினமணி'யை விட்டு விலக நேர்ந்த காரணங்களை யெல்லாம்—பழைய கதைகள் உள்பட—ஆசிரியர், முதற் கட்டுரையில் சாங்கோபாங்கமாக விளக்குகிறார். ஆரம்பத்திலிருந்தே தமக்கும் முதலாளிக்கும் வந்த சில தகராறுகளையும் விவரிக்கிறார். பின்னால் உள்ள மற்ற மூன்று கட்டுரைகளும் பொதுவானவை. எழுத்தாளர்களுக்குள்ளே ஒரு கட்டுப்பாடு வேண்டியதன் அவசியத்தையும், தமிழை வளர்க்கத் தமக்குத் தோன்றிய சில முறைகளையும், அவைகளில் அவர் கூறுகிறார். அனுபவம் மிகுந்த ஓராசிரியர் தெரிவிக்கும் கருத்துகளை, மதிப்புடன் அனைவரும்—முக்கியமாய் எழுத்தாளர்கள் எல்லாரும்—படித்துச் சிந்திப்பது நன்மையாகும்.

**துயரம் எதற்கு?**

"பிறந்தவன் சாவதுறுதி யென்றால், செத்தவன் பிறப்பதுறுதி யென்றால், இந்த விலக்க முடியாத விதிக்கு நீ விசனப்படுதல் தகாது.

"பாரதா, உயிர்களின் தொடக்கம் கண்ணுக்குப் புலப்படவில்லை; நடுவிலே அவை புலப்படுகின்றன; இறுதியில் மீண்டும் புலப்படாமல் போகின்றன. இதில் துயரப்படுவதற்கு என்ன இருக்கிறது?"

—கீதையில் கண்ணன்.

**விவேகானந்தம்:** ஆசிரியர்: யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை: ரூ. 1—0—0.

சுவாமி விவேகானந்தர், அமெரிக்கா சென்று, சிக்காக்கோ நகரில் அற்புதமான பிரசங்கம் புரிந்து, வெற்றி வாகை சூடிய பிறகுதான், அவர் புகழ் உலகெங்கும் பரவியது. அந்தத் திக்விஜயத்தை, ஒரு செந்தமிழ் நாடக ரூபமாக, ஆசிரியர் புனைந்துள்ளார். இந்த வரலாற்றின் நடுநாயகமாக விளங்குவது, சிக்காக்கோ பிரசங்கம் தான். அது ஹிந்து மத சாரத்தை அருமையான முறையில், பரவச மூட்டத் தக்க வகையில், எடுத்துக் கூறுவதாகும். நாடகத்தினிடையே அந்தப் பிரசங்கத்தை, நேர்த்தியான நடையில், ஆசிரியர் தமிழ்ப் படுத்தியுள்ளார். நடிப்பதை விட, படிப்பதற்குப் பெரிதும் ஏற்ற நூல்.

**சுதந்திர முழக்கம்:** ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை. விலை: ரூ. 1—4—0.

சர்மா கூறுவதைப்போல, 'அறிவுக்குத் தாய்; அன்புக்கு ஊன்றுகோல்; தியாகத்துக்குப் பரிசு.' கூட்டிலடைப்பட்ட ஒரு கிளிகூட, சதா தன் சுதந்தரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மனிதன் மட்டில் பந்தப் படலாமா? உலகத்திலே எத்தனையோ சுதந்தரப் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. எத்தனையோ மகான்களும் வீரர்களும், மந்திரச் சொற்கள் போல, சுதந்தர முழக்கம் செய்திருக்கிறார்கள். அந்த வசனங்கள் பலவற்றைத் திரட்டி, மகா விறுவிறுப்பான நடையில், எளிய தமிழில், சர்மா மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். வசனங்களைச் சொன்னவரின் யெயர்களை, அவர் தரவில்லை. பெயர்கள் எதற்கு; பொருளன்றோ முக்கியம்? இந்த வாசகங்களைப் படிக்கும் எவர் உள்ளமும் உணர்ச்சிக் கொந்தளிப்பு அடையாமல் இராது.

**காளியின் கண்கள்:** ஆசிரியர்: து. ராமமூர்த்தி. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ. 2—0—0.

சிறு கதை என்றால் என்ன? 'கதாஸ்வாரஸ்யம் எவ்வளவு அவசியமோ அப்படியே கருத்தும் அவசியம்' என்கிறார் முன்னுரையில் ஆசிரியர். இந்தப் புத்தகத்தில் உள்ள பதினேழு கதைகளும் அவர் கூறும் லட்சணங்களைக் கொண்டிருக்கின்றன என்று நிச்சயமாய்ச் வெவ்வேறு நிலைகளையும் அம்சங்களையும் பற்றிய கதைகள் இவை. 'கப்பல் தலைவன் காதலி,' 'மரப்பாச்சி' போன்ற அரிய காதல் சித்திரங்களைப் போலவே, 'சாந்தி', 'சாம்பு' போன்ற குழந்தை உள்ளச் சித்திரங்களும் உருக்கமாயிருக்கின்றன. துளிக்கூட விரசம் தட்டாமல் இயல்பாய் ஓடுகிறது, இந்தக் கதைகளின் கதி. சிறப்பான கதைகள்.

**இளங்கோ அடிகள் சமயம் யாது:** ஆசிரியர்: டி. எஸ். ஸ்ரீபால். வெளியிட்டோர்: மகா வீர ஜைன சங்கம், தஞ்சை. விலை: அணா 4.

சிலப்பதிகாரம் என்ற அற்புதமான தமிழிலக்கியச் செல்வத்தைப் படைத்த ஆசிரியர் இளங்கோ அடிகள். அவருடைய சமயம், சைவமே என்று சிலர் கூறும் வாதத்தைக் கண்டித்து, அவருடைய மதம் ஜைனமே என்று ஸ்தாபிப்பதற்காக, இந்தச் சிறு நூல் எழுதப் பட்டிருக்கிறது. புராதன இலக்கிய ஆசிரியர்களின் சமய ஆராய்ச்சிகளைப் புரியும் போது, ஆராய்ச்சியாளர் தம் மதப் பற்றையெல்லாம் கொண்டு புகுத்திவிடலாகாது; சரித்திரக் கண் கொண்டே ஆராயவேண்டும். இச் சிறு நூலின் ஆசிரியரும் சுய மதப் பற்றினால் கொஞ்சம் ஆத்திரமே காட்டுகிறார். என்றாலும், அவர் கூறும் ஆதாரங்களும் வாதங்களும் சிந்திக்கத் தக்கவை யாகும்.

*

88840

## யாத்திரைத் திட்டம்

ஒவ்வொரு வருஷமும் ஐரோப்பிய யாத்திரை செய்து வந்த ஒரு நண்பரைப் பற்றி ஒரு விசேஷத்தை அமெரிக்க அறிஞன் எமெர்ஸன், தமது டைரியில் குறித்திருக்கிறார்.

யாத்திரை நண்பர், யாத்திரையில் தமக் கேற்படக் கூடிய சகல செல வினங்களையும் துளியும் விடாமல் கணக்கிட்டு, ஒரு திட்டம் தயாரித்துவிடுவாராம். 'திருட்டுக் கொடுக்க இவ்வளவு பணம்' என்றும் அவைகளில் ஓர் இனம் காணப்படுமாம். ஆதலால், அந்த யாத்திரிகரின் சகல யாத்திரைகளும் பண சம்பந்தமான மன வருத்தம் இல்லாமல் சந்தோஷமாகவே முடிந்தனவாம்.



டார்ஜீலிங் அருகில் தேயிலை விதைத்தல்

# ஆரம்பத்தில்

வளர்க்கப்படும் செடிகளைப்போல் தேயிலையும் விதையிலிருந்து வளர்க்கப் படுகிறது.

இந்தியாவின் உன்னத பூமியில் ஏற்ற சீதோஷ்ண நிலையுள்ள பிரதேசங்களில் இந்த விதைகள் சீக்கிரமாகவும், நேர்த்தியான சிறு செடிகளாகவும் வளருகின்றன. பண்படுத்தப் பட்ட பூமியில் விதைகள் ஒவ்வொன்றாக விதைக்கப் படுகிறது. இவைகள் சிறு செடிகளாக வளர்ந்தவுடன், பெரிய தோட்டங்களுக்கு மாற்றப் படுகின்றன. இதன் மூலம் அத் தோட்டங்களில் வளர்ந்த செடிகளிலிருந்து கிடைக்கும் இளந் தளிர்களின் சரக்குபடி குறைவு படாமலிருக்கிறது.

மூன்றிலிருந்து ஐந்து வருஷங்களில் இந்த சிறு செடிகளின் கூட்டம் தேயிலை பறிக்கும் பக்குவமடைகிறது. பிறகு வெகு சீக்கிரம் நமது ஏராளமான கிடங்குகளுக்கு புதிய வாசனையுடைய தேயிலை வந்து சேருகிறது.

# ப்ரூக் பாண்ட்

# யுத்த காலத்தில் மிகச் சிறந்த முதலீடு

முன் யோசனையுள்ள ஒவ்வொருவரும் பணத்தை இன்று சிறுகச் சிறுகவாவது சேமிக்கிறார்கள். இப்படிச் சேர்த்து வைத்த பணத்தை முதலீடாகப் போட்டு வைக்க விரும்புவது இயற்கையே. இச்சமயத்தில்தான் விஷயந் தெரியாதவர்களுக்கு, தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் முதலியவற்றில் முதலிடக் கூடாதென்று எச்சரிக்கை செய்யவேண்டும். ஏன்? விலைவாசிகள் இறங்கிக் கொண்டே வருகின்றன. இன்றைய விலையில் வாங்கினால் வெகு சீக்கிரத்தில் நஷ்டமடைய **நேர்ந்தாலும் நேரலாம்,** எப்படியும் யுத்தத்திற்குப் பிறகு நஷ்டமடைவது **நிச்சயம்.**

உங்கள் சேமிப்பைக் கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்குவதுதான் மிகச் சிறந்த முதலீடு என்பதில் சந்தேகமே வேண்டாம். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு, அதற்கு உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15. இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம். நாஷனல் ஸேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் மதிப்பு குறையவே குறையாது. மேலும் முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு, எப்பொழுது வேண்டுமானாலும் அவற்றைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

**உங்கள் சேமிப்பைக் கொண்டு**

## நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

**வாங்குங்கள். பணம், பத்திரமென்ற உறுதியுண்டு.**

## இன்றே தொடங்குங்கள்!

**பதிவு செய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு.**

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலும் சரி தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**ஸேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும்**

**நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.**

C.P.U. 414.

# வெய்யில் காலத்தில்

உங்களுடைய மூளையையும் உடலையும்

## டி. எஸ். ஆர். & CO. வின்

அரைக்கீரை

✲ சந்தனாதி ✲

பிரிங்காமல

தைலங்களினால் குளிரச் செய்யுங்கள்

T. S. R. & Co. ( வாசனை வியாபாரம் ) கும்பகோணம்

சோல் ஏஜண்ட்ஸ்

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**

| பைகிராபிட்ஸ் ரோடு<br>திருவல்லிக்கேணி,<br>மதராஸ். | சௌத் இந்தியன் ஏஜன்ஸிஸ்,<br>(ஸ்டாக்கிஸ்ட் கோயம்புத்தூர்)<br>பாலக்காடு. |
|---|---|

---

மின்னொளி பிரசுரம்

அன்றாட உலக நிகழ்ச்சிகளை ஆராய்ச்சித் திறத்துடன் விளக்குவன.

ராஜாஜி

எழுதிய

# அரசியல் விமோசனம்

மின்னொளியின் முதல் வெளியீடாக டிசம்பர் மூன்றாவது வார ஆரம்பத்தில் வெளிவருகிறது. அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் முதல் வார ஆரம்பத்திலும், மூன்றாவது வார ஆரம்பத்திலும் வெளிவரும்.

**தனிப் பிரதி விலை அணா எட்டு.**

தபால் செலவு தனி.

எல்லா இடங்களிலும் டெபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

## மின்னொளி புத்தகாலயம்

31, பவழக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.




லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.




போன் : 218-A — தந்தி : "ராஜா" — Post Box 139




# ஊக்கத்துக்கு உயர்துணைவன்

எல்லோராவில் கைலாசநாதர் கோவில்களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டுகள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊ மளித்த சக்தி எது என்பது உங்களுக்குக் . டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் லக்ஷயம் தெய்வ கலையை அங்கே பெருகிறது நமது அன்றாட வாழ்விலும் அது மானுஷீக எல்லையை மீறுகிறது. பெண் அன்போடும் பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்போல் அதிசயம் வேறு என்ன? நாள் பூராவும் உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும் கணவனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் தயாரித்துக் கொடுப்பதுபோல் திருப்தி அளிப்பது வேறு என்ன? அன்பு தளும்பும் கோப்பை அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அவன் மனமும் கலகலக்கிறது.

★

“நித்திய கர்மா” என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.





## குடும்பத்திற்கு ஏற்ற ஒரே பானம்

# இந்தியன் டீ





இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202



Printed & Published by Vai. Govindan at Shakti Press Ltd., 31, Coral Merchant St. G. T., Madras. Managing Editor : Vai. Govindan—Editor : T. J. Ranganathan (P. A. S)